ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௬	மெய்கண்டான்யாண்டு-௭௱௫ ஆனித்திங்கள் 1928௵ ஜூன்௴—ஜூலை௴	பரல் ௬

திருச்சிற்றம்பலம்

கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே.

அப்பர்.

உரை :

சுவை ஒளி ஊறு முதலான பல புலன்களாலும் நுகர்ந்துணரப் படுங் கனியினைப் போன்ற, குளிர் மலர்க் குழலையுடைய பாவைபோலும் மாதராரினும்; சுவைப்புலனொன்றற்கே இன்பந்தருங் கட்டிபட்ட கற்கண்டுபோன்ற அரசச் செல்வத்தினுந் தன்னைப் புகலடைந்த அன்பர்க்குத் திருவிடைமருதூரிறைவன் இனியனென்பது.

கனிபோலும் நல்லாரினுங் கரும்புபோலும் அரசினும் இடைமருதன் இனியனென்க. உவமைப் பொருள்களைக் கருத்துரைப் பொருள்கள்போலவே அவற்றோடிணைத்துக் கூறும் இத்தமிழியல் வழக்கினைக்

"குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம்விற்றுக் கொள்ளுந் திருவுந்—தவம்விற்றூங்
கூனோம்பும் வாழ்வு முரிமைவிற் றுண்பதூஉந்
தானோம்பிக் காத்த றலை"

என்னும் நீதிநெறிவிளக்கச் செய்யுளிற் காண்க. இனிக் கனி, கரும்பு, நல்லார், அரசு என்னும் நான்கினையுமே ஒப்புக் கூறப்படும் பொருள்களாகக்கொண்டு முன்னிரண்டினைப் பின்னிரண்டிற்கு உள்ளுறை யுவமமாகக் கூறலுமாம்.

குமரகுருபர அடிகள்*

[திரு கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M. A., M. L.]

குமரகுருபர அடிகள் ஏறக்குறைய ௩௱ ஆண்டுகட்கு முன்னே (1600 - 1650 வரை) திருமலைநாய்க்கர் காலத்திலே பாண்டி நாட்டிலே திருக்கயிலாயபுரம் என்று சைவர்களாலும் ஸ்ரீவைகுண்டம் என்று வைணவர்களாலும் போற்றப்பெறுந் திருப்பதியிலே தோன்றியருளி ஐந்தாமாண்டிலே திருச்செந்தூர் முருகப்பெருமான் திருவருள்பெற்று இமயமுதல் குமரிவரையுள்ள நாடெங்குஞ் சைவசமயத்தை நிலைநாட்டிக் காசியிலே மகமதிய மன்னருந் தமது அருட்பெருமையுணர்ந்து அளவற்ற நிலமும் பொருளும் நன்கொடையாகக் கொடுக்கப்பெற்றுத் திருமடம் நிறுவிப் பெரும் புகழ்படைத்த அருட்பெருந்தகையாராவர். சைவத்தையுந் தமிழையும் வளர்ப்பதற்காகச் சோழநாட்டில் ஏராளமான நிலம் அக்காலத்திய மன்னர்களாலுஞ் செல்வவான்களாலும் விடப்பட்டமையால், திருப்பனந்தாளிலே ஓர்கிளைமடம ஏற்பட்டது. காசியில் தலைமையான பெருமடமுந் திருப்பனந்தாளில் அதற்குக் கிளையும் அமைந்தமையால் தொடக்கத்திலே குமரகுருபர அடிகள் பரம்பரையில் வந்த தம்பிரான்கள், காசியிலே நிலையாக வதிந்து வந்தனர். பிற்காலத்திலே திருப்பனந்தாளே தலைமடமாயிற்று. திருப்பனந்தாளில் தலைமையாக வீற்றிருக்குந் தம்பிரான்கள் தங்கள் முன் வழக்கத்தை யொட்டிக் 'காசி' 'வாசி' என்று கையெழுத்திடுவாராயினர். குமரகுருபர அடிகள் பிறந்து வளர்ந்த இடத்தைக் கருதினால் காசி, திருப்பனந்தாள் என்னும் இரண்டிடத்திலு முள்ள திருமடத்தின் பெருமையையும் பொருநை யாற்றுக் (தாமிரபரணி) கரையிலுள்ள பாண்டிநாட்டுத் தமிழ்நன்மக்கள் யாவருந் தங்களுக்கு உரியனவென்றே பாராட்டி மகிழ்தல் தக்கதே.

குமரகுருபர அடிகள் திருமடத்தின் பொருள்கள் அனைத்தும் அடிகளின் திருவுள்ளக் கருத்திற் கேற்பவே பயன்பட

---

* இது திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தின் ஆதரவில், சித்திரைத் திங்கள் ௨௬-ம் நாள் நடைபெற்ற குமரகுருபர அடிகள் விழாவன்று செய்த தலைமையுரை.

வேண்டும். குமர குருபர அடிகள் நூல்களை நாம் ஆராயு மிடத்து அவர்களது அளவற்ற தமிழ்ப்பற்றுஞ் சைவ சித்தாந்த அழுத்தமுஞ் சிவனடியார் அன்புமே அவைகளிற் பொங்கித் ததும்பி மிளிர்கின்றன வென்பது யாவரும் எளிதில் அறியக்கூடியதே. அவர்களுடைய கவின்மிகுந்த பாவின் கற்பனை நயம் யாவரும் வியக்கத்தக்கது. அவர்களுடைய திருப்பாடல்களிலே அவர்களுடைய பெருந்துறவும் நன்கு புலப்படுகின்றது. ஆதலின் அவற்றைப்பற்றி ஈண்டு ஒரு சிறிது எடுத்துக் கூறுதும்.

அடிகள் தாம் முதலிற் பாடிய கந்தர் கலி வெண்பாவில் சைவசித்தாந்தக் கருத்துக்களனைத்தும அழகாகத் தொகுக்கப்பட்டுள்ளன அந்நூலானது சைவச் சிறுவர் யாவராலும் பாராயணஞ் செய்வதற்குரியது. கலிவெண்பாவின் இறுதியிலே

எழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து-ஒழுக்கமுடன்
௯௨௰ இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கண் மோசித்துத்-தம்மைவிடுத்
தாயும் பழைய வடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச-சேய
௯௨௨ கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்
டடியேற்கு முன்னின் றருள். (கந்தர் கலிவெண்பா)

என்றமையாற் செவ்விய தமிழ்ப்புலமையும் நல்லொழுக்கமும் மும்மல நீக்கமும் அடியாரிணக்கமும் இறைவன் திருவடிப் பேறுமே எல்லாவற்றினுஞ் சிறப்பாக இவர் கடவுள்பால் வேண்டினரென்பது தெளியப்படும். இவற்றைக் குறிக்கோளாகத் தமிழ் நன்மக்கள் யாவருங் கடைப்பிடித்து ஒழுகும் வண்ணஞ் செய்யவேண்டிய முயற்சிகளுக்கே இவரது பெருஞ் செல்வம் பயன்பட வேண்டுமென்பது திருமடத்துத் தலைவர்கள் அருள்கூர்ந்து தமது திருவுள்ளத்திற் பதியப்பெறுதற் குரியர்.

அடிகள் தமிழ்ப்புலமையையே இறைவன்பால் வேண்டினரன்றிப் பிறமொழிப் புலமையைச் சிறப்பாக வேண்டிற்றிலர். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் காப்பில் 'சொற்றமிழ் தழையவே' என்பதுங் காண்க. அதனுள் திருமால்வணக்கச் செய்யுளிற்

'பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங் கொண்டலே'

என்றவிடத்துத் திருமால் கன்னித் தமிழ்ப்பாட்டின் நயங்களைத் துய்ப்பான் அதற்குப் பின் செல்ல, அத்திருமாலைத் தேடி முறையிட்டுக்கொண்டு மறைகள் பின்சென்றன என்று குறித்தனர். இன்றும் பெருமாள் கோவில்களிலே கடவுள் எழுந்தருளும் பொழுது கடவுளுக்கு முன்னே தமிழ் மறையாகிய **திருவாய்மொழி** பாடுவோர் செல்லுதலும், கடவுளுக்குப் பின்னே **ஆரிய வேத** பாராயணஞ் செய்வோர் செல்லுதலுங் கண்கூடாகக் காணலாம். காஞ்சி நகரத்தில் பள்ளிகொண்ட பெருமாள் ஓர் ஆழ்வார் வேண்டுகோட்கிணங்கி அவர் பின்னே தமது பாம்புப்படுக்கையைச் சுருட்டித் தோளில் வைத்துக்கொண்டு சென்றார் என்ற கதையும் இதனை வற்புறுத்தும். **கலைமகள் வணக்கத்திலே,**

> 'தெள்ளித் தெளிக்குந் தமிழ்க்கடலி னன்பினைந்
> திணையென வெடுத்த விறைநூற்
> றெள்ளமுது கூட்டுணுமோர் வெள்ளோதிமம்'

என்று கலைமகளைச் சிறப்பித்தனர். இதனாற் கலைமடந்தைக்கும் இத்தமிழமுதமானது மிக இனியதென்பதை ஆசிரியர் குறித்தவாறுங் காண்க. **செங்கீரைப் பருவத்தின்** முடிவில் மதுரைக்கு அடைமொழியாகத் 'தெளிதமிழ்' என்றது காண்க. அது வருமாறு:- 'தெளிதமிழ் மதுரையில் வளருமொரிளமயில்' 'தமிழ்மதுரைக் கரசே' (தாலப்பருவம்).

தென்றற் காற்றுத் தோன்றிய காலந் தொட்டே தமிழும் இந்நாட்டில் வழங்கி வருகின்றதென்று அதன் தொன்மையைக் குறிப்பானுணர்த்துவார் 'தென்னன் றமிழினுடன் பிறந்த சிறுகாலரும்ப' (தாலப்பருவம்) என்றார். அங்கயற்கண்ணம்மையார்க்குந் தமிழிற்குமுள்ள அநாதித் தொடர்பை யுணர்த்துவார், 'தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்த கொடிசப்பாணி கொட்டியருளே' (சப்பாணிப்பருவம்) என்றார். தமிழினை வளர்த்தற் பொருட்டுக் கூடலம்பதியில் அங்கயற்கண்ணம்மை வீற்றிருந்தாள் என்பார். 'தெய்வத் தமிழ்க்கூட றழைய தழைத்தவள்' (முத்தப்பருவம் செ - கூ) என்றார். தமிழின் தெய்வத்தன்மையையும் இங்கே உணர்த்தியது காண்க. பழந்தமிழ்ப் பாவினைப் பெரியதொரு பாற்கடலாகக் கருதி அப்பாற்கடலிற் பிறந்த ஒப்பற்ற திருமகள் என அங்கயற்கண்ணம்மையைச் செப்பினமை மிகவும் பாராட்டத் தக்கது. அது வருமாறு: 'முதுதமி ழுததியில் வருமொரு திருமகள்' என்றார். செந்தமிழ்ப் பனுவல்களைத் தமிழ்ப்பாற் கடலின் றுறையாக உருவகித்து அத்துறைக்கட்படியும் அழகிளம்பிடியாக உமை

யம்மையைப் புனைந்துரைப்பார், 'மதுர மொழுகுங் கொழி தமிழ்ப் பனுவற் றுறைப்படியு மடநடைக் கூந்தலம் பிடி' (வருகைப்பருவம் செ-௨.) என்றார். தெய்வத் தமிழ்ப் பாடலின் பயனாக இறைவனையும் இறைவியையும் ஆசிரியர் சிறப்பித்தனர். 'தொடுக்குங் கடவுட் பழம்பாடற் றொடையின் பயனே (வருகை செ.௬) என்றும், தலைச்சங்கம் பொங்கும் பண்முத் தமிழ்க்கோர் பயனே சவுந்தர பாண்டியனே' (மதுரைக்கலம்பகம், செ-௪௩) என்றுங் கூறியது காண்க. குமரப்பெருமானைக் கூறுங்கால் 'சங்கத் தமிழின் தலைமைப் புலவர்' 'தோலா முத் தமிழ் நாவர்' 'கொழிதமிழ் வேதபுரிக் குமரேசன்' 'மும்மைத் தமிழ் தேர் கந்தபுரி முருகா' என நவின்றனர். தமிழின் இனிமையை இவர் கூறியதுபோல் எப்புலவருங் கூறவில்லை. தமிழின் சுவை இறைவனது அருளே யென்பார், 'நறை பழுத்த துறைத்தீந் தமிழி னொழுகு நறுஞ் சுவையே' என்றார். பிற மேற்கோள்கள் வருமாறு:—

> 'தேக்கமழ் மதுர மொழுகிய தமிழி னியல்பயில் மதுரை
> மரகத வல்லி'
> 'மதுரித் துவட்டெழு
> முத்தமிழ் தேர்தரு மதுரைத் தலத்துறை
> முத்தனமேவு பெண்ணரசு' (மீனாட்சி பிள்ளைத்தமிழ்)

> தருசுவை யமுதெழ மதுரம தொழுகு
> பசுந்தமிழ் மாலை நிரம்பப் புனைந்தன
> தளரியன் மலைமகள் வரிவளை முழுகு
> தழும்பழ காக வழுந்தக் குழைந்தன
> தளர்நடை யிடிமிள மதலையின் மழலை
> ததும்பிய வூற லசும்பக் கசிந்தன
> தமிழ்மது ரையிலொரு குமரியை மருவு
> சவுந்தர மாறர் தடம்பொற் புயங்களே'
> (மதுரைக்கலம்பகம், செ-௧௧)

> 'அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுதார்ந்துன் னருட்கடலிற்
> குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ.'

மதுரைக்கலம்பகத்தில் சிவபெருமானும் உமையம்மையாரும் குமரவேளும் திருவாலவாயின்கண் அரசுபுரிந்தமைக்கு ஏது தமிழின் சுவையை நுகரும் வேட்கையே என்று இயம்பித் தமிழ்ப்பெருமையை யாரும அளவிட்டறிய முடியாதென்பதை அடிகள் குறிப்பித் தருளினார்.

'தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்ற
டடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவந் தனிமுத லொருநீ
சவுந்தர மாறனா னதுவுங்
குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரங்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிலிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்' (செ. ௯௨)

என்றது காண்க. தமிழினைச் சிறப்பித்தது போல வடமொழி முதலிய பிறமொழிகளை ஆசிரியர் சிறப்பிக்கவில்லை. ஒரோவோரிடங்களில் அவற்றைத் தமிழ்ப் பெருங்கலைக்குத் துணைக் கலைகளாகவே கூறினர். 'வடகலையல பலகலையொடு தமிழ்வளரும் கூடல்' என்றவிடத்துக் கூடலம்பதியிற் றமிழ் வளருவதையே சிறப்பாய் வைத்து அதற்குக் கீழ்ப்பட்ட நிலையில் வடகலை முதலிய பிறகலைகள் பயிலப்பட்டன வென்பார், அவற்றை 'ஓடு' விகுதி கொடுத்துப் பிரித்தமையேயோர்க. 'மேதகைய பல கலை போர்த்து அறம் வளருந் தமிழ்க் கூடல்' என்றவிடத்தும் இவ்வாறே கொள்க. ஆசிரியரது உள்ளக்கிடையை யறியாது தத்தமக்குத் தோன்றியவாறு அவருடைய பாக்களுக்குப் பொருள்கொண்டு தமிழ்ப்பெருமை போற்றாது பிறவற்றைப் போற்றுதல் எவ்வளவோர் அறியாமை.

ஆசிரியர் அகத்தியனாரை அடிகள் 'தமிழ் முனிவன்' என்றனர். அதனால் அவர் தமிழ்க்கே என்று முரிய பெருமுனிவர் என்று கருதுக. பொதிய மலையே அவர்க்கு 'என்றும் உறைவிடமாம் என்று கம்பர் கூறிய வண்ணம் பொதிய மலையைத் தமிழ் முனிவன் வாழுமலை யென்று நமது அடிகள் சிறப்பித்தார்.

இறைவனை வழிபடுவதற்கு நற்றமிழ் மொழியே போதுமானதென்று ஒரு பாட்டில் அடிகள் குறித்திருப்பதோடு எல்லாமிருந்தாலும் அன்பு இல்லையாயின் இறை வழிபாடு சிறவாதென்பதையும் அழகாக ஓர் திருப்பாட்டினால் அடிகள் அறிவுறுத்தியிருக்கின்றார்கள்.

'நாவுண்டு நெஞ்சுண்டு நற்றமிழுண்டு நயந்துசில
பாவுண் டினங்கள் பலவுமுண் டேபங்கிற் கொண்டிருந்தோர்
தேவுண் டுவக்குங் கடம்பா டவிப்பசுந் தேனின்பைந்தாட்
பூவுண்டு *காரொன் றிலையாந் தொடுத்துப் புனைவதற்கே.'
(மீனாட்சியம்மை யிரட்டை மணிமாலை, செ-௧௬)

*கார்-அன்பு

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் கற்பனைகள் மலிந்துள்ளன. எடுத்துக்காட்டாக ஓர் செய்யுளினை ஆராய்வாம். உமையம்மையார் சிறு வீடு கட்டி விளையாடுவதாகவும், அச்சிறுவீட்டினைப் பித்தனொருவன் அழித்துவிடவும் அவனது ஆட்டத்தில் மகிழ்ந்து அவனை முனியாது மீட்டும் மீட்டுஞ் சிறு வீடு கட்டுவதாகவுங் கூறுமிடத்து, இறைவன் நடாத்தும் முத்தொழிலைப் (படைத்தல் காத்தல் அழித்தல்) பற்றிய **சைவ சித்தாந்தக்** கருத்துக்களை அழகாகத் தொகுத்துரைத்தார்.

'சுற்றுநெடு நேமிச் சுவர்க்கிசைய வெட்டிச்
சுவர்க்கா னிறுத்திமேருத்
தூணொன்று நடுநட்டு வெளிமுகடு மூடியிரு
சுடர்விளக் கிட்டுமுற்ற
வெற்றுபுன லிற்கழுவு புவனப் பழங்கல
மெடுத்தடுக் கிப்புதுக்கூ
ழின்னமுத முஞ்சமைத் தன்னைநீ பன்முறை
யிழைத்திட வழித்தழித்தோர்
முற்றவெளி யிற்றிரியு மத்தப் பெரும்பித்தன்
முன்னின்று தொந்தமிடவு
முனியாது வைகலு மெடுத்தடுக் கிப்பெரிய
மூதண்ட கூடமூடுஞ்
சிற்றில்விளை யாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை
செங்கீரை யாடியருளே' (செ-௧௫)

நெடிதாய்ச் சூழ்ந்து வட்டமாயிருக்கும் அண்டச் சுவராகிய சுற்றுச் சுவரமைத்து எண் பெரு மலைகளாகிய தூண்களை எட்டுப் பக்கங்களிலும் நிறுத்தி மேருவாகிய பெருந்தூணை நடுவில் நட்டு 'அண்டகடாக'மாகிய வெளிமுகடு மூடி ஞாயிறு திங்கள் என்னும் இரு சுடர் விளக்கு அமைத்து முந்நீரிற் கழுவியெடுத்த உலகங்களாகிய பழைய கலசங்களை எடுத்தெடுத்தடுக்கி அக்கலன்களில் உயிர்கள் நுகர்வதற்குரிய இனிய பொருள்களைச் சமைத்து வைத்து அங்கயற்கண்ணம்மை சிறு வீடு கட்டி சிறு சோறு சமைத்து விளையாடுங்காலை, உலகங்களெல்லாங் கடந்த பெரு வெளியில் நிலவும் பித்தனாகிய இறைவன் அவற்றையழித்து ஒடுக்கிவிட்டு மீண்டும் உலகம் உண்டாகும்படி உமையம்மை காணத் திருநடஞ் செய்ய, திருவருளாகிய அம்மை மீண்டும் உலகங்களாகிய சிற்றில்களை வகுத்து வேண்டும் பொருள்களை யமைத்து விளையாடி யருள்கின்றாள் என்னுங் கருத்து இப்பாட்டின்கண் அமைந்துள்ளது.

நீதி நெறிவிளக்கத்தில் அரிய நுண் கருத்துக்கள் அமைந்திருப்பதுடன் அவற்றைச் சொல்லும் அழகிய முறையும் ஒப்பற்றதாகத் திகழ்கின்றது. அயனைச் சிறந்த தமிழ்ப்புலவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது கலைமகளைத் தனது நாவின்கண் உடையனுயிருந்தாலும் அவன் அவர்களுக்கு ஒப்பாகான். ஏனெனில் அவன் படைக்கும் வெற்றுடம்பு நிலையாது அழிவதுபோல் புலவர் படைக்கும் புகழுடம்பு அழியமாட்டாது என்னுங் கருத்துடைய பாட்டு வருமாறு:-

'கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்-மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு' (செ-எ)

யானை தான் உட்கொள்ளுங் கவளமாகிய உணவில் ஒரு சிறிது சிதறிப்போனால் அதற்காக அது வருந்துவதில்லை. அது சிதறிய பகுதியைக் கொண்டு ஒரு கோடி எறும்புகள் தங்கள் கிளைகளோடு உண்டு மகிழும் என்கின்ற கருத்தினைமட்டும் ஓர் செய்யுளில் கூறி, பெருஞ் செல்வர்கள் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பவேண்டுமென்ற அறவுரையை வற்புறுத்துவாராயினர்.

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றூங்குங் களிறோ துயருறா-ஆங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமா
லாருங் கிளையோ டயின்று. (செ-௯அ)

இவர் காட்டுஞ் சில உவமைகள் வெளிப்படையாகத் தோன்றி நுட்பமான நயத்தோடு திகழ்கின்றன. ஒரெடுத்துக்காட்டு வருமாறு:—

'பொதுமகளே போல்வ தலையாயார் செல்வங்
குலமகளே யேனையோர் செல்வங்-கலனழிந்த
கைமையார் பெண்மை நலம்போற் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில். (செ-௯௯)

என்ற விடத்துத் தலைமையாயுள்ளவர்கள் செல்வத்தைப் பொதுமகள் நலத்திற்கும் பிறர் செல்வத்தைக் குலமகள் நலத்திற்கும் ஒப்பிட்டமை சிறப்பிலதாகத் தோன்றும். நுட்பம் யாதெனில், தலைமையுடையார் பொருள் எக்காலத்தும் யார்க்கும் பயன்படும், மற்றோருடைய பொருள் ஒருகாலத்து ஒரு சிறிது சிலர்க்குப் பயன்படும். பொதுமகள் கைமையடைதலில்லை

குலமகள் அத்தகையளல்லள். என்பதே. இங்ஙனங் கூறுமுறை யைச் சிவப்பிரகாச அடிகள் திருமொழியிலுங் காண்க.

'பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசக
மோதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே.' (நால்வர் நான்மணிமாலை)

நகைச் சுவை ததும்புந் திருப்பாடற் பகுதிகள் மக்கள் நினைவில் என்றும் நிலைபெறுதற்குரியன. அவற்றிற் சில வரு மாறு:—

'நாளு நாளு நேடினர் திரிந்துங்
காணு தொழிந்ததை நிற்க நாணு
தியாவரு மிறைஞ்ச விறுமாப் பெய்துபு
தேவரென் றிருக்குஞ் சிலர்பிறர் தவத்தினு
மிகப்பருந் தொண்டரொ டிகலிமற் றுன்னெடும்
பகைத்திறம் பூண்ட பதகனே யெனினு
நின்றிருப் பாத நேர்வரக் கண்டு
பொன்றின னேனும் புகழ்பெற் றிருத்தலி
னிமையா முக்கணெந் தாய்க்கு
நமனுர் செய்த நற்றவம் பெரிதே'
(திருவாரூர் நான்மணிமாலை, செ-௩௨)

'நமனுர் செய்த நற்றவம் பெரி' தென்பதற்குத் தக்க ஏது இயம்பினர். மூவர் முதலிய பலர் வழிபட்டுக் கடவுளுடைய திரு வடியைக் காணுதொழிய அக்கடவுளடியாரொடு பகைத்திறம் பூண்டும் அவருடைய திருப்பாதத்தை நேரிற் கண்டு அதனுற் றீண்டப்பட்டு இறந்தாலுந் தன் வரலாறு எப்பொழுதும் வழங் கும் புகழ்பெற்றன னுதலின் 'நமன் செய்த தவம் பெரிது' என்றார்.

இறைவர் அடியார்க்காகப் பலவகைத் துன்பங்களடைந்து எளிவந்தருளினமையின் அவர் எளியரின் எளியர் போலும் என்ற செய்யுட் பகுதி மிகவும் நயமானது.

'உண்டுமிழ் நீரீ ருவந்தன ராடியும்
விருப்படிக் கொண்ட மிச்சிலூண் மிசைந்துஞ்
செருப்படிக் கடிகள் செம்மாந் திருந்துந்
தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்து

மருந்தமிழ் வழுதி பிரம்படிக் குவந்து
நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
றள்ளாக் காத றணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
ஒருகா லல்ல விருகா னடந்து
மெளியரி னெளிய ராயின
ரளியர் போலு மன்பர்க டமக்கே'

(திருவாரூர் நான்மணிமாலை, செ-௩௬)

பண்டார மும்மணிக்கோவையுள் 'திரிகரணம்' என்ற சொற்றொடர் எல்லார்க்கும் ஒரு பொருள் பயந்தாலுந் தமக்கு இரு பொருள் பயக்குமென்று கூறு முகத்தானே, தமது சிவ நுகர்ச்சியினையு முணர்த்தினர். திரிகரணமென்பது மனம் வாக்குக் காயமாகிய மூன்று கருவிகள் என்றும், பசுகரணம் சிவகரணமாய்த் திரிந்தமையாற் றிரிந்த கரணமென்றும் இரு பொருள் கொள்ளக் கிடந்ததென்றார். தமது அருட்குருவை மன மொழி மெய்களாலும் வழிபட்டு அவை சிவகரணங்களாகத் திரியப் பெற்றமையைப் பின்வரும் அடிகளில் அறிவுறுத்துகின்றார்.

'வாக்கு மனனும் யாக்கையு மொன்றாய்ச்
சொற்றரு கரண மற்றிவை மூன்று
நின்புகழ் நவிற்றிபு நினைத்துநின் றுணைத்தா
ளன்புட னிறைஞ்சியு மின்பமுற் றனவா
லவகர ணங்களே யல்லமற் றம்ம
சிவகர ணங்களாய்த் திரிந்தன வன்றே
அதனால்
திரிகர ணங்களென் றுரைசெயு மப்பெய
ரொருபொருட் கிளவியெல் லோர்க்கு
மிருபொருட் கிளவியா யிருந்ததின் றெனக்கே.' (செ-௨௨)

தம்முடைய அருளாசிரியனுக்கு மாசிலாமணியெனப் பெயர் வருவதற்கு வியக்கத் தக்கதோர் ஏது உரைத்தார். சிவபெருமானே அருளாசிரியன் வடிவாகத் தோன்றினாலுந் தமது மிடற்றிலுள்ள களங்கத்தை மறைத்த ஏதுவாற் களங்கமற்ற ஒளி மிக்க திருமேனியோடு திகழ்ந்தமையால், மாசிலாமணி யென்ற பெயர் தமது ஆசிரியர்க்கு மிகத் தகும் என்ற கருத்தைப் பின்வரும் அடிகளிற் றெரித்தருளினர்.

‘சுடர்விடு செங்கதிர்க் கடவுண்மா மணிக்கு
விளங்கெழின் மிடற்றோர் களங்கமுண் டென்பவக்
காசுலா மலினங் கரந்தகா ரணத்தான்
மாசிலா மணியென வண்பெயர் நிறீஇ
மேன்மையோ டமர்ந்த ஞானசம் பந்த’ (செ-௪)

உவமை கூறுவதில் எளிதிற்றோன்றாத நயங்களை அமைத்துக் காட்டும் ஆற்றல் நமது அடிகள்பாற் சிறந்துள்ளது. சிவபெருமானது திருமுடியைத் தூரத்தே நின்று பார்க்குங்காலைக் கிழத்தட்டான் ஒருவன் தனது உலையின்கண் பொன்னுருக்கி வேலை செய்வதை யொக்கும் என்று குறித்த காலை, எவ்வாறு அங்ஙனமாம் என்று யாவர்க்கும் எளிதில் விளங்குவதில்லை. ஒற்றுமை நயங்களை அடிகள் காட்டுங்காலை அவ்வுவமையின் சிறப்புத் தோன்றும். ஒளிமிக்க செஞ்சடையானது அனலுக்கும், இறைவன் முடியிற்றரித்த கொன்றையானது அவ்வனலிலிட்ட பொன்னுக்கும், அக்கொன்றைப் பூவினைச் சூழ்ந்த வண்டுக் கூட்டமானது உலையிலிட்ட கரித்துண்டுக்கும், கங்கையானது உலையிலிட்ட பொன் பிறழுங் காலையுண்டாம் மின்னொளிக்கும், வெள்ளிய வளைந்த மூன்றாம் பிறையானது பொன் செய் கொல்லனுக்கும் உவமையாமென்ற கருத்து பின்வருஞ் செய்யுளில் விரித்துக் கூறினமை காண்க.

‘தன்னொக்குஞ் செல்வக் கமலைப் பிரான்செஞ்
சடாடவிமற்
றென்னொக்கு மென்னி லெரியொக்குங் கொன்றை
யெரியிலிட்ட
பொன்னொக்கும் வண்டு கரியொக்குங் கங்கையப்
பொன்செய்விக்கு
மின்னொக்கும் பொன்செய் கிழக்கொல்ல னொக்குமவ்
வெண்பிறையே’

(திருவாரூர் நான்மணிமாலை, செ-௩௮)

நம் அடிகள் பெருஞ் செல்வத்திற் பிறங்கியும் அவர்கள் திருவுள்ளமானது கடுந்துறவினையும் ஈசன் றிருவடிக் கமலத்தையுமே பற்றுக்கோடாகப் பற்றி நின்றது என்பது அவர்கள் இறைவன்பாற் குறையிரந்த வேண்டுகோட் செய்யுட் பகுதியானினிது விளங்கும்.

பெருங்குளிர்க் குடைந்த காலைக் கருந்துணி
பலதொடுத் திசைத்த வொருதுணி யல்லது

பிறிதொன் றிடையா தாக வறுமனைக்
கடைப்புறத் திண்ணை யல்லது இடக்கைக்
கிடம்பிறி தில்லை யாகக் கடும்பசிக்
குப்பின் றட்ட புற்கையு ணல்லது
மற்றே ருண்டி வாய்விட் டரற்றினு
மீகுந ரில்லை யாகநா ளுறு
மொழுக்க நிறைந்த விழுப்பெருங் கேள்வி
மெய்த்தவர் குழாத்தொடும் வைக வித்திற
முடனீங் களவு முதவிக் கடவுணின்
பெரும்பத மன்றியான் பிறிதொன்
றிரந்தனன் வேண்டினு மீந்திடா ததுவே.

(சிதம்பர மும்மணிக்கோவை, ௬-எ)

(இதன் பொருள்.) 'மிகுந்த குளிர் வந்து உடம்பு நடுநடுக்குற்ற காலையிலும் யாவரும் விரும்பாத கருந்துணித் துண்டுகள் பல வற்றைத் தைத்தமைத்த ஒரு துணியேயன்றி வேறொன்றுங் கிடையாதாகவேண்டும்; படுப்பதற்கு வறுமை மிக்கவன் வீட்டுக் கடைவாயிற் புறத்திண்ணையல்லாமல் வேறிடங் கிடையாதாகவேண்டும், மிகுந்த பசி வந்த காலையே உணவு கிடைக்க வேண்டும், அஃதும் உப்பில்லாமற் சமைத்த கூழல்லது வேறு எந்த வகையான உணவும் எவ்வளவு உரத்துக் கூவினுலுங் கிடையாதாகவேண்டும், ஆனல் நாடோறும் ஒழுக்கமும் உயர்ந்த அருட்கல்வியும் சான்ற மெய்த்தவத்தர் கூட்டத்தில் இருத்தல் கிடைத்தல் வேண்டும், இவ்வாறு உடல் நீங்கும்வரை உதவியருளி உடல் நீத்தபின் உன்னுடைய திருவடிக் கமல மடைதலாகிய பெறும் பேற்றையன்றி வேறொன்றினையும் பன்முறை குறையிரந்து மன்றாடினுங் கொடாமையாகிய பெருவரத்தையே நீ அருளல்வேண்டும்' என்றார்.

சிவனடியாரிடத்திலும் சைவ சித்தாந்தத்தினிடத்திலும் நமது அடிகள் அளவற்ற ஆர்வமுடையவராய்த் திகழ்ந்தனரென்பதும், தாழ்வெனுந் தன்மைக்கு அவர்கள் தலையாய எல்லையாகத் திகழ்ந்தனரென்பதும் கீழே காட்டுஞ் செய்யுட் பகுதியால் அறியப்படும். 'அருட்கலை யறிவாகிய மரத்தின் இலை, தளிர், அரும்பு, மலர், பிஞ்சு, அருங்காய் என்னும் ஆறு பகுதியையும் அறுசமயத்தார் என்னும் பிறசமயத்தார் கொண்டு செல்ல, அம்மரத்தின் உச்சியிற் பழுத்த தெவிட்டாத இன்சுவையையுடைய உயிர்க்கு உறுதி பயக்கும் அரிய கனியினைப் பிழிந்து அதன் பிழிவாகிய சைவ சித்தாந்தத் தேனமுதத்தை

அருந்தினர் சிலரே என்றும், அங்ஙனம் அருந்து நிலை பெறுவதற்குத் தாம் வேறுவாராயினும், அருந்தினோர் திருவடித் தாமரைகளை விளக்கிய தீம்புனலமுதத்தைத் தாம் உட்கொண்டமையால் தாம் விண்ணவர் அமுதத்தை வேம்பெனக் கருதினரென்றும் பகர்ந்த செய்யுட் பகுதி வருமாறு:—

'வேத மென்னும் பாதபம் வளர்த்தனை
பாதப மதனிற் படுபயன் பலவே
அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே, யிலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே, தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் கருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே,
அவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
ஓரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே, யானவர்
நன்னிலை பெறுதற் கன்னிய னாயினு
மன்னவர் கமலப் பொன்னடி விளக்கிய
தீம்புன லமுத மார்ந்தன னதனால்
வேம்பெனக் கொண்டனன் விண்ணவ ரமுதே.'

(பண்டார மும்மணிக்கோவை, செ-௰.)

இன்னும், முடிவான குறிக்கோளாக விரும்புவது இந்திரன் முதலிய இறையவர் பதங்களல்ல வென்றும், சைவ சித்தாந்தத்திற் கூறும் பிறவா விறவாப் பேரின்ப நிலையே யென்றும், அது தமக்குக் கிடைத்தற்கு அரிதாயின் தமது அருளாசிரியனது பொன்னடியைச் சேர்ந்த தொண்டர்களது பரிகலமருந்திப் பிறவிக்கடலில் அலையும் தவமிக்க நாய்ப்பிறவி யெடுத்துத் திருவருளையும் மறவாதிருக்கப் பெறுவதே யாமென்றும் புகன்றமை யாவருள்ளத்தையும் உருக்கவல்லது.

௨௩ 'திவ்வியம் பழுத்த சைவசித் தாந்தத்
திறவா நிலைமைபெற் றின்பமார்ந் திருக்கும்
பிறவா நன்னெறி பெறப்புரி வதுவே'

(பண்டார மும்மணிக்கோவை, செ-௪).

'அன்னவை யொழியமற் றென்னைகொல் பிறவெனின்
விழுத்தகு கலவியு மொழுக்கமு மிலராய்ப்
பழிப்புள ராயினு மாக வழுத்திநின்
பொன்னடித் துணைசேர் நின்னடித் தொண்டர்
திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த
பரிகல மாந்தியிப் பவக்கட லுழக்கும்
வானுடை ஞமலி யாகிநின்
னருளையு மயரா தவதரிப் பதுவே.' (செ–௪)

இதுகாறுங் கூறியவை குமர குருபர அடிகளது அருட்பாடலுட் போந்த சிற்சில நயங்களேயாம். அவற்றின் நயங்களனைத்தை யுந் தொகுத்துரைப்பதற்கு ஆற்றலும் இடமும் போதா. அவர்கள் தமிழுலகத்திற்குஞ் சைவ நன்மக்கட்கும் இயற்றியருளிய பெரு நன்றிக்குக் கைம்மாறு யாதுமில்லையே யெனினும், அவர்கள் வற்புறுத்தியருளிய உயர்ந்த உண்மைக் கொள்கைகளை நாம் கடைப்பிடித்து உலகினர் யாவரும் அவற்றைக் கொள்ளும் வண்ணம் பெருமுயற்சி செய்வது நம்முடைய ஒருதலையாய கடமையாகும். அவர்களது செந்தமிழ்ப் பெரும்பற்றும், சிவனடிப் பேரன்பும், உள்ள மெய்த்துறவும், சைவ சித்தாந்த உறுதியும், திருத்தொண்டின் உறைப்பும், தாழ்வெனுந் தன்மையும் நாம் என்றும் மறவாது போற்றற்பாலன. செவ்விய பெருமித நடையில் தமிழ்ப்பா வியற்ற விரும்பும் யாவரும் அடிகளது திருவருட் பாடல்களை இடையறாது பாராயணஞ் செய்யக்கடவர். எண்வகைச் சுவையுமினிதமைந்த கற்பனையமைப்பதிற் கம்பர் முதலிய ஏனைய பெரும்புலவரும் இவர்க்கு இணையாகா ரெனக் கூறின் அது மிகையாகாது. சைவ சித்தாந்தத் தெளி பொருள் திரட்டுவதிலும் அதன் சிறப்பினைப் பாராட்டுவதிலும் இவரே தலைமைச் சால்புமிக்க பேரருட் புலவரென்பது திண்ணம்.

திருவள்ளுவர் ஒரு மரநூற் பேராசிரியர்

[திரு. அ. மா. முத்தைய நாட்டாரவர்கள்]

(௩௧௨-ம் பக்கத் தொடர்ச்சி)

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்னும் குறளில், தொழில் என்றமையானே, செயல் முதலிய பொருள்கள் ஆறையும் குறிக்குமெனினும, செய்யுமென்றமையான் நல்லன தீயனவென்ற வேற்றுமைகளன்றி, தொழில் வேற்றுமையும், தொழில் செய்யும் வேற்றுமையும், செய்தற்கு வேண்டிய இடம், காலம், முதல், துணைக்காரணங்கள் வேற்றுமைகளும், அவைகள் தனித்தும், சேர்ந்தும் வருதலால் வேற்றுமைகளும் எனப் பலபாகுபாடுகளாகும் காட்டாக, உழுதல், வனைதல் முதலியன தொழிலில் வேறுபாடும், வடநாட்டுக் குலாலனும், நம்நாட்டுக் குலாலனும், வடநாட்டுழவனும் தென்னாட்டுழவனும் செயலானும், செய்பவனாலும், இடம், காலம், முதல், துணைக்காரணங்களாலும், வேறுபாடுகளும், மற்றுப் பிறவும் காண்க. இவ்வேற்றுமைகளை விரிக்கின்பெருகும். இங்கு ஒரு சிறு காட்டாக,

'தென்றிசைப்புலையன் வடதிசைக்கேகிற்
பழுதறவோதிப் பார்ப்பானுவான்
வடதிசைப்பார்ப்பான் தென்றிசைக்கேக
நடையதுகோணிப் புலையனுவான்'

என்ற கபிலரகவல் நோக்கத்தக்கது. பின்னும், மிலேச்சரெனப்பட்ட பார்ப்பனர்கள், தென்னாட்டில் குருக்களானார்கள். மறவர், பறவர் என்னும் தென்னாட்டுச் செல்வர்கள் கீழ்மையுற்றுக் கீழ் வகுப்பானார்கள். சோழ நாட்டுடையார்கள், குற்றமுடையராய்க் குறிக்கப்படுகிறார்கள். அந்தோ! இவைகளனைத்தும், காலம், இடம், தொழில் முதலிய வேறுபாட்டாலும், அங்ஙனம் ஏற்பட்ட வேற்றுமைகளுக்கிணங்க, முறையே, முன்னேற்றத்திற்கேதுவான முறைகளை நாடாமையாலும், நாடும் உரம் இன்மையாலும் நிகழ்ந்தவைகளேயாம்.

நிற்க நம் திருவள்ளுவர் எல்லாவுயிர்க்கும் எனப் பொதுப் படக்கூறினமையின், கண்ணிற் காணுறுமுயிர்கள், கண்ணிற் காணுறாவுயிர்கள் (மரம் விலங்கு மற்றுப் பொதுவென்றவெல்லாம்) அனைத்தும் செய்தொழில் வேற்றுமையால் சிறப்பொவ்வா. காட்டாக ஆற்றங்கரையின் கருவேலமரமும், பாலை

நிலத்தின் கருவேலமரமும், ஒரு மரத்தின் வித்துகளின் வழியால் தோன்றியிருப்பினும் தங்கள் வாழ்நாளில், செய்தொழில் வேற்றுமையால் சிறப்பொவ்வா. ஆற்றங்கரைமரம் பெருத்து, உயர்ந்து, பல்கிளைகளுடையதாய்ச் சிறுத்த முட்கள் சில வுடையனவாயும் அகன்ற இலைகள் பலவுடையனவாயு மிருக்கும். மற்று, பாலையிலுள்ள மரமோ சிறுத்து, குன்றி, சிறு கிளைகள் சிலவுடையனவாயும், நீண்டு பெருத்த பல முட்களுடனும், சிறுத்த சிலவிலைகளுடனுமிருக்கும். இவ்விரண்டு மரங்களையும் ஒரு புகைப்படத்தில் எடுத்து ஒரு தாயின் இருகுழவிகளெனக் கூறின் காண்போர் நம்பக்கூடாத வேறுபாடுகளுடன் இவைகள் தோன்றும். இவ்விரண்டு மரங்களும் வித்துக்களாய் உள்ள பொழுது ஒத்த குணங்களுடையவைகளாயிருந்தன. என்னை? ஒரு மரத்தின் வித்துக்களாதலால். பின் காலம், இடம், முதலியவைகளின் காரணமாய், செய் தொழில் வேறுபட்டுச் சிறப்பொவ்வாதவைகளாயின. இங்ஙனமே விலங்குகளிடத்தும் வேற்றுமைகள் காணப்படும். அவைகளைக் கண்டு கொள்க. இங்குக் குறிக்கப்பட்ட தொழில் வேற்றுமைகளின் காரியங்கள் புறத்தில் காணக்கூடியவைகளாயினும், வேறுபட்ட தொழில்கள் அகத்தில் நிகழ்பவைகளாம். இக்குறளின் ஆழ்ந்த பொருளையாராயவேண்டின், அகநிகழ்ச்சிகளின் சில பொது விலக்கணங்களை ஈண்டாராய்தல் முதன்மை. அகவாராய்ச்சியென்பது 'அதிசூக்கும' நிலையைக்குறிப்பதன்று. என்னை? நுண்ணூலாராய்ச்சி, அப்பெற்றி யின்னும் பெற்றில்லையாதலின். மற்று, புறத்திற்கு அடுத்த படியாகும் அகவாராய்ச்சியையே யிங்குக் குறிப்பிட்டதாகும். சித்தியாரில் மண்ணிற்கடாதி யெல்லாம் வருவது குலாலனாலே என்று காட்டிய குறிப்பு புறத்தில் காணு மொன்றால் அகத்தின் நிகழ்ச்சியை விளக்குவதாகும். இஃதில் குலாலன் செய்பவன், மண் முதற்காரணம், திரிகை துணைக் காரணம், வனையுமிடம் மண் கொணர்தல் மிதித்தல் சேர்த்தல் திருகல் முதலியன வனைதற்குச் செயல்கள், குடம் செயப்படு பொருள். இஃதில், செய்பவனும் குலாலனின் வேறுபட்ட தொழில்கள், அவனிட மகத்தில் நிகழும் வேறுபட்ட செயல்களின் காரியங்களாகும். விரிக்கில், அக்குலாலன் தானிருக்குமிடம், காலம், கிடைக்கக் கூடிய மண், பிறர் வேண்டும் கடாதிகளையறிதல், மற்றையகுலாலர்கள் ஆற்றல், தன்னாற்றல், தன் துணையாற்றல் முதலிய வனைத்தையும், தனித்தும் சேர்த்தும் ஆராய்ந்துணர்ந்து, எவ்வழித் தன்னைச் சிறப்புறுத்துமோ, அவ்வழி கடைபிடிக்கினும், அதற்கியன்ற உரமிருப்பினும் சிறப்புறுவன். அன்றேல் சிறுமை யுறுவன். இங்ஙனம் குலாலனுமுயிர், ஐம்புலன்கள் வழியாய்ப் புறமறிந்து தான் சிறப்புறும் வழியைக்

கடைப்பிடிக்கும் இக்குறிப்பில் பல்வேறு சிறு குறிப்புகள் ஈடு பட்டமையின், சிறுவர்களுக்குத் தெளிவுறாதாதலால், மற்றொரு சிறு குறிப்பால், அகச்செயல்கள் புறத்தொழிலிற்கு எங்ஙனம் காரணமாகு மென்பதை விளக்குதும்.

ஒரு அறையின் ஜன்னலருகில், ஒரு மண்சட்டியிலுள்ள, ஓர் இளம் செடியை வைப்போம். அறை முழுவதும் சூரியன் கதிர் குறைந்திருக்க, 'விண்ணுழை கதிரின் றுன்னணுப்புரைய' என்றவாறு, ஜன்னலின் சிறு பகுதியில் மட்டும் சூரியன் கதிர் செல்வதாகக்கொள்வோம். அப்பொழுது சூரியன் கதிர், நேரே நிற்கும் போதில், ஒரு பக்கத்தின் மேல் நேர் கோட்டில் விழும் (at right angles) உடனே செடியிலுள்ள திதி (The protoplasm—the physical basis of life) இக்கதிரை ஏற்று அதைச் செல்லுமிடமெல்லாம் செலுத்துகிறது. தன் னிகழ்ச்சியையும் புறவுணர்ச்சிக்கேற்றவாறு மாற்றுகிறது. சூரி யன் கதிர் ஏற்ற பக்கமுள்ள திதி முன்போல், வளராமல் நிற்க வும், கதிர் ஏற்காது இருட்டறையை நோக்கி நிற்கும் பக்கத்தி லுள்ள திதி, முன்போல் வளரவும் இவ்வேறுபட்ட செயலின் காரணமாய் நேரே நின்ற செடியானது, சூரியன் கதிர் நோக்கி வளைகிறது. இங்கு, புறவுணர்ச்சிக்கேற்றவாறு, உயிரின் செயல் மாறுபட்டதனால், நேரில் வளரும் தொழிலும் வேறுபட்டு, வளைந்து வளரும் தொழிலாகிறது. இங்குச் செய்பவன் திதியா கும். 'தோற்றிய திதியே' என்பது சிவஞானபோதம். பூதாதிகள் முதற்காரணம். 'பூதாதியீறுமுதலும் துணையாகப் பேதாய் திதி யாகும்' சிவஞான போதம். சத்தி (energy) துணைக்கார ணம். 'ஈறுமுதலும் துணையாக' என்பதில் கவனிக்கவும். இஃதில் எங்ஙனம் சத்தியுண்டாகு மென்பதை அடுத்த கட்டுரையில் வித்தின் கீழ் விரிப்பாம். இங்ஙனம் ஒரு உயிர் தானிருக்குமிடம் காலம், நிலம், திணைமாற்றல், புறமுணரும் சத்தி, அதற்கேற்ப நிகழும் உரம். இவைகளுக்கேற்பத் தன் செயலை யென்றுமாற்றிக் கொண்டு தான் என்றும் சிறப்புறும் வழியிலேயே செல்லும். இங்ஙனமில்லையேல் நசிக்கும். இச்சிறு விளக்கம் கொண்டு டார் வின் (Darwin) என்னும் பெரியார் வரைந்துள்ள பல்லுயிர்த் தோற்றம் (origin of species) என்னும் பெரும் காவியத்தை முற்றுமாராய்ந்தால் நம் திருவள்ளுவரருளிய "சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான்" என்ற உறுதி மொழிக்குள் யாவும் அடங்கியவைகளாகவே நிற்கும். அவர்காட்டியுள்ள பல வதிகாரங்களையும் அவைகளிற் கண்ட பல உதாரணங்களையும் ஆராய்ந்து அவைகள் எங்ஙனம் திருவள்ளுவர் கட்டளையிலடங்கு மென்பதை ஓர் தனிக்கட்டுரையில் 'செல்வி' இடம்தரின் வரைய

விரும்பியுள்ளேன். அதிற்கண்டு கொள்ளவும். மேற்குறிப்பிட்ட சில பொதுக் குறிப்புகளிலிருந்து நம் பண்டைத் தமிழ்மக்கள் நீண்ட காலத்திற்கு முன்னமே மரநூல் ஆராய்ச்சி செய்திருக்கிறார்களென்பதும், அதுவும் மிகவும் உயர்தர நிலையிலாராய்ச்சி செய்திருக்கிறார்களென்பதும் குறளில்கண்ட சில குறிப்புகளிலிருந்தே தெற்றென விளங்குகின்றன. ஆதலின், திருவள்ளுவர் காட்டிய சில சிறப்புக் குறிப்புகளை ஆராயுமிடத்துப் பொருள் வலிந்து கொண்டதாகக்கொள்ளாமல், நம் பண்டைத்தமிழ் மக்களின் நுண்ணூல் மனமாண்பு மிகச் சிறப்புற்றிருக்க வேண்டுமென்பதையும், அவைகளைத் திரட்டி நம் திருவள்ளுவர் கூறிய வாற்றல் மிகப் பெற்றி யுடைய தென்பதையும் கற்றோரறிய வேண்டுகின்றனன். (தொடரும்)

கற்கை *

[திரு. காழி. சிவ. கண்ணுசாமியவர்கள் B.A.]

மம்மராறுக்கு மருந்தாகுங் கல்வி யொருவர்க்கு மட்டற்ற இன்பம் பயக்கும், அவர் தம் அறிவு பிறங்கும் அணிகலனு யமையும், அன்றியுமவர்தம் ஆற்றல் விளக்கும் நற்கருவியு மாகும். என்னை? இவ்வாகுல வாழ்க்கையி னொருவா றகன்று தனி நின்று காலங்கழிக்கக் கருது மொருவற்கு அந்நிலையில் இன்பம் பயக்க வல்லது நூற்படிப்பே யன்றோ? ஆன்ற கேள்வி யடங்கிய கொள்கை சான்ற நற்பெரியார் முன்னும் சொற் சோர்வு படாமற் காத்துதவி அணிகலனாய்த் திகழ்வதும் படிப்பே; அன்றி யொருவர் மேற்கொண்ட ஓர் பணியை முட்டறுத்து அதை இடையீடின்றிச் செய்து முடிக்கும் ஆற்றலளிக்க வல்லதும் படிப்பே. பழக்கத்தால் ஒரு பணியிற் றேர்ச்சி யுற்றோர் தாம் பயின்ற அப்பணியிலோ அன்றி யஃதனைய பிறவற்றிலோ ஒவ்வொரு சிறுகூறும் பழுதுபடாமற் றிறம்பட ஆய்ந்து செய்து முடிக்க வல்லுநராவர் என்பது உண்மையே. எனினும் பரந்ததோர் பெரிய திட்டங்களைப் புதியவாகத் தேர்ந்தமைக்க நேர்ந்துழி அவற்றிற்குரிய பொருள், கருவி, காலம், வினை, இடனென்னைந்தையும் இருள்தீர எண்ணி, முடிவும், இடையூறும், முற்றியாங் கெய்தும் படுபயனுஞ் சீர்

---

* இது பேக்கன் பிரபுவின் விரிவுரைகளினின்று மொழிபெயர்க்கப் பட்டது.

தூக்கி ஏற்றவாறு ஒழுங்குபடுத்தி யமைத்துக் காட்டும் ஒண்டிறல் கற்றோர்க்கே உரித்து.

இனி, 'முற்றப் பகலும் முனியாதினிதோதிக் கற்றல்' என்பது பெரிதும் குடி மடிக்கும் மடியின்பாற் படுவதாகும். அன்றி, கற்ற கல்வியின் திறம் விளக்க ஒல்லும் இடத்தும் அல்லிடத்தும் அதை மிகுதியு மெடுத்தாளல் வீண் பகட்டேயாகும். அஃதான்று, கற்று நூல்களிற் கண்ட அளவானே உற்ற ஒவ்வொன்றையும் ஆய்ந்து முடிவுகட்ட முயலுதல் பல கற்றும் உலகத்தோடு ஒட்ட வொழுகல் கல்லாத ஒரு மாணவனது செய்கையே யாகும்; என்னே? கற்றறிவு கடைபோகா வாகலான்.

இயற்கையா யமைந்த இழிதகைமைகளைத் தீர்த்துக் குறைவகற்றி நிறைவெய்துவிப்பது நூற்கற்றலேயாகும். அக்கற்கையும் முறையே இடைவிடாப் பயிற்சியால் நிறைவுறுவதாகும். இயற்கையறிவும், இயற்கையாய் முளைத்தெழுஞ் செடி கொடிகளும் ஒருபுடை யொத்தவையன்றோ? அரிதலும் களைதலும் செடிகளைப் பண்படுத்துவதாயின், கற்றலுங் கேட்டலும் இயற்கையறிவைப் பண்படுத்துவனவாகும். ஆயினும் கல்வியோ கரையில, கற்பவர் நாட்களோ ஒரு சில, அவ்வாறாகவே தெள்ளிதின் ஆராய்ந்து அமைவுடைய கற்பதென்பது பயிற்சி யொன்றாற் கைகூடுவதேயாகும்.

கரவின் மிகுந்தோர் கற்றலைக் கடிவர்; என்னே? இழிதகைமைத்தாய கரவினாற் பயனெய்துதற் கண்டாரன்றோ? பாமரர் கற்றதனலாய பயனைப் பிறர்மாட்டுக் காணுழிப் பெரிதும் வியப்பெய்துவர். ஆற்றவுங் கற்ற அறிவுடையாரோ தாங் கற்றுணர்ந்தவற்றை ஏற்ற பெற்றி யமைத்துப் பயன்கொள்வர். மற்றையோர்க் கஃதமையாதோ வெனின், அமையாது, என்னே? நூற் கற்றமையினாலேயே கற்ற வொன்றை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் கழிநுட்பம் தானே பெறப்படும் என்பது அமையாத தொன்றன்றோ? அவ்வழிப் பயன்கொள்ளும் ஒப்பரிய நுட்பம் கற்றறிவுக் கப்பாற் பட்டதாகும். பார்க்குமிடமெங்கணுமுள்ள ஒவ்வொன்றையும் நுண் மாண் நுழைபுலங் கொண்டு ஆய்ந்து முடிவுகட்டும் பயிற்சியாலேயே அது பெறப்படுவதாகும்.

இனி, ஒரு நூலைக் கற்பான் தொடங்குமுன் அதனுட் கிடக்குங் குற்றங் கண்டு காய்ந்ததனைத் தாக்குங் கருத்தோடே கற்க முற்படுதல் கூடாது; அவ்வாறின்றிக் கற்குமொவ்வொன்றும் நிறைமொழி மாந்தர் தம் ஆணையிற் கிளந்த மறைமொழித்

திறம் வாய்ந்ததென உவந்து கற்க முற்படலும் கூடாது. இவை யன்றி வீண்காலப்போக்கு குறித்துப் பயனில்சொல் பலப்பகர் வான் வேண்டி நூற்கற்றலும் ஒழிதற்பாற்று. மற்றெவ்வாறோ வெனின், குற்றமுங் குணமுநாடி மிகைநாடி மிக்க கொள்ளும் உள்ளக் கிடைக்கையுடன் கற்கும் ஒவ்வொரு பொருளின் மெய்ப்பொருளையுங் கண்டுணரும் அவாவுடனே கற்கப் புகு வதே சால்புடைத்து.

நூல்கள் பஃறலைய; ஆகலின் ஒரு சில சுவைத்தற்பால; ஒரு சில விழுங்கற்பால; ஒரு சிலவோ மென்று தின்று தேக் கெறிதற் பாலவாம். அஃதாமாறு; ஒரு சில நூல்கள் ஒவ் வோர் புடையே கற்கப்பட்டு எஞ்சிய கற்காதொதுக்கற் குரியன வாகும்; ஒரு சில முற்றவுங் கற்றுக் கருத்துணர்ந்ததோடு விடற்பாலனவாகும்; ஒரு சிலவோ முற்றலுங் கற்றலோடமை யாது கற்கும் ஒவ்வோரடியும்,

"உற்றொன்று சிந்தித்து உழன்றொன்றறியும்"

கூர்ந்த அறிவுடன் படித்துணர்ந்து தேர்தற்பாலனவாகும். இன் னுஞ் சில நூல்களுமுள: அவையிற்றைத் தாமேயன்றிப் பிறரைக்கொண்டு படிக்கச்செய்து நூற்கருத்துணர்தலும், ஆயிடைப் பொதிந்து கிடக்கும் அரிய பெரிய கருத்துகள் உள வேல் அவற்றைமட்டுங் குறித்தெழுதுவித்து அகப்படுத்தலும் ஒருவகைத்து. நூல் கற்பின் ஒருவன் இழிதகைமை தீர்ந்து நிறைவு பெற்றவனாகின்றான். அவனே கற்றது கொண்டு தெற் றென மொழியுந் திறம்படைப்பின், அவையஞ்சா ஆண்மை பெற்றவனாகின்றான்; அன்றியும் கற்ற ஒவ்வொன்றின் உண்மைப் பொருளையும் பிண்டக் கருத்துகளையும் ஐயந்திரிபற எழுதி வைத்துக்கொள்ளும் ஆற்றல் படைப்பினோ அவனே மகனெ னப்படும் உண்மை மகனாகின்றான். எனவே எழுதியமைத்துக் கோடலைப் பெரிதும் வேண்டாதானொருவன் மறதியறியா மாண் புடையனாயிருத்தல் வேண்டும்; மொழித்திறம் படைத்தும் சுருங்கச் சொல்லும் விழைவுகொண்டா னொருவன் சட்டெனச் சுட்டுக்கூறும் தெள்ளியஅறிவுபடைத்தானாதல் வேண்டும்; நூற் பல கற்பதை வேண்டா ஒருவன் பெரிதுங் கற்றான்போற் பிறர்க்குக் காட்டும் பகட்டுடையனாயிருத்தல் வேண்டும்.

உண்மை வரலாறு குறிக்கும் நூல்கள் கற்பின் அறிவகலும். புலமை மிக்க கவிகளைக் கற்பின் கருத்துகள் செறியும். கணக்கு நூல்களாயின் கூர்மைமிகும். நீதி நூற்களோ பொருளல்லவற் றைப் பிரித்துணரும்பெரும் பண்பு நல்கும். அளவை நூலாயின் மொழித்திறம் விரியும். எனவே இவற்றையு மின்னோரன்ன

பிறவற்றையுங் கற்பதற்கேற்ப இயற்கை யறிவு திருத்தமுறும் என்பது போதரும். பொதுவகையாற் கூறுங்கால், எவ்வொருவர் மாட்டும், மடங்கொன் றறிவகற்றுங் கல்வியான் நீக்கப்பெறு மகிமை இயற்கையிலேயே யமைந்து கிடக்கின்ற தென்று கொள்வதற்கில்லை. எனவே நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி.வாய்ப்பச் செயின் நோயொழிதல் போன்று இயற்கையா யமைந்து கிடக்கக் கண்ட அறிவின் குறைபாடு நாடி அதற்கேற்ற துறையானமைந்த நூல்களைக் கற்பின் அக்குறை நீக்கமுறல் உறுதி. எவ்வொன்றிலுங் கருத்தை யொருக்கிச்செலுத்த வொண்ணு ஒருவன் கணக்கு நூலாயின் அது தீரும்; என்னை? இடையில் ஒரு சிறிது வழுவினும் முதற்கணிருந்து தொடங்க வேண்டுமாதலின். அஃதே போல் எவ்வொன்றினும் பொய்மை மெய்மை யுணரமாட்டா வொருவன் அளவை நூல்களாயின் அக்குறை தீரும். என்னை? அவைகள் 1மயிர் ஒன்றிரண்டு வகிர்செய்து துருவித்துருவி உண்மையறிய முயல்வன வாகலின். மறதி மிகுதியு முடையானொருவன் சட்ட நூற்கள் கற்பின் பெரிதுந் தெளிவுறுவான். இவ்வாறே ஒவ்வொரு குறைபாடும் ஒவ்வொரு நூற் கூறுகொண்டு தீர்க்கவல்லதா யமைந்து கிடக்கின்றதென்பது நன்கு விளங்கும்.

பொருளின் பிண்டக்கருத்துகள்:

தனிமையில் இன்பம் பயக்க வல்லதும், மொழித்திறத்திற் கணிகலனு யமைவதும், பணியிற் செய்திற னளிப்பதும் படிப்பேயாகும்.

எனினும் நாள் முழுதும் படிப்பிலேயே கழித்தலும், கல்வித் திறத்தைக் காலமிடமறியாது எப்பொழுதும் காட்ட முயலுதலும், ஒவ்வொன்றையுங் கற்றறிவு கொண்டு கணிக்க முற்படலு மாகாவாம்.

இவையெலாம் பழக்கத்தாலும் பயிற்சியானும் மட்டுப் படுத்தற்பால. ஆய்ந்து சீர்தூக்கி மெய்ப்பொருள் காணவே படிக்கவேண்டுமாதலின், ஒரு புடையே கற்கவேண்டுவனவும், முற்றுங்கற்றுத் துறைபோகற் பாலனவுமான நூல்களுக்குள்ள வேற்றுமை யுணர்தல் வேண்டும். அறிவகல நூற்களைக் கற்றல்வேண்டும்; மொழித்திறம் விரியப் பேசிப் பழகுதல் வேண்டும்; ஐயந்திரிபற்ற உண்மையறிவு வேண்டின் எழுதிப் பழகுதல் வேண்டும். எனவே படிப்பான் இயற்கையறிவு திருந்துதல் ஒருதலை. ஒவ்வொரு நூற்கூறு ஒவ்வொரு குறையைத் தீர்க்க வல்லதாகும்.

குறிப்பு—

1. இக்கருத்து சீரகத்தைப் பிளந்து பார்த்தல் என்னும் பொருளில் மேனாட்டில் வழங்குகிறது.

நூல்பலகல்—ஆத்திசூடி

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.

அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
துலகநூ லோதுவ தெல்லாங்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்.—நாலடி.

உணற்கினிய வின்னீர் பிறிதுழிஇல் லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோ லாகார்—கணக்கினை
முற்றப் பகலு முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று.

நற்கறி வில்லாரை நாட்டவு மாட்டாதே
சொற்குறி கொண்டு துடிபண் ணுறுத்துவபோல்
வெற்பறைமேல் தாழும் இலங்கருவி நன்னாட !
கற்றறிவு போகா கடை.—பழமொழி

எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகு—முய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னாகு மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து.—நீதிநெறிவிளக்கம்.

கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.—குறள்.

தொண்டர் படை

[திருவாளர் சே. சின்னதம்பியவர்கள்]

(௩௧௬-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி எவராகிலும் இருந்திருப்பின் அன்னாரை யான் சமய ஆசிரியராகக் கொள்ளவேமாட்டேன். 'என் கடன்பணி செய்து கிடப்பதே' யென்றார் அப்பர் பெருமானும். எனவே இப்பணிமயமாகிய தொண்டர் இன்பப் பெருநெறியை உலகெங்கும் பரப்புவதே 'தொண்டர்படை'யின் சீரிய நோக்கமென்றுணர்க.

"கேடும் ஆக்கமுங் கெட்ட திருவுடையோம்,
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவோம்,
கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்குவோம்"

என்ற அமுதமொழிகள் பொறிக்கப் பெற்ற செழுங் கொடியே 'தொண்டர் படைக் கொடி'யென்றறிக. முன்னொரு நாள் கரிகாற் பெருவளவனும் அவனது வீரப்படையும் பனிமலை முகட்டிற் புலிக்கொடி பொறித்தனராம். இதை யொரு பெரும் புகழாக யாம் இன்றும் போற்றி வருகின்றோம். ஆயின் நமது 'தொண்டர்படை' யானது நமது நாட்டின் செழுமைக்கு இடர்களாயுள்ள கீழ்களையெல்லாம் துகள் படச் சிதைக்கப் போகின்றது! மக்கள் உள்ளமலர் முகட்டில் பணியின்பக் கொழுங் கொடியைப் பொறிக்கப் போகின்றது. இப்பெரும் புகழை யார் தான் பாடவல்லார். இத்தொண்டர் படையின் வீரப்புகழ் பாட நம் சேக்கிழார்குடிச் செல்வனை இறைவன் மீண்டும் எம்மிடைத் தருவார்கொல்! இன்றேல் இன்னுமொரு அருள்மொழித் தேவர் பிறப்பார் கொல்! இவ்விரண்டினுள் ஒன்று வாய்க்கும் என்பது எனது நம்பிக்கை.

நான்காவதாகத் தொண்டர்கட்கு 'ஊக்கம்' வேண்டும். குன்றா ஊக்கமே பொன்றாச் சிறப்பு. அதுவே தொண்டிற்கு அச்சாணி போன்றது. இவ்வுலகத்துப் பொருள்களெல்லாம் நிலையில்லாதனவாகவே காணப்படுகின்றன. தோன்றியழிவனவேயெல்லாம். இன்றொரு தோற்றம், நாளையொரு மாற்றம். இத்தோன்றி யழிவனவற்றுளெல்லாம் 'மனக்கிளர்ச்சி'யே அழி

வதில் மிகவிரைவுடையது. உலகத்து நிலையாமைக்கு எடுத்துக் காட்டு எதுவென்றால், வானிடை இலங்கும் மின்னும் அல்ல, நீரிடை முகிழும் குமிழியும் அல்ல, மக்கள் 'மனக்கிளர்ச்சி'யே என்னலாம். அத்துணை மாயமுடையது 'மனக்கிளர்ச்சி' யென்க. இவ்வுலகத்தில் செம்மை வாழ்வில் விருப்பில்லா மகன் யார்? புகழ் மலர்ந்த பெருவாழ்வில் விருப்புறு மகனும் உளன் கொல்? இறைவழி நிற்க விழையா மகன் யாண்டுளன்? மதுவருந்தி வாழ்வைச் சிதைத்து இடர்ப்படும் ஏழை மக்கள் கூடத் தம் புன்மையை இன்னே தவிர்ப்போம் இன்னே தவிர்ப்போம் என்று எத்தனைமுறை கிளர்ச்சி பொங்குகின்றனர். ஆ! பொல்லாக் கிளர்ச்சியே! நில்லா தொழிகின்றனையே! கிளர்ச்சி நிலைத்தால் வளர்ச்சியுண்டு. நிலைத்த கிளர்ச்சியே 'ஊக்க'மென்பது. இவ்வூக்கமின்மையாற்றான் தமிழ்நாடு இத்துணை வளர்ச்சி குன்றியிருக்கின்றது. ஒரு நாட்டின்வளம் அந்நாட்டுமக்களின் ஊக்கத்தினளவாகவே யிருக்கும். மேல்நாடுகளை நோககுங்கள். எத்தகை ஊக்கம் ஆண்டு நிலவுகின்றது இடையறு ஊக்கப் பெருவிழாவே அந்நாடுகளெங்கணும். எம் நாட்டில் தூக்கப்பிணவிழா. மேல்நாட்டில் தான் வாழ்வைக் காணலாம். எம் நாடுகளில் தாழ்வும் சோம்பலும். ஈண்டு யான் மேல்நாட்டு ஊக்கத்தைப் போற்றுகின்றேனேயன்றி ஆண்டு ஊக்கம் நிகழும் வாழ்வுத்துறைகள் முழுவதையும் போற்றுகின்றேனில்லை யென்றுணர்க. ஊக்கமே வாழ்வை நல்வழியில் உய்ப்பது. உலகத்துப் பெருஞ்செயல்களைச் செய்து முடித்தவர்களும், செய்து வருபவர்களும் ஊக்கத்தையே முதற்கருவியாகக் கொண்டனர் என்பது எவர்க்கும் புலனாவதொன்று. ஊக்கமே உலகத்து உயர்வுக்கெல்லாம் அடிப்படை. உறுதியும் ஊக்கமும் உடையார்க்குச் செய்யத்தகாதனவும் உலகத்து உண்டு கொல்! வியத்தகு அருஞ் செயல்களெல்லாம் ஆற்றுவாரன்றே. 'எண்ணிய எண்ணியாங்கெய்துப எண்ணியார் திண்ணியராகப்பெறின்' 'ஊழையும் உப்பக்கங்காண்பர் உலைவின்றித் தாழாதுஞற்றுபவர்' ஊக்கமுடையாரது ஆற்றல் உரையிலடங்கா நீர்மையது. இக்காலத்தில் எம் நாட்டையும், மொழியையும், சமயத்தையும் வளர்க்கவேண்டுமென்றும், திருத்தவேண்டுமென்றும் எத்தனையோ அன்பர்கள் ஆங்காங்கு இருக்கின்றார்கள். சபைகளும் கழகங்களும ஆயிரத்திற்கு மேலுண்டு. ஆயின் இவற்றால் நாட்டிற்கு இன்னும் எவ்வகைப் பெருநலமும் விளைந்ததாகத் தெரியவில்லை. நாட்டில் ஊக்கம் நிறைநத தொண்டரின்மையே இதற்கு முழுமுதல் ஏது என்றறிக. ஆகையாற்றான் தொண்டர் தம் பண்புகளுள் 'ஊக்க'த்தையும் ஒன்றாகச் சிறந்தெடுத்து வைத்து நீள உரைத்தாரென்க.

'நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும்,
மென்றாலும், துயின்றாலும், விழித்தாலும், இமைத்தாலும்
மன்றாடி மலர்ப்பாதம் ஒருகாலு மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்'

என்ற இத்திருப்பாட்டிற்கிணங்கத் தம் செய்கைகளையெல்லாம் கால அணுக்கள்தோறும் இறைபணி மயமாக்கவல்ல திருவினரே இத்'தொண்டர் படை'க்குரியாரென்க.

ஐந்தாவதாகத் தொண்டர்கட்கு 'அருளுடைமை' வேண்டும். தொண்டர்தம் பண்புகட்கெல்லாம் 'அருளுடைமை' அச்சாணி போன்றது. அருளில்லார் தொண்டரல்லர்; அருளே தொண்டு. அருளாளர்களே தொண்டர்கள். மன்னுயிரெல்லாம் துன்பம் நீங்கி இன்பம் திளைத்தல் வேண்டுமென்னும் விழைவும், அவற்றிற்கெல்லாம் தொழும்பாற்ற வேண்டுமென்னும் அவாவும் அரும்பும் இடம் தான் யாது? அருளுளமேயன்றோ! தொண்டர்தம் அருளுள நிலைக்கேற்பவே பணிவளம் பெருகும். ஆகையால் தொண்டர்கள் அருள் வளர்ச்சியிற் பெரிதும் முனைந்து நிற்றல்வேண்டும். அருள் முதிர்ந்து முறுகுதற்கும், பணிவளம் சிறத்தற்கும் தொண்டர்கள் செய்யவேண்டியவற்றுள் ஒழுக்கங் காத்தலே முதன்மையுடையது. புகழ் பரந்த எமது ஐம்பெரும் பழிகளுக்கு மாளாகாது அவற்றைக் கடிந்து இனியன ஓம்பி ஒழுகுதலே தொண்டர்தம் பெருநோன்பாயிருத்தல் வேண்டும். இப்பழிப் பெரும் புன்மைகளில் இறங்கினாரகத்து அருட்டூய்மை இடம் பெறல் முடியாது. 'தொண்டர் படை'யில் வீர உரிமை பெற விரும்பும் ஒவ்வொருவனும் ஒழுக்க உறுதியுடையவனாய் இருத்தல் வேண்டும். 'படை'யுரிமைக்குரியார்தம் முதற்றகவு ஒழுக்கமாம் என்றுணர்க. ஒழுக்கமில்லாதார் எவ்வகைப் பேறுடையரேனும் 'படை'க்குரியாரல்லர். அவரெல்லாம் கீழோரே யாகலினென்க, அவர்கட்குச் சமயமும் இல்லை. கடவுளும் இல்லை. சமயத்தின் அடி நிலை ஒழுக்கமாதலின் சமயத்துட் பெருஞ்சமயமாகிய தொண்டிற்கும் ஒழுக்கமே அடி நிலையென்க.

தொண்டர்கள் அருளாளர்களாவதோடு எளிமையுடையவர்களாகவும் இருத்தல்வேண்டும். அருள் உள்ள இடத்து எளிமை நிலவுதல் மிக எளிது. மக்களுள்ளம் செழுமையுறுதற்கு எளிமைத் தீங்கால் மிக மிக இன்றியமையாதது. உள்ளமெனும் உயர் மாடத்திற்கு அருளெனும் சாளரங்கள் பலவுண்டு. அச்சாளரங்கள் வழியே எளிமைத் தண்வளிபுகுந்து மாடத்துறு பொருள்களையெல்லாம் வளரச்செய்யும். ஆயின் இக்காலத்தில்

இவ்வருட்சாளரங்களெல்லாம் இறுகப் பூட்டப்பட்டிருக்கின்றன. மாடத்துள்ளூறு பொருள்களெல்லாம் வளங்குன்றி வெளிறிக் கிடக்கின்றன. தண்புலன்நீங்கிய வறுஞ்சுனைகள்போல் மக்களுள்ளமெல்லாம் வரண்டு கிடக்கின்றன. இக்கால நாகரிகத்தின் வெம்மைக்கெல்லாம் எளிமையற்ற தூர்த்தவாழ்வே முதற் காரணம் ஆகையால் தொண்டர்களனைவரும் நாகரிக வெம்மையிற் றுக்குறாது எளிமை மிக்க தண்ணளியிற் றேங்கும் திருவுடையராயிருத்தல்வேண்டும். எளிமை வழி நிற்றலே இயற்கை இறை வழியென்க. இறைவழி நிற்றலே தொண்டர் நெறி யென்றுணர்க. உண்ணும் உணவும் உடுக்கும் உடுக்கையும், உறங்கும் உறையுளும் எல்லாம் தொண்டர்கட்கு எளியனவாகவே யிருத்தல் வேண்டும். வீண் அலங்காரங்களிற் கருத்தை விடுமொருவன் வினையேயன்றி அவன் தொண்டனும் விழுமியோனல்லன். எளியவாழ்வும் உயிர்விழைவும் உரிய ஒருவனே உண்மைத்தொண்டன். அவனே உயர்ஞானப் பேருணர்வுடையவன். உயிர்களுக்கெல்லாம் உயர்பெரும் அருட்பணியாற்றும் அவாவுடைய வொருவனுக்குக் கந்தை தானும் மிசையாகத் தோற்றுமென ஆன்றோர் கூறுப. கந்தை மிசையாங் கருத்துடை எளிமைச செல்வனே பெருந்தொண்டன் என்பதில் தடையொன்றுமில்லை இக்கருத்துண்மை இன்று காந்தியடிகள் தம் வாழ்வில் கண்கூடாய்க் காணக்கிடக்கின்றது. எளிமை வாழ்வின் உயர்விற்கு அரியதொரு எடுத்துக்காட்டாய் அடிகளின் வாழ்வு இலங்குகின்றது.

> "ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
> பார மீசன் பணியல தொன்றிலார்
> ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
> வீர மென்னால் விளம்புந் தகையதோ'

என்ற தெய்வச் சேக்கிழார்தம் திருவாக்கின் திரண்ட இலக்கியப் பொருளாய் இன்று காட்சியளிப்பவர் நம் அடிகளேயன்றே. கந்தைக்கதர்; கண்ணீர்முத்தாரம்; ஈசன்பணி; தாய்த்தொண்டு; ஈர அன்பு; நளிந்தோர் நட்பு; ஆகிய இப்பெரும் பண்புகளெல்லாம் ஒருங்குறைந்து எழுந்த எளிமைச் சுவின் காட்சியையன்றோ அவ்வென்பெழுந்தியங்கும் சிறு யாக்கையிற் காண்கின்றோம். பணியாளர் உள்ளத்தில், எளிமை வண்ணத்தால் தீட்டப்பெற்ற ஒளியோவியமாய் அடிகள் அழகொழுகித் திகழும் காட்சியை யென்னென்பேம்! எளிமையும் உயர்வும் கலந்தவொரு தனிப் பெருந்திருவுடன் எம்மனோரை யெல்லாம் ஆண்டு நிற்கும அவ்வருட்கோலத்தைத் தொண்டர்கள் ஒருபொழுதும் மறத்தலாகாது. அடிகளது உயர்விற்கெல்லாம் அவர்களது தெய்வத்

திருவின்மிக்க அருள் எளிமையே முதற்காரணமென்றுணர்க. இப்பெரியாரை இன்று யாம் தொண்டர்தம் தலைவனைகப் போற்றுவது பெரிதும் அவரது தூய எளிமை குறித்தேயென்க. தொண்டர்களனைவரும் அடிகளால் காட்சியளிக்கப் பெற்ற எளிமை யுலகில் வாழ்தல் வேண்டும். பிறருக்கும் தமக்குமிடை இன்ப அன்பைப் பெருக்கவல்ல எளிமைவாழ்விற் றொண்டர்கள் தலைப்படுவார்களேல் அதுவேபெருந்தொண்டாய் முடியுமென்க. இவ்வுலகிடை எளிமைத் தெய்வம் நிலவுமேல் அழுக்காறு முதலாம் அலகைக்கூட்டங்கள் மக்களுள்ளத்தில் தலைகாட்ட முடியாது. (தொடரும்)

தமிழ் நாடு*

[திரு. R. P. சேதுப்பிள்ளையவர்கள், B. A., B. L.]

நமது தாய் நாடு தமிழ் நாடு; தாய் மொழியும் தமிழ் மொழியே.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று பாரதியார் பாடியவாறு இன்பமும் வீரமும் தமிழ் நாடெங்கும் பொங்கித் ததும்புகின்றன. தமிழ் நாட்டின் பெருமை, நமது பெருமையேயாகும். நினைபபிற்கும் எட்டாத நெடுங்காலமாக இந்நாடு, செம்மை சான்ற நன்னாடாய்ச் சிறப்புற்று விளங்கிற்று.

"வளங்கள் நிறைந்த தமிழ் நாடு"

பழந் தமிழ் நாட்டில் பலவகை வளங்களும் நிறைந்திருந்தன. நீர்வளமும் நிலவளமும் நிலைத்திருந்தமையால் தமிழ் மக்கள் பசியும் பிணியும் அறியாராய் வசியும் வளனும் சிறக்க வாழ்ந்துவந்தார்கள். செந்தமிழ நாட்டின் சென்னியாய்த் திகழ்ந்த வேங்கடமலையின் ஓங்குயர் சாரலும், தமிழ்முனி வதியும் தென் தொடர்மலையும், அமமலைக்குத் தென்பால் மந்திர மலையாய் இலங்கிய மகேந்திர மலையும், தமிழ் அகத்தில் நீங்கா வனத்தை நிலைபெறச் செய்தன. இன்னும பூவார்சோலை மயிலாடப் புரிந்து குயில்கள் இசைபாடப் புலவர் பாடும் புகழமைந்த பொன்னியாறு, சோழநாட்டை நீர் நாடாக்கியது.

---

* இது 'தமிழ்நாடு' என்னும் தாளின் ஆண்டு மடலினின்றும் எடுக்கப்பட்டது.

வையை யென்னும் பொய்யா நதியும், பொன் திணிந்த புனல் பெருகும் பொருநையெனும் திருநதியும், பழம் பதியாய பாண்டி நாட்டை வளம்பெறச் செய்தன. இன்னும் மஞ்சு சூழ் சோலை மலை நாடாய சேரநாட்டில் பெரியாறு பொழிந்து பெருவளம் பெருக்கியது. தென் குமரிக்குத் தென்பால், பல துளியாய்ப் பெருவெள்ளமாய்ப் பல்கிப் பெருகிய பஃறுளியாறும் பரந்து சென்றது. இத்தகைய நீர்வளமும் நிலவளமும் நிறைந்த தமிழ் நாடு அறத்திற்கோர் இருப்பிடமாய் அமைந்து விளங்கிற்று.

"வண்மை மிகுந்த தமிழ் நாடு"

"தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது" என்னும் உண்மையைத் தமிழ் மக்கள் கடைப்பிடித் தொழுகினார்கள். வேளாண்மை என்னும் விழுமிய பணியை மேற்கொண்ட தமிழ் மக்கள் அறவோர்க்கும் துறவோர்க்கும் ஆதரவாய் நின்று அற நெறியைப் போற்றினார்கள். வறுமை நோயகற்றும் வள்ளன்மை தமிழ் நாட்டினைத் தலைசிறப்ப விளக்கிற்று. வரையாது பொருள் வழங்கி வண்மைக்கோர் இருப்பிடமாய் விளக்கிய வள்ளல்களின் வரலாற்றைத் தமிழ் நூல்கள் விளக்குகின்றன. அறிவால் குறைந்த உயிர்களிடத்தும் அருள் நெறிகாட்டிய வள்ளல்களின் பெருமை உலகம் உள்ளளவும் அழியாததாகும். செழித் தோங்கிப் படர்வதற்குக் கொழு கொம்பின்றி நிலத்தில் குழைந்து கிடந்த ஓர் முல்லைக் கொடியின் துவண்ட நிலைகண்டு மனமுருகி, அக்கொடிக்குப் படரிடமாய்த் தன் அழகிய தேரை விட்டுச் சென்ற வள்ளலின் வரலாறு பழந் தமிழ் நூல்களில் பாராட்டப்படுகின்றது. இன்னும் 'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை' என்று புகழப்பட்ட பாரி என்னும் வள்ளலும் நம் தமிழ் நாட்டின் திருமகனே யாவான். இவ்வாறு அன்பும், அருளும் தமிழ் நாட்டில் நிறைந்து தமிழ் மக்கள் களித்துச் செழித்து வாழ்வாராயினர்.

"வீரம் செறிந்த தமிழ் நாடு"

வண்மையில் ஒப்புயர்வற்று வாழ்ந்திருந்த தமிழ் மக்கள், ஆண்மையிலும் அவ்வாறே தலை சிறந்திருந்தார்கள். ஆண் மக்கள் அனைவரும் ஆண்மையும் வீரமும் நிறைந்து விளங்கினார்கள். பெண்களும வீரமக்களைப் பெற்றெடுத்த வீரத்தாயராக விளங்கினார்கள். அமர்க்களம் செல்லுமாறு போர்க்கோலம் புனைந்து நின்ற தனமகனை நோக்கி 'ஐயனே! நீ மாற்றருடன் போர்புரிந்து வெற்றிபெற்று மீண்டால், நான் மிகமகிழ்வேன். அவ்வாறன்றித் தோல்வியுற நேரின், அஞ்சா நெஞ்சோடு அமர்க்களத்தில் நின்று மாற்றாரது அம்பு, நின் மார்பில்

பாய்ந்து உயிர் துறப்பாயாயின் உன்னைப் பெற்றபோதினும் பெருமகிழ்வடைவேன்' என்று ஆசிகூறித் தன் அருமைத் திருமகனை அமர்க்களத்துக்கு அனுப்பிய வீரத்தாயர் விளங்கிய நாடு நம் தமிழ் நாடேயாகும். இன்னும் தமிழ்நாட்டின் பெருமையை இந்திய நாடு முழுமையும் பரப்பக் கருதித் தமிழ்ச்சேனை கொண்டு வட நாடு சென்று, அயலரசர் அனைவரும் அஞ்சி அடங்க இமய மலைவரையும் சென்று, அம்மலையில் தனது வெற்றிக் கொடியை நாட்டிய வீரனை **கரிகாற் பெருவளத்தான்** தமிழ் அரசனேயாவான்.

அன்றியும் தமிழ் நாட்டின் பெருமையையும் ஆற்றலையும் அறியாது வட நாட்டரசர் இருவர் தமிழ் வீரத்தை இகழ்ந்துரைத்தார் என்று கேள்வியுற்று அடங்காச் சீற்றம் கொண்டு வடநாட்டின்மீது படை எடுத்துச் சென்று அவரது செருக்கையும் சிறுமையையும் அமர்க்களத்தில் அழித்து, சிறைசெய்து மீண்ட **சேரன் செங்குட்டுவ**னும் தமிழ் அரசனேயாவான். இவ்வாறு பெருமையும் புகழும் நிறைந்து வீரம் செறிந்த நாடாய் நம் தமிழ்நாடு விளங்கிற்று.

"மறைகள் மலிந்த தமிழ் நாடு"

இனி உலகில் வாழும் மக்களது உயிர்க்கு உறுதி பயப்பனவாகிய உண்மைகளை உயரிய ஞானத்தால் கண்டு உணர்த்திய ஆன்றோர் தோன்றிய நாடும் தமிழ் நாடேயாகும். அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப் பொருள் நான்கையும் மறை முனிவர் நால்வர்க்கும் தென்முகப் பெருமான் தெரிவித்த நாடு தமிழ் நாடேயாகும். உறுதிப் பொருள்களில் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாய வீட்டை விடுத்து அறம், பொருள், இன்பமாகிய மூன்றையும் முப்பாலாக வகுத்துரைத்த தெய்வப்புலமைத் **திருவள்ளுவனார்** தோன்றியதும் தமிழ் நாடேயாகும். உலகில் வாழும் மக்களுக்கெல்லாம் உயர்நெறி காட்டிய புலவர் பெருமான் தோன்றிய பெருமை, தமிழ் நாட்டிற்கே உரிய தென்னும் உண்மை,

"வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"

என்னும் அழகிய மொழிகளால் இனிதுணரப்படும். இன்னும் நயம் தெரி புலவர்க்கு நல்விருந்தாய், கவி நயமும் கற்பனையும் கனிந்து இலங்கிய காவியம் வரைந்த கம்பர் பெருமான் பிறந்ததும் தமிழ் நாடேயாம். இன்னும் தமிழ் மக்களது

பெருமைக்கும் செம்மைக்கும் என்றும் அழியாச் சான்று பகர்வதாய்ச் **சிலப்பதிகாரம்** என்னும் சீரிய நூலைச்செய்த சேரர் சிகாமணி தோன்றியதும் தமிழ் நாடேயாகும். இந்நூல் கற்றறிந்த புலவர்களுள்ளத்தைக் கவர்ந்து தமிழ் நாட்டின் பெருமைக்கு ஓர் கலங்கரை விளக்கமாய் நிற்கும் தன்மை "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு" என்னும் உண்மை உரையால் இனிது விளங்கும்.

இனி, கற்றோர் யாவரும் அறியா அறிவு பெற்ற ஆன்றோர், பத்திமையால் பணிந்து பாமாலை பாடி, உலகினுக்கு ஒளிநெறி காட்டியதும் தமிழ் நாடேயாகும். நிறைமொழிமாந்தர் ஆணையில் அமைந்த மறைமொழியாய மந்திரம் நிறைந்ததும் தமிழ் நாடேயாகும். தொண்டர் நாதனைத் தூதனாய் விடுத்ததும், முதலையுண்ட பாலனையழைத்ததும், எலும்பு பெண்ணுருவாகக் கண்டதும், மறைக்கதவினைத் திறந்ததும் தமிழ் மொழியின் மந்திர வலிமையே யாகும்.

மன்னனது வெப்புநோய் மாற்றிய மந்திர ஏடும், வெந்தழலால் வேகாது விளங்கிய ஏடும், வெள்ளத்தை எதிர்த்த வீர ஏடும், இன்னும் எண்ணரிய மந்திர ஏடும் இலங்குவது தமிழ் மொழியிலன்றோ? இறைவனை நினைந்து நெக்கு நெக்குருகி நெஞ்சம் குழைந்து உயிர்கள் அன்பு நெறியைப் போற்றுதற்குரிய ஆலயங்கள் அழகுற விளங்குவதும் தமிழ் நாடேயாகும். பிறவா யாக்கைப்பெரியோன் கோயிலும், அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும், நீலமேனி நெடியோன் கோயிலும், மாலை வெண்குடை மன்னவன் கோயிலும் மலிந்து உயிர்களுக்கு ஒளி நெறி காட்டிய நாடு தமிழ் நாடேயாம். கோயிலில்லாவூரில் குடியிருக்க வேண்டா மென்னும் பழமொழியைப் போற்றி வாழ்ந்த தனி மக்கள் வாழ்ந்ததும் தமிழ் நாடேயாகும்.

"நீதி நிறைந்த தமிழ் நாடு"

நீதியே உயிரினும் உயர்ந்ததென்று கருதி ஒழுகிய நாடு தமிழ் நாடேயாகும். பலவகுப்பார் வாழும் நாட்டில் ஒரு வகுப்பார்க்கு ஒரு நீதி என்னாது எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும் அரச நீதி ஒன்றே என்று அறிவுறுத்தியது தமிழ் நாடேயாகும். தன் மகன் தவறு செய்யினும், தானே தவறு செய்யினும் செம்மை தவறாது நீதி செலுத்திய மன்னவர் தமிழ் மன்னவரே யாவர். ஒரு பசுவின் கன்றை அறியாதுகொன்ற தன்மைந்தன் மீது தேராழியைச் செலுத்தி நீதிபோற்றிய மன்னவன் ஆரூரை ஆண்ட தமிழ அரசன் அன்

ரோ? தவறு செய்த மைந்தன் தன் மைந்தன் என்றும் கருதாது அரச குலத்தை வாழ்விக்க அவன் ஒருவனே யுள்ளான் என் பதையும் உணராது, அறநெறி நிற்றலே அரசன்கடமை. உயரிய உண்மை ஒன்றையே துணைக்கொண்டு, தன் மைந்தன்மீது தானே தேர்க்காலைச் செலுத்திய அரச நீதியின் பெருமையை அளவிட்டுரைத்தல் ஆகுமோ? இன்னும் குற்றம் ஒன்றும் செய் யாத கோவலனைக் கொல்லுமாறு ஆணை செய்த தமிழ் மன்னன், தான் அறியாது இயற்றிய தவற்றை அறிந்தபோது ஆவிசோர்ந்து தாழ்ந்த குடையோடும் தளர்ந்த செங்கோலோடும் அரியாசனத் தினின்றும மயங்கி விழுந்து மாண்டான் அன்றோ? இவ்வாறு அரசன் நீதி தவறாது செங்கோல் செலுத்திய தன்மையால் தமிழ் நாட்டில் மாதவர் நோன்பும் மடவார் கற்பும் தலைசிறந்து விளங் கிற்று. இத்தகைய மன்னரை உயிராகவும் மன்னுயிரை உட லாகவும் தமிழ் நாடு கருதிய தன்மை,

> "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
> மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்"

என்னும் புறநானூற்று அடிகளால் இனிது விளங்கும். தமிழ் மன்னன் குடிகொன்றிறை கொள்ளும் கொடுங்கோலனாய் அமை யாது, ஆறிலொன்று இறைபெற்று குடிகளைக் கண்ணும் ஆவியு மாய்க் காத்து வந்தான் என்று பழந் தமிழ்க் கதைகள், பாராட் டிக் கூறுகின்றன. அடுவேலால் அரசாங்கத்தை நடத்தாது செங்கோலால் அரசு புரிந்தமையால் தமிழ் அரசு நெடுங்காலம் நிலைத்திருந்தது. இன்னும் அறிவினாற் சிறந்த ஆன்றோரைத் துணைக்கொண்டு அரசியல் நிகழ்ந்தமையால் செம்மை சான்ற நன்னெறியே அரச நெறியாகத் திகழ்ந்தது. அமர் நிகழுங் காலத்து அரசனே போர்க்கோலம் புனைந்து வீரமாலை அணிந்து சேனையின் முன்னின்று போர் புரியும் பெரு வீரனாய் விளங்கி னான். இத்தகைய அரசர் சமயப் பற்றும் தாய்மொழிப் பற்றும் உடையராய்த் திகழ்ந்தமையால், தமிழ் நாடு எங்கும் எண்ணி றந்த ஆலயங்களும், தமிழ் மொழியில் தலை சிறந்த நூல்களும் இயற்றுவித்தார்கள். இவர்கள் அமைத்த ஆலயங்களின் அருமை பெருமைகளை இக்காலத்திய மேல் நாட்டுப் புலவரும் வாயாரப் புகழ்ந்து வாழ்த்துகின்றார்கள் இந்நாட்டுப் பழைய ஆலயங் களில் விளங்கும் அழகிய சிற்ப வேலைகளும், சித்திர வேலை களும், விசித்திர வேலைகளும் தமிழ் மக்களது தொன்மைசான்ற நாகரிகத்தினை வெள்ளிடை மலைபோல் விளக்குகின்றன.

காதலும் கற்பும் இனிதமைந்த கன்னியர் வாழ்ந்ததும் தமிழ் நாடு. தாம் காதலித்து மணந்த கணவரை யன்றி மற்றைய

ஆடவரை மனதிலும் தீண்டாத மறுவிலா நெறியே தமிழ் மாதர் நெறியாகும். அவ்வாறே தாம் மணந்த மங்கையரையன்றி மற்றைய மாதரைச் சிந்தையாலும் தொடாத செந்நெறியே தமிழ் நாட்டு ஆடவரது அறநெறியாய் அமைந்திருந்தது. தம் தலைவரல்லாத பிறர்நெஞ்சு புகுதலை நிறையமைந்த மாதர்க்குக் குறையெனக் கருதிய நாடு தமிழ் நாடேயாகும். கற்பெனும் பெருமையைத் தெய்வமாகக் கொண்டு வணங்கிய நாடும் தமிழ் நாடே. கற்பின் அளப்பரும் பெருமையை உலகிற்கு அறிவுறுத்தியதும் இந்நாடே. ஆக்கலும் அழித்தலும் நிறையமைந்த மாதரால் ஆகுமென்று வெள்ளிடை மலைபோல் விளக்கியதும் இந்நாடே. மனநிறை வாய்ந்த மங்கையர் வாழ்ந்த தமிழ் நாட்டில் காதலனை இழந்து கண்ணீர் வடித்த கண்ணகியார்,

"மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கி யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையையும்"

என்று வஞ்சினம் கூறியபோது மதுரைமா நகரம் எரியினுக் கிரையாகிற் றென்று செந்தமிழ் நூலாகிய **சிலப்பதிகாரம்** கூறுகின்றது. இதனால் மறுவிலாக் கற்பு வாய்ந்த மங்கையர் தம் சொல்லால் உலகழிக்கும் திறம்பெற்றிருந்தா ரென்பது இனிது விளங்கும். இவ்வாறன்றி உலகினை வாழ்விக்கும் உயரிய திறமும் கற்பமைந்த மங்கையர்பால் களித்திலங்கக் காணலாம். ஆசிலாக் கற்புவாய்ந்த ஆதிரை என்னும் நல்லாள் கையினால் அளித்த அன்னம் அள்ள அள்ளக் குறையாது நிறைந்து தமிழ் நாட்டில் ஊண் ஒலியை ஒடுக்கிற்றென்று **மணிமேகலை** கூறுகின்றது. இன்னும்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்று பொய்யாப் புலவர் புகழ்ந்த வண்ணம் வாய்மொழியால் உலகினை வாழ்விக்கும் உயரிய திறமை, நிறையமைந்த தமிழ் மாதர் வரலாற்றில் இனிது இலங்குகின்றது. அருந்தவ முடையார்க்கே உரியதாகப் புகழ்ந்து கூறப்படுகின்றது. ஆக்கும் திறமும் அழிக்கும் திறமும் மாதரது கற்பு நெறியில் அமைந்திருந்ததாலேயே அந்நெறியைத் திருநெறியாகக் கொண்டு தமிழ்நாடு வாழ்த்தி வணங்கி வழிபடுவதாயிற்று. கற்பினால் சிறந்த கண்ணகியார் பொற்புடைய தெய்வமாய் இத்தமிழ் நாட்டில் இன்றும் நின்று நிலவுவதே இவ்வுண்மைக்குத் தலைசிறந்த சான்றாகும்.

"எம்மதமும் சம்மதமாய் ஏற்று நின்ற தமிழ்நாடு"

பழந்தமிழ் நாட்டில் பலவகைச் சமயங்கள் பரவியிருந்தும் பல்வேறு வகுப்பார் வாழ்ந்திருந்தும் சமயப்போரும் சாதிப் போருமின்றி ஒரு வயிற்றில் பிறந்த மக்கள் போலவே தமிழ் மக்கள் வாழ்வா ராயினர். செம்பொருளாய சிவபெருமான் கோயிலும், நீலமேனி நெடியோன் கோயிலும், அறவோர் பள்ளியும் தமிழ் நாட்டில் அடுத்தடுத்து அமைந்திருந்தன. தமிழ் மக்கள் தமது அறிவிற்கும் மனப்பான்மைக்கும் பொருந்திய சமய நெறியை ஏற்றொழுகும் உரிமை பெற்றிருந்தார்கள். சிலப்பதிகாரம் செய்த இளங்கோவடிகள் சமணசமய அடியாராகவும், அவரது உடன் பிறந்தவனாய சேரன் செங்குட்டுவன் சைவ சமய சீலனாகவும் விளங்கிய தன்மையே இவ்வுண்மைக்குத் தலைசிறந்த சான்றாகும். இவ்வாறே அறுபான் மும்மை அடியார்களில் ஒருவராய மங்கையர்க்கரசியார் சைவ நெறியில் சிறந்த பற்றுடையவராயிருப்ப அவரது தலைவனாகிய பாண்டிய மன்னன் சமண சமயம் சார்ந்தொழுகுவா னாயினான். இத்தகைய மனப்பான்மை, தமிழ் நாட்டில் சமயப்பொறுமை இனிது இலங்கிற் றென்பதற்கு என்றும் அழியாச்சான்று தருவதாகும்.

"சாதி எனும் சுழிகடந்த சமத்துவநன் னாடு"

இன்னும் இவ்வுலகில் மக்களாய்ப் பிறந்தாரெல்லாம் பிறப்பால் ஒற்றுமை யுடையவரென்றும், ஒழுக்கத்தாலும், செய் தொழிலாலுமே வேற்றுமை உலகில் உண்டென்றும் விளக்கமாக எடுத்துரைத்த நாடு இத்தமிழ் நாடேயாகும். ஏனைய நாடுகள் சாதி, குலம், பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறி நின்ற காலத்தில் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்ற உண்மையை உலகினர்க்கு உணர்த்தியது தமிழ் நாடேயாகும். தொழில் முறையில் எத்தொழிலையும் இழிதொழில் என்று இகழாது மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் தொழில்களெல்லாம் சிறந்த தொழில்களாகவே பாராட்டப்பட்டன. இதனாலேயே தமிழ் நாட்டில் வழங்கும் வகுப்புப் பேர்களெல்லாம் பிறப்பினை அடிப்படையாகக் கொள்ளாது தொழில் முறையால் பிறந்த பேர்களாகவே விளங்கக் காண்கிறோம். மறை பயிலும் தொழிலை மேற்கொண்ட மாந்தர் மறையோர் என்றும், வேளாண்மை என்னும் விழுமிய தொழிலை மேற்கொண்ட மக்கள் வேளாளரென்றும், வாசம் விற்பவர் வாசவர் என்றும், வெற்றிலை விற்போர் இலைவாணிகர் என்றும், பறைசாற்றுவோர் பறையர் என்றும், பண்ணோடுபாட வல்லோர் பாணரென்றும் இவ்வாறே பலவகுப்பாரும் அவரவர் மேற்கொண்ட தொழி

லுக்குரிய பெயர்பெற்று வாழ்வாராயினர். எக்குடியில் பிறப்பினும் எத்தொழிலைச் செய்யினும் ஒழுக்கமுடையவர் உயர்ந்தவரென்றும், ஒழுக்கமற்றவர் தாழ்ந்தவ ரென்றும் தமிழ் மக்கள் கருதுவாராயினர்.

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்பது தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் திருவாக்காகும்.

"இறை ஒளியும் இசை ஒளியும் இலங்கி நின்ற தமிழ்நாடு"

இன்னும் இயற்கை நலங்கள் இனிதமைந்த இந்நாட்டில், இறைவனை இயற்கை அழகில் கண்டு வணங்கிய வரலாறு அறிவுடையார் கருத்தைக் கவர்வதாகும். கண்ணினைக் கவரும் வனப்புவாய்ந்த மலைநாட்டில், மந்தியுமறியா மரங்களும், மஞ்சுதோய்ந்த சோலைகளும், மனத்தினை ஊக்கி ஒருவழி நிறுத்த, இளமையும் அழகும் இனிதமைந்த பாலன் வடிவமாக இறைவனைக் கண்டு வழிபாடியற்றிய பெருமை தமிழ்நாட்டிற்கே யுரியதாகும். இன்னும் வேங்கடமலையின் விழுமிய சோலையினும், "கொம்பார் சோலைக் கோல வண்டியாழ் செய்" குற்றாலத்தினும் இறைவனது பெருமையைக் கண்டு வழிபட்டு நின்றது தமிழ் நாடேயாகும். இறைவனது பெருமையைக் குழலினும் யாழினும் அமைத்து ஊன்கரைந்து, உயிர்கரைந்து உருகி நின்றதும் தமிழ் நாடேயாம். குழலும், வீணையும், யாழும் குழைய மழலை மொழிகளால் மறைமொழி யோதிய ஞானப்பாலர் பிறந்ததும் இந்நாடே. திறம்படக் கற்ற கல்வியின் திண்மையால் இறைவனது நெற்றிக்கண்ணைக் கண்டும் கலங்காது நின்ற புலவரேறுகள் பிறந்ததும் இந்நாடே. இத்தகைய புலவரது வன்மையால் வளம்பெற்று இயல் இசை நாடகம் என்னும் முத்துறைகளிலும் மேம்பட்டு என்றும் சீர் இளமை குன்றாச் செம்மொழியாய் விளங்கும் தமிழ்மொழி வழங்கும் திருநாட்டை மனமொழி மெய்களால் வழிபடுகின்றேன்.

திருஞானசம்பந்த அடிகள் திருமுலைப்பாலுண்ட உண்மை

[திரு. மா. வே. நெல்லையப்பபிள்ளையவர்கள் B. A.]

திருஞானசம்பந்தப் பிள்ளையார் உலகுய்ய மண்மேற் பிறந்து மூன்று ஆண்டெய்தலும் அவர் முன்பு சிவபெருமான் தம்மினின்றும் பிரியாத அருட்பெருஞ் செல்வியுடன் விடையூர்தியின்மே லெழுந்தருளித் துணை முலைகள் பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத்திற் கறந்தூட்டென்று கூற, அம்மையார் அவ்வாறே பொன்வள்ளத்திற் பால்கறந்து அதனுடன் சிவஞானத்தைக் கலந்து அழுகின்ற பிள்ளையார்க்கு ஊட்டி அருளினார். திருமுலைப்பா லுண்டலாகிய செயலில் அடக்கியுள்ள உண்மைகளை எடுத்துக் கூறுதலே இக்கட்டுரையின் கருத்தாகும்.

திருமுலைப்பா லுண்டலுக்குக் காரணமாயிருந்தது திருஞானசம்பந்தப் பிள்ளையாருடைய அழுகை. இந்த அழுகையானது அவருக்குச் சிவபெருமானைப் பிரிந்த பிரிவுணர்வு ஒவ்வோர் காலம் எழுதலினால் உண்டாயிற்று. இதனைச் சேக்கிழார் அடிகள்,

'பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதல் மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருளத்
தொண்டினிலை தரவருவார் தொடர்ந்தபிரி வுரைவொருக்காற்
கொண்டெழலும் வெருக்கொண்டாற் போலழுவார் குறிப்பயலாய்'

என்று கூறியிருக்கிறார்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் முற்பிறப்பில் சார்பு, செய்கை, சேர்வு, மெய்யுணர்வு (சரியை கிரியை யோகஞானங்கள்) நிரம்பி அந்த மெய்யுணர்வுடன் இப்பிறப்பில் சிவநெறித் தொண்டு செய்தற்பொருட்டுப் பிறந்த சாமுசித்தர். ஆதலின் அவர் சிவன் திருவடி மறவா உள்ளப் பான்மையர். ஆயினும் அவர் மாயா உலகிற் பிறந்து மூன்று ஆண்டுமாத்திரம் கழிந்திருத்தலின் அவருக்கு முற்பிறப்பிலே நிரம்பியிருந்த மெய்யுணர்வு அப்பொழுது நன்றாய்த் தோன்றவில்லை. பொதுவாக மக்களுக்கு ஏழு ஆண்டு ஆயின பின்னே நன்று தீது பகுத்தறியும் அறிவு உண்டாகத் தொடங்குகிறதென்று இக்காலத்துச் சட்டநூல் வல்லார் கூறுகின்றனர். மூன்று ஆண்டுகள் மட்டும் கழிந்திருப்பினும் அவர் முற்பிறப்பில் நிரம்பிய மெய்யுணர்வுடையராதலின் அவருக்கு ஒவ்வொரு காலத்தில் பொதுவா

யுள்ள மறதி நீங்கிப் பிரிவுணர்வு உண்டாயிற்று. அந்தப் பிரி வுணர்வு உண்டான பொழுதெல்லாம் பிரிவாற்றாமையால் அழு தார். அவரது தாய் தந்தையர் இந்த அழுகையைப் பொது வாகக் குழந்தைகள் அழுகிற அழுகை என்று நினைத்திருந் தார்போலும்!

இந்த அழுகையானது பிள்ளையாரது தந்தையார் அவ ரைத் திருக்கோயிற் குளத்துக்கு உடனே கொண்டுபோய்க் கரை யிலே நிறுத்திவிட்டுத் தாம் புனலில் நீராடச்சென்று மறைதலும் அவருக்கு உண்டாயிற்று. பிள்ளையாரது கண்களுக்கு உடனுற வுத் தந்தையார் காணுமற் போகவே அவர் உயிருறவுத் தாயும் தந்தையுமாகிய அறப் பெருஞ் செல்வியையும் சிவபெருமானை யும் முற்பிறப்புணர்வு மூளுதலினாலே நினைத்து அம்மையே அப்பா என்று அழுதார். இதனால் நாம் அறியவேண்டிய உண்மை என்னவெனில், உயிர்களுக்குப் பொருட்பற்றுடன் உயிர்ப்பற்றும் நீங்கினாலொழிய இறைவனிடத்தில் பற்றுதலுண் டாய் உண்மையான அன்பு உண்டாகாது என்பது. அம்மையே என்று அவர் முதலில் அழைத்ததனால் அம்மை மூலமாய் அப் பனை அடையவேண்டும் என்பது பெறப்படுகின்றது. அதா வது சிவபெருமானுடைய அருளினாலேயே அப்பனை அடைதல் வேண்டும் என்பது கருத்து. 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்று கூறினார் மணிவாசகப் பெருமானும்.

இந்த அழுகையானது பிரிவு உணர்ச்சியினாலுண்டா யிற்று. ஒன்றுதல் உணர்ச்சி உண்டாகாமல் பிரிவுணர்ச்சி உண் டாகாது. இந்த ஒன்றுதல் உணர்ச்சிதான் அத்துவிதத் தொடர்பு ஆகும். அத்துவிதத் தொடர்பு என்பது உயிருக் கும் இறைவனுக்கும் எப்பொழுதும் உளதாகிய ஒற்றுமைத் தொடர்பு. இந்தத் தொடர்பை உயிர்கள் கட்டுக்காலத்தில் மறந்திருக்கிறார்கள். ஆணவ மலம் இந்தத் தொடர்பை மறைத்த லினால் உயிர்கள் அதனை அறியாமலிருக்கிறார்கள். அப்பொழுது இறைவன் உயிர்கள் தம்மை அறியாமலே அவர்களுடன் அத்து விதமாய்க் கலந்திருக்கின்றான். அப்படிக் கலந்திருத்தலினாலே தான் உயிர்களுக்கு அறிவு வேட்கை செயல்கள் ஒருபுடைத் தன்மையில் நிகழ்கின்றன. உயிர்கள் சார்பு செய்கை சேர்வு மெய்யுணர்வு (சரியை கிரியை யோக ஞானம்) ஆகிய பயன் கருதா விரதங்களைப் பல பிறப்புகளிலுஞ் செய்து அவைகளின் பயனாக இறைவனுடைய அருள்வீழ்ச்சி (சத்திநிபாதம்) அடை யப்பெற்று இறைவனுடன் இரண்டறக் (அத்துவிதமாய்) கலந்து ஒன்றுதற்றன்மையை அடைகிறார்கள். இந்த ஒன்றுதற்றன்

மையைத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் முற்பிறப்பில் அடைந்திருந்ததனாலே அவர் மூன்று ஆண்டுள்ள பிள்ளையாயிருந்த காலத்தும் பிரிவுணர்ச்சியை ஒவ்வோர் காலத்தில் அடைந்தார். இதனால் நாம் அறியவேண்டிய உண்மை யாதெனில் நாம் இறைவனுடன் ஒன்றுதற்றன்மையை அடைதற்கு ஒவ்வொருவரும் நமது தகுதிக்குத் தக்கவளவில் சார்பு செய்கை சேர்வு மெய்யுணர்வு ஆகிய விரத முறைகளில் யாதாமொரு நிலையில் நின்று பயன் கருதாது இறைவனை வழிபட்டுத் தொண்டு செய்து வரவேண்டும் என்பது.

இனித் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருத்தோணியப்பரது கோயிற் சிகரத்தைப் பார்த்து அழுதலினாலே தான் திருத்தோணி அப்பராகிய சிவபெருமான் பொன்மலை வல்லியுடன் அவர் முன் எழுந்தருளி அருளாகிய பால் அடிசில் ஊட்டி அருளினார். அழாத பிள்ளைக்குத் தாய் பால் கொடுக்காததுபோல் அழுகையில்லாவிடில் சிவபெருமானும் வரமாட்டார். ஆகையினாலே ஒருவர் உலக வாழ்விலுள்ள சிற்றின்பங்களில் உள்ளங் கொள்ளாதவராய் இறைவனது அருளை அடையவேண்டுமென்னும் விருப்பம் வைத்து அதனை நாடினாலொழிய இறைவன் அவர்முன் வரமாட்டார் என்பது பெறப்படுகிறது. திருநாவுக்கரசு நாயனாரும் இக்கருத்துப்பற்றியே 'தேடிச்சென்று திருந்தடியேத்துணை-நாடிவந்து நம்மையு மாட்கொள்வார்.' என்றார். இறைவன் தகுதியில்லாத காலத்து உயிர்களிடத்து வந்தாலும் பயனிலையாதலின் அவர் வரமாட்டார். இதனால் நாம் அறியவேண்டிய உண்மையாவது நாமெப்பொழுதும் இறைவனுடைய அருளையே நாடி நமது அறிவு வேட்கை செய்கைகளை நிகழ்த்தியும் அருளுக்கு மாறாக ஒன்றும் செய்யாமலும் நாம் உலகில் ஒழுகி வருதல் வேண்டும் என்பது. அப்படி ஒழுகினால் நம்மிடத்தில் அருளாட்டம் மேலு மேலும் வளர்ந்து பெருகி அதனால் நமக்கு இறைவன் அருள் செய்தற்குத் தகுதியுடையவர்களாவோம்.

சிவபெருமான் அம்மையாரைக் கொண்டு பிள்ளையாருக்குப்பால் ஊட்டினது அவர் தமது அருள் வலியாகிய துணைக் காரணத்தினால் உயிர்களுக்கு அருள் செய்கிறார் என்னும் உண்மையைக் குறிக்கிறது. அதனோடு உயிர்களும் முன் கூறியபடி அருளைத் துணையாகக் கொண்டு சிவபெருமானை அடைதல் வேண்டும் என்பதையும் விளக்குகிறது. அருள்தான் உயிர்களைச் சிவபெருமானிடம் சேர்க்கிறது. அருள்தான் ஒருயிர் பிறவுயிர்களுடன் அன்புடன் ஒழுகும்படி செய்கிறது. அருள்

விளக்கம் உலகில் இல்லாவிடில் உலகவாழ்வு நடைபெறாது. அம்மையார் பிள்ளையாருக்குப் பாலூட்டி அவரது கண்ணீரைத் துடைத்து அழுகை நீக்கிய செய்தி அருளின் சிறப்பை வலியுறுத்துகின்றது.

சிவபெருமான் அம்மையாரைக் கொண்டு பிள்ளையாருக்குப் பாலூட்டுவித்து அவரை ஆண்டருளினார். பிள்ளையார் மகன் வழியை (புத்திரமார்க்கம்) விளக்க வந்த குரவர் ஆதலின், அவருக்கு மகன் என்னும் முறைமையில் அனைத்துலகுக்குந் தாயார் பால் ஊட்டி அருளினால் ஆண்டது பொருத்தமாகின்றது. ஒருவருக்கு உடலுறவுத் தாயானவள் தன் பிள்ளைக்குப் பால்கொடுத்து அப்பிள்ளையினது உடற் பசியை அந்நேரத்தில் மாத்திரம் நீக்குகிறாள். அனைத்துயிர்களுக்குந் தாயாகிய அம்மையாரது அருளுடலினின்றும் பொழிகின்ற அறிவுப் பாலூட்டிப் பிள்ளையாருக்கு இருந்த அருட்பசியை அஃது இனி மேல் வாராதிருக்கும்படி நீக்கினார். உலகவழக்கில் அழுதபிள்ளை தாயினது பாலை உண்டு சிறிதுநேரம் பசி நீங்குதல்போல் அருட்பசியையுடைய உயிர்கள் அருளை விரும்பி இரங்கி ஏங்கினால் உலகத் தாயினுடைய அருட்பாலைக் குடித்துப் பிறப்பிறப்புத் துன்பம் நீங்கிப் பேரின்ப நலம் அடையும் என்பது இதனால் நமக்கு விளங்குகின்றது.

பிள்ளையார் உலக அம்மையாரால் அறிவுப்பால் ஊட்டப் பெற்று அதனைப் பருகலும் அவர் நால்வகை அறிவுகளையும் ஒருசேர அடைந்தார். நால்வகை அறிவுகளில் கேட்டலும் நினைத்தலும் (சிந்தித்தலும்) ஆராய்ச்சி அறிவால் உண்டாவன; தெரிதலும் துணிதலும் (நிட்டையும்) துப்புரவறிவால் (அநுபூதி ஞானத்தால்) உண்டாவன. ஆராய்ச்சி அறிவு ஒருவருக்குச் சிவபெருமானுடைய பொது இயல்பை (தடத்த இலக்கணம்) விளக்கும் தன்மையுடையது. துப்புரவறிவு சிவபெருமானுடைய உண்மை இயலை (சொரூப இலக்கணத்தை) விளக்கும் தன்மையுடையது. ஆராய்ச்சி அறிவு துப்புரவறிவுக்கு வழியாயுள்ளது. இந்த நான்குவகை அறிவுகளும் பொதுவாய் உயிர்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாயுண்டாகும். பிள்ளையார் முற்பிறப்பில் நிரம்பிய மெய்யுணர்வு அடைந்தவர் ஆதலின், அவருக்கு நான்குவகை அறிவுகளும் ஒருசேர விளங்கிற்று. இவை விளங்குதலும் சிவபாத இருதயருடைய பிள்ளையார் ஆனவர் திருஞானசம்பந்தப் பிள்ளையாராயினார். அவர் சிவபெருமானால் இவ்வாறு ஆளப்பெற்றுத் திருஞானசம்பந்தப் பிள்ளையாராயினதால் உலகில் தகுதியுள்ள உயிர்களை ஆண்டருளிச் சிவபெருமா

னிடத்துத் தொடர்பு படுத்திச் (சம்பந்தஞ்செய்வித்து) சேர்ப்பிக்கும் சிவநெறிக் குரவராகின்றனர். சிவநெறியிலுறை மக்களாகிய நாம் திருஞானசம்பந்தப் பிள்ளையாரை வழிபட்டு அவரிடத்து உண்மையான அன்பு செய்து வருவோமானால் ஆட்கொள்ளப் பெறும்படி செய்வர். அவ்வாறு நாம் தகுதியுடையராவதற்கு நாமும் முயலவேண்டும். நாம் உண்மையாக முயன்றாலொழிய நமது குரவர் நம்மைத் தகுதியுடையவர்களாக ஆக்குதல் முடியாது. அதற்கு நான்குவகை அறிவுகளையும் அடைதல்வேண்டும். முதலாவது சிவஞான போத முதலிய அருளிலங்கு அறிவு நூல்களைக் கற்றல் வேண்டும் கற்ற கருத்துக்களிலுண்டாகும் ஐயந்திரிபு நீங்கும் வண்ணம் அறிந்தார் வாயிற் கேட்டல்வேண்டும், கேட்ட பொருள்களை நினைவு செய்து உளத்திற் கொள்ளவேண்டும்: உள்ளத்திலுள்ள காமம் வெகுளி மயக்கங்களை நீக்கி நாம் இவ்வாறு ஆராய்ச்சி செய்தால் அந்த ஆராய்ச்சியில் சிவபெருமானுடைய அருள் விளங்கித் தெள்ளறிவை உண்டுபண்ணும்: அந்தத் தெள்ளறிவு பெற்றபொழுது அறிவு உண்மைகளெல்லாம சிவபெருமானது அருளினால்தாமே உள்ளத்தில் விளங்கும்: அவைகளை அறிதற்கு முன் ஆராய்ச்சி அறிவுக்கு வேண்டப்பட்டனபோல் அளவைகளாகிய கருவிகளை (reasoning processers) வேண்டப்படுவனவல்ல; தெள்ளறிவின் வழித் துணிவறிவு (நிட்டை) உண்டாய் அது சிவபெருமானது பேரறிவுடன் கலக்கும்படி செய்யும்; அதனால் பேரின்ப நிலை உண்டாகும். இவ்வுண்மைகள் சேக்கிழார் பாடிய

> "சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
> பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
> உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம்
> தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்"

என்னும் பாட்டினால் நன்கு விளங்கும். முறையே நோன்பு செய்து அடைந்த மெய்யுணர்வினால் உயிர்கள் வீடுபெறலாமே அன்றி, சில நெறிகள் சொல்லுகிறபடி குருட்டுநம்பிக்கையினால் வீடு அடைதல் முடியாது. உயிர்கள் இறைவனுடன் இரண்டறக் கலத்தலே வீடு அடைதலாகும். இறைவன் பேரறிவுப் பொருளாதலின் அவனை அடையக் கருதுகிற உயிர்களும் நிறைந்த அறிவு அல்லது மெய்யுணர்வு உடையாரானால் இன்றி அமையாது வேண்டப்படுந் தகுதியாகின்றனர் எனச் சைவ நெறி கூறுகின்றது.

மேலே கூறியவாறு திருஞானசம்பந்தப் பிள்ளையார் மூன்று ஆண்டினில் சிவபெருமானால் ஆளப்பெற்றது அவர்

அதற்குப்பின் அருட்பிழம்பிற் கலக்கும்வரை வேத நெறி தழைத்தோங்கவும், சிவநெறி விளங்கவும், அடியார்கள் கூட்டம் வாழையடி வாழைபோலப் பொலிவு பெறவும் செய்தலாகிய சிவத்தொண்டுகளை யியற்றி உலகம் உய்யச் செய்தற் பொருட்டேயாம். இக்கருத்தினைச் **சேக்கிழார் அடிகள்,**

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

என்ற **பெரியபுராணப்** பாட்டினிற் கூறியருளினார். சிவ நெறிச் செல்வரும் தாங்கள் தாங்கள் அடைந்த அறிவளவில் இயன்றவரை சிவத்தொண்டு செய்து அம்மட்டில் உலகமுய்யச் செய்தல் அவர்களது கடன் ஆகின்றது என இதனாற் போந்த உண்மை புலப்படும். சிவநெறிச் செல்வர்கள் இந்த உண்மையை உணர்ந்து உலகில் ஒழுகி வாழ்ந்து சிறப்படையும்படி சிவபெருமான் திருவருள் புரிவாராக.

பெண்ணமிழ்தம்.

[திரு R. பாக்கபுரி பாலசுந்தரனவர்கள்]

மக்கள் எண்வயப்பட்ட இறைவனடியை யடைய அன்பென்னும் அறநெறியைப் பிடித்தொழுகல் வேண்டும். அவ்வன்பானது இறைவனாற்றலிலமைந்த இயற்கைப்பொருட்கள் பால் நிகழும். மக்களியற்கையையும் வெளியியற்கையையும் இயக்கி நிற்பது இறையருள். இவ்விரு வியற்கைகளும் ஒன்றுக்கொன்று துணைபுரிந்துகொள்ளக் கூடியன. மேலும் வெளியியற்கை மக்கள் நிலையைக்கண்டு தளர்ந்து அவர்களுக்கு நலந்தரு மியல்பிற்றும். அஃதெவ்வாறெனின், **மணிவாசகப் பெருமான்,**

"கீதமினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பாற்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதி குணமொன்று மில்லா னந்தமி லான்வரக் கூவாய்"

என இயற்கையைக் கண்டு, 'இறைவனை வரக் கூவுக! அவனைக்

கண்டு அளவில்லா வானந்தப் பேற்றினை யடைவேன்' என்று அவ்வியற்கைக் குயிலைத் தனக்குத் துணையாக்கியதையு முணர்க. இன்னும், கண்ணகி தன்காதலன் கோவலன் என்பான் பாண்டியனாற் கள்வனென்றே அறியாது பொய்க்குற்றம் சாற்றப்பட்டுக் கொலையுண்டதை யறிந்து,

"கள்வனோ வல்லன் கணவனென் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே......" (சிலப், ஊர்சூழ்)

என, விண்ணிலிலங்கும் வெங்கதிரோன்பாற் றன் குறையைக் கூறிப் பின்,

மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கி யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையையும்"

எனமொழிந்து உள்ளங்கொதித்து நிற்கவும், மக்கட்குத் துணையாயமைந்து ஒன்றுரை யொறுத்து அறநெறி நின்று வந்தார்க்குதவும் இறைவனாற்றலிலமைந்த வியற்கையாம் வெங்கதிரோன் அம்மதுரைமாநகரைத் தன்னழலுருவா லெரித்ததையுமோர்க.

இதனால் இறைநலம் இயற்கையிற்றோன்றி அறம் வளர்த்து மறந்தேயச் செய்வதையும் நன்குணர்ந்தா மன்றோ!

ஆகவே, இயற்கை இறைவனது நிறைவென்றும், இயற்கையைக் கண்டு வியக்குந்தோறு முண்டாகு மின்பமே இறைவனது இன்பமென்றும், இயற்கையின் வனப்பே இறைவனது திருவுருவமென்றும், இயற்கை நிகழ்த்தும் நன்னெறியே அவனது நெறியென்றும், அவ்வியற்கை நலத்தோடு ஒன்றுபட்டு வாழ்வோரே எஞ்ஞான்றுமின்ப மெய்துவரென்றும் இதனாற் றெளிகின்றமன்றோ!

இயற்கை நலத்தோடு கூடிவாழ்தல் இன்பமென்றோம். ஆகவே, அவ்வியற்கை நலம் பெரிதுங் கவிந்து நிற்குமிடம் எதுவென்று ஆராயுங்கால் பெண்மக்களென்று நன்கு புலனாகும். இதனாலியற்கை யழகொழுகும் பெண்மக்களோடு கூடிவாழ்தல் சிறப்புடைத்தாயிற்று. பெண்மக்களுடன் கூடிவாழ்வும் வாழ்வு இல்லறவாழ்வெனப்படும். பெண்ணில்லா மனை பாழன்றோ! 'பாழே மடக்கொடி யில்லா மனை' எனத் தேற்றேகாரங் கொடுத்துக் கூறிய ஔவை மொழியையுங் கண்டுணர்க. அதாஅன்றி, மனையில் வாழ்வாரும் பெண்ணின்றி நாவிற்குச் சுவையுணவைத்

தான் காண்பரோ! பெண்பாலார்க்கன்றே அட்டிற்றொழிற் பெரிதும் அமைவுடைத்து. அகத்துறவுபூண்ட இல்வாழ்வாராம் பொதுமறையாளரும் தன்காதற்கிழத்தி உயிர்நீத்த காலத்து அவ்வம்மையின் மடைத்தொழிலை வியந்து "அடிசிற் கினியாளே ......" எனக் கூறினர். உயிர்கள் நிலைபெற்று வாழ்தல் உணவினாலன்றே. மக்கள் உணவின்றி உயிர்வாழ்த லியலாதாகலானும், அவ்வுணவும் சுவைகுறைந்திருப்பின் நா ஏற்றுக்கொள்ளாதாகலானும், நறுமணம் வீசும் நல்லுணவையே மனைக்கிழத்தி சிறப்பச் செய்தலானும், அந்நல்லுணவாற் காதலன் உடல் நலங் குன்றாது நன்கமைதலானும், தமிழ்மறையோர் அவ்வெண்பாவில் 'அடிசிற்கினியாளே' என்னுஞ் சொற்றொடரை முன் யாதோரடைமொழியின்றியுங் கூறியுள்ளார். முல்லைநில முறையும் இல்லொழுக்கம் பொருந்தித் தன் கணவனுள்ளத்திற் குவக்குமாறு சுவை பொருந்திய அட்டிற்றொழிற் புரியுஞ் சிறப்பினை,

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதன் முகனே" (குறுந்)

என்னும் அடிகளாலுணர்க.

காதலி தன்னில்லத்திலுள்ள மற்றையர் செய்யும் அட்டிற்றொழிலால் தன் காதற்கணவனுக்கு ஒருகால் சுவைகுன்றியவுணவாக வாய்த்து விடுமோவென்ற வையங்கொண்டு தானே அத்தொழில்புரியச்சென்று, தன்காந்தள் மலர்போன்ற மெல்லிய விரல்களால் கட்டியாகவுள்ள தயிரைப் பிசைந்துகொண்டிருக்கையில், கணவன் பசியுடன் வரும் வேளையாயிற்றென்றெண்ணி சமயற்றொழிலை விரைவாகச் செய்வள். அக்கால் அவளரையிலுடுத்தின ஆடை நெகிழ்தலையுணர்ந்து தயிர்பிசைந்த கையினைக் கழுவியபிறகு ஆடையை யுடுத்தின் நாழிகடக்குமெனவெண்ணி அக்கையுடனே அவ்வாடையை யுடுத்திக்கொள்வள். பிசைந்த முளிதயிரினைத் தாளிப்புச் செய்யுங்கால் அதனின்றெழும்புகை தன்கண்ணிற் கவிய அதுபோழ்து புகைபடாமலிருக்கத் தன் முகத்தைத் திருப்பின் பதங்கெடுமென்றெண்ணித் திரும்பாது அதனைத் துழவி நறுமணத்துடன் இறக்குவள். அந்

நறுமணங்கண்ட அவளுள்ளம் காதலனுக்குகந்த சுவையுண வமைந்ததைக் கருதி மகிழ்ந்து தன் கணவனுக்கதனையிட, அவன் மகிழ்ந்துண்டலைக் கண்டு வெளிக்காட்டாவுவகை கொள்வளாம். தன் உடல் நலத்தைச் சிறிது முன்னுது தன்காதலனையே பெரிதும் பேணி மகிழும் தன்மையரன்றோ நம் தமிழ்ப் பெண் மக்கள்!

நலனும் குணனும் கல்வியும் வாய்க்கப்பெற்று இயற்கைநலந் திகழும் நம் பெண்மணிகள்பால் காதலென்னுஞ் சிறப்பினைக் கொண்டாலன்றி இல்லறம் இனிது நடவாதாம். காதலென்பது அகத்தே நிகழும் ஓரின்பம். இஃது உயிர்க்குணம். இதனை இன்னதென்றெடுத் துரைக்க வியலாததாய் நுகர்தலொன்றி னலேயே அறியக்கிடக்கும். காதல்தான் இறைவன் அருள்வழி நாடுதற்கு முதற்படியாகும். இதுவே இறைவனதுள்ளத்திற்கு முவக்கும் நெறி. இதனை நம் பண்டைய தமிழ்மக்கள் நூல்களிற் சிறப்பித்துக் கூறியுள்ளார்கள். மேலும் நந்தமிழ்மக்கள் வாழ்ந்த வாழ்க்கை இயற்கை நலங் கமழும் இன்பமுற்ற பெருஞ் சிறப்பினைக் கொண்டதாம். அஃதெவ்வாறெனின், அவர்கள் பிறப்பாற் சாதி வேற்றுமையின்றி நிலவேற்றுமையே கொண் டுள்ளார்களென்று அவர்களது நூல்களினின்று மறியலாம்.

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்று கூறிப்போந்தனர் நந்தமிழ்ப் பெரியாரும். அவர்கள் தம் வாழ்க்கையை அகவாழ்வு புறவாழ்வென விரு கூறுக்கி வாழ்ந்து வந்தனர். அகவாழ்வாவது ஒத்த நலனும் ஒத்த குணமும் ஒத்த கல்வியுமுடைய ஒருத்தியும் ஒருவனுங்கூடி நிகழ்த்தும் இல்லற வாழ்வாம். இத்தகைய சிறப்பு நலங்கள் தமிழ் மக்களிடம் இயற்கையாகவே தோன்றியவாம். அதனுல் இல்லறம் செவ் வனே நடைபெற்று அருள்வழி நாடி நின்று இறைவனருளை அவர்கள் எளிதில் அடைதற்கேதுவாயிற்று. மேலும் அக்கா லத்துப் பெண்மக்கள் தங்களுக்குரிய காதலனைத் தாங்களே தெரிந்தெடுக்கும் உரிமைபெற்றிருந்தனர். இதனை ஐயாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய பெருந்தமிழிலக்கண நூலாம் தொல்காப்பியக் களவியலுட் பரக்கக் காண்க. தான் காதலிக் கப்பட்ட கிழவனையே மணம்புரிந்துகொள்ளுதலும், அக்கிழவன் வாய்க்கப் பெறுனின் வேருருவனைப் பின்கருதாது உயிரிழத் தலும், அல்லது கணவனிழந்தாளொழுகும் நெறி நின்றொழுகுத லும் வழக்கமாயிருந்துவந்தது. இதுபோழ்து அந்நெறிகள்

யாவுந் தலைக்காட்டாது அடியோடழியப்பெற்று, மக்கள் துன்புறும் வாழ்க்கை கொண்டு அருள்வழி மறந்து அல்லற்படுகின்றனர். ஐயோ! என்ன இரக்க நிலைக்கு வந்தது நந்தமிழ் மக்கள் வாழ்க்கை! ஆயின் மக்கள் தற்போது எந்நெறியைக் கொண்டு தன் இன்னலில் வாழ்கின்றனர் என்பதை ஆராய்வோம்.

இல்லற வாழ்க்கையை ஒருவனும் ஒருத்தியும் நிகழ்த்தி வருங்கால் அவர்கள் காதலென்பதை யிழந்து, காமத்தைக் கைக்கொண்டனரன்றே அவ்வில்லறத்தின் சகடம் கட்டுவிட்டதைப்போன்று சிதைவுறலாயிற்று. அதனால், அறம் புகழ் கேண்மை பெருமை யிந்நான்கும் அறவே யொழிந்து, பகை பழி பாவ மச்சமென்னும் தீநெறியிற் செலுத்தும் பிறர்மனை நயத்தலைப் பெரிதும் விரும்பி, பலரறியக் கடிமணம் புரிந்த உரியவளைவிட்டுத் "தன் மனையாளைத் தனிமனையிருத்திப் பிறர் மனைக்கேகும் பேதையும் பதரே" என்னும் அருஞ் சொல்லைப் பழுதுபடாமற் காத்து, நெற்பதருக் கொப்பாகிப் பிறரில்லாள் பால் உடனுரிமையே கொண்டு உடல்மெலிந்து உயிரொளி குன்றி வாழ்தற்குரிய ஆயுளின் அளவுமிழந்து நோயும் வறுமையுங் குடிகொண்டலைகின்றனர் நம் வாலிபச் சிறுவர்கள்! அந்தோ! நந்தமிழ்நாடு படும்பாடு என்னும்.

பிறமொழிகள் நந்தமிழ் நாட்டில் உலவவந்ததனாலன்றோ இக்கேடுகள் சூழலாயின. தமிழ்மொழியின் சிறப்புக் குன்றவும் பிறமொழிகள் தமிழ்மக்கள்வாயிற் செல்லவும், அவ்வாறு சென்று அவர்களுக்குத் தீநெறிகாட்டி இல்லறத்தின்சகடத்தைத் துண்டு துண்டாயுடைத்துக் காதற்சிறப்புளாரைக் காமத்திலழுத்திக் கம்பலையுங் கண்ணீருங் கொள்ள வைத்தனவே!

'மேலும் பெண்ணினை வெறுத்தால் பேரின்பம் எளிதிற் கிடைக்கும்' என்னுந் தீயொழுக்கம் ஒன்று கிளம்பி நம்பெண் மணிகள் ஆடவர்கள்பால் அல்லலுற்று அழிய வைக்கின்றதே! பேரின்பமெனிற் சிற்றின்ப மொன்றிருத்தல்வேண்டும். அச் சிற்றின்பத்தினைத்தான் பெண்கள்பாற் கொள்ளக் கிடக்கின்றதென்றும், பேரின்பம் இறைவன்பாலுள்ளதென்றும் வேறு பிரித்து ஒழுகலாயினர். அந்தோ! என்ன! ஆராய்தற்கிடமின்றியலையும் உள்ளம்! இன்பத்தினை இரு பிரிவாக்கி வாழும் வாழ்க்கையா இறைவனைக் காண வியலும்! இஃது இடைக்காலத்துத் தோன்றிய தீநெறியன்றோ! இந்நெறி தோன்றியே தற்போதியற்றி வரும் சில தமிழ் நூல்கள் அறம் பொருளின்பம் வீடென்னும் நாற்பொருள்களையுங் கூறலாயின. பண்டைய

நூல்களிலெல்லாம் அறம் பொருளின்ப மென்னும் மூன்றையுமே வலியுறுத்திக் கூறியவாறறிக! 'வீடு' என்னும் பகுப்பு இடைக்காலத்தோற்றமன்றோ! இது தோன்றியே நம்மிளமைத் தமிழ்மக்கள் பெண்கள்பால் உடலுரிமையாம் காமத்தையே பெரிதுங் கொண்டு, உயிருரிமைக் காதலைக் கைவிடலாயினர். அவ்வாறாயின் பண்டைய தமிழ்மக்கட்குக் காமமென்பது இல்லையோ வெனிற் கூறுதும். காமம் என்பது எக்காலத்தும் உண்டு. அஃது அக்காலத்திற் பெரிதும் பாராட்டுதலின்றி நம் பண்டைய தமிழ்மக்களால் அரிதே கையாளப்பட்டுக் காதலென்பதே நிரம்பி, அதனாலிறைவனருளை எளிதிற் கைக்கொண்டு வாழலாயினர். காதல் முற்றின அன்பே இறைவனன்பன்றோ! மகளிர் காதலாம் அன்பின் நலத்தை வலியுறுத்த நம் **இராமலிங்க அடிகள்** கூறிய'பா' வொன்றினை ஈண்டுக் கூறுவாம்.

"கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
யுகந்துதண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே யெனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற வரசேயென் னலங்கலணிந் தருளே"

(திருவருட்பா, அருள்விளக்க மாலை)

'மேன்காற்றில் விளைசுகமே' யென்றதின் உண்மையை வெளிப்படையாக வெடுத்துக் கூறாது அகத்தே கொண்டுள்ள விழுப்பொருள் கூறுதும்.

பாலைநில மொன்றில் கோடைவெப்ப முடலிற்படாது தழைத்த மர நிழலொன்று வாய்த்தது. அப்போது பசிப்பிணி வருத்தவும், அம்மரத்தினின்றும் பழுத்த பழமொன்று கிடைக்க அதனையுண்டு பசியாற்றப்பட்டது. உடனே நீர் வேட்கை மிக்கெழலும், அதனையொழிக்க அருகிலுள்ள நீரோடையிற் செல்லும் சுவைமிக்க ஊற்றுநீர் கிடைத்தது. பின் அங்கோருயர்ந்த பளிங்கு மேடையைக் கண்டு அதன்மீதேறி அமரவும், தென்றலானது அந்நீரோடையி லப்பொழ்தே மலர்ந்த மலரினின்றும் நறுமணத்தை வாரிக்கொண்டு மெல்லென்று பளிங்கு மேடைமீது உலவிற்று. அடியுமுச்சியும் அழற்கொழுந்தேறி

உடலை வருத்து மப் பாலைநிலத்தில் மேற்கூறிப்போந்த சுகங்கள் வாய்த்தகாலத்து உள்ளத்தெழுமின்ப நிலையை என்னென்று உரைப்பது! (தொடரும்)

அத்துவித உண்மை யாராய்ச்சி

[திரு. மா. வே. நெல்லையப்பப்பிள்ளையவர்கள், B. A.]

(சிலம்பு ௬, பரல் ௨, எகூ-ம் பக்கத்தொடர்ச்சி)

முந்திய கட்டுரையில் இறைவன் உயிர்களுடன் தொடர்புபட்டு நிற்கும் நிலையில் மக்களாகிய நாம் அத்துவித உண்மையை ஆராயும் ஆராய்ச்சி ஒருவாறு கூறப்பட்டது. இக்கட்டுரையில் உயிர்கள் இறைவனுடன் தொடர்புபட்டு நிற்கும் நிலையில் நாம் அத்துவித உண்மையை அறிதலைப்பற்றி ஆராய்ச்சி கூறப்படும்.

இறைவன் உயிர்களுடன் தொடர்புபட்டு நிற்கும் நிலையில் நம் இறைவனுடைய பண்புகளின்னவென்றறிந்து அத்துவித வுண்மையை ஆராய்ச்சி செய்தோம். அதுபோல உயிர்கள் இறைவனுடன் தொடர்புபட்டு நிற்கும் நிலையில் நாம் மக்களுடைய பண்புகள் இன்னவென்று அறிந்து ஆராய்ச்சி செய்தல் வேண்டும்.

இறைவனுடைய பண்புகளாகிய உண்மை அறிவு இன்பம் மூன்றும் மாயையைக் கடந்து நிற்பனவாயுள்ளன. சாத்துவிகம் இராசசம் தாமசம் என்னும் மக்களுடைய பண்புகள் மூன்றும் மாயைக்குட்பட்டு நிற்பனவாயுள்ளன.

மக்களாகிய இறைவனுடன் தொடர்புபட்டு நிற்கும் நிலையாகிய அத்துவித உண்மையை நமது பண்பு அளவிற்குத் தக்கபடிதான் அறிதல் கூடும். ஆதலின் முதலாவது மக்களுடைய பண்புகள் இன்ன என்றும், அவைகள் ஒவ்வொன்றின் தன்மை இன்னவென்றும், அவைகள் எவ்வாறு தொழிற்படுகின்றனவென்றும் அறிதல் வேண்டப்படுவதாகும். மக்களுடைய பண்புகள் (குணங்கள்) மூன்று; அவை சாத்துவிகம், இராசதம், தாமசம் என்பன. அந்த மூன்று பண்புகளும் பிறத்தற்குத் தாயாயுள்ள இடம் மூலப்பகுதியாகும். மூலப்பகுதியில் முப்பண்புகளும் விளங்குதலின்றி நுண்ணிதாயிருக்கும் (சூக்குமமாயிருக்கும்). மூலப்பகுதியிலிருந்து குணதத்துவம் தோன்றும். இந்தக் குணதத்துவத்தில் முப்பண்புகளும் விளங்கித் தம்முள் ஒன்றுக்கொன்று ஏற்றக்குறைவுகளின்றி ஒப்புடையனவாயிருக்கும். குணதத்துவத்திலிருந்து புத்திதத்துவம் தோன்றும். இந்தப் புத்திதத்துவத்தில் முப்பண்புகளும் ஒன்றுக்கொன்று ஏற்றக்குறைவுகளுளதா யிருக்கும். சாத்துவிகப் பண்பு மிக்கும் ஏனைய இரண்டு பண்புகளுங் குறைந்துமிருக்கும். புத்திதத்துவத்திலிருந்து ஆங்காரதத்துவம் தோன்றும். ஆங்காரதத்துவத்தில் இராசதப் பண்பு மிக்குத் தோன்றும். இந்த ஆங்காரதத்துவம் பண்பு வகையால் மூன்றுவகைப்பட்டுச் சாத்துவிக அகங்காரத்தினின்று மனமும் அறிதற் கருவியும் (ஞானேந்திரியமும்,) இராசத அகங்காரத்தினின்று

தொழிற்கருவியும் (கன்மேந்திரியமும்), தாமத அகங்காரத்தினின்று சூக்கும தன்மாத்திரைகளும், சூக்கும தன்மாத்திரைகளிலிருந்து பூதங்களுந் தோன்றும், மேலே கூறியவற்றை உற்று நோக்குவார்க்கு மக்களுக்குப் போக்கிய காண்டமாய் விளங்குகின்ற ஆன்ம தத்துவம் பண்பு மயமாயுளது என்பதும், சகலர்களாகிய மக்கள் எல்லாரும் பண்பு வயப்பட்டவர்கள் என்பதும். அவர்களிடத்தில் அப்பொழுதைக் கப்பொழுது விளங்குகின்ற பண்புக்குத் தக்க அளவு அறிவு விளங்கும் என்பதும் நன்கு விளங்கும்.

மூன்று பண்புகளில் ஒவ்வொரு பண்பும் என்ன தன்மையுடையது என்று கருதுவாம். சகலர் வகுப்பு உயிர்கள் (ஆன்மாக்கள்) கலை, நியதிகலை, வித்தை, அராகம் என்றும் அருக விந்தியா தத்துவங்களினாலும் கட்டப்பட்டுப் போகம் நுகர்தற்குத் தகுதியுடையவர்களாய்ப் போகம் நுகர்ச்சியிற் செல்லுங்கால் அவர்களிடத்திற் செயல் அறிவு வேட்கைகள் சிறிது சிறிதாக நிகழ்கின்றன.

இவ்வாறு அறிவு வேட்கை செயல்கள் நிகழ்தலுக்கு ஆன்மாக்கள் சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்ற ஐந்து சுத்த மாயா சிவதத்துவ சத்தியால் பிரேரேபிக்கப்படல் (ஏற்படல்) வேண்டும். இந்தச் சசிப தத்துவசாதியானது சிவத்தினாற் பிரேரேபிக்கப்படுகின்றது. இவ்வாறாக உயிர்களிடத்தில் அறிவு வேட்கை செயல்கள் விளங்காத பொழுதும், அல்லது மிகச் சிறிதாய் விளங்கும்பொழுது தாமத குணமும் நியதிக்குட்படாமல் ஒழுங்கின்றி மிக்கு விளங்கும் பொழுது, இராசத குணமும் நியதிக்குட்பட்டு ஒழுங்காக நேர்மையுடன் விளங்கும்பொழுது சாத்துவிக குணமும் வெளிப்பட்டுத் தோன்றும். எந்த உயிரிலும் தொழிற்பாட்டின்கண் எப்பொழுதும் மூன்றுகுணங்களும் விரவித் தோன்றுமேயன்றி ஒரு குணம் தனித்துத் தோன்றாது. ஒருவர் சாத்துவீகப் பண்புடையராயிருந்தால் அவரிடத்திற் சாத்துவீகப் பண்பும் மேம்பட்டு மிகுந்து மற்றைய இரண்டு பண்புகளும் அதற்குள் அடங்கி நிற்கும். இராசதப் பண்புடையராயிருந்தால் அவரிடத்தில் இராசதப் பண்பு மேம்பட்டு மிகுந்து மற்றைய இரண்டு பண்புகளுங் குறைந்து அதற்குள் அடங்கி நிற்கும். தாமதப் பண்புடையராயிருந்தால் அவரிடத்தில் தாமதப் பண்பு மேற்பட்டு மிகுந்து மற்றைய இரண்டு பண்புகளும் குறைந்து அதற்குள் அடங்கி நிற்கும். இப்படி அடங்கி நிற்கும் இரண்டு பண்புகளிலும் ஒன்று மிகுந்தும் மற்றொன்று குறைந்தும் நிற்கும்.

ஒவ்வொரு பண்பிலும் மூன்று பண்புகளும் உள. அதாவது சாத்துவீகத்தில் சாத்துவிக இராசத தாமசப் பண்புகளும், இராசசத்தில் சாத்துவீக இராசத தாமசப் பண்புகளும் உள. இவைகளில் ஒவ்வொன்றையும் இங்கே விரித்துரைப்பின் உரை பெருகும். பொதுவாகக் கூறுமிடத்துச் சாத்துவீகப் பண்பினால் கடவுளைப் பற்றிய நல்லறிவு விளக்கமும் அறிவும், வாய்மை, அமைதி, அருள் அன்பு முதலிய நற்பண்புகளும், அறவொழுக்கமும் உண்டாய் அவற்றின் பயனாக நல்லின்பம் உண்டாகும். இராசதகுணத்தில் உலக காமியங்களில் மிக்க முயற்சியும் ஓயாத கிளர்ச்சியும் (சலனமும்) துன்பமும் உண்டாகும். தாமதகுணத்தினால் மடியுந் தூக்கமும் அவற்றால் அறியாமையும் உண்டாகும்.

மேலே கூறிய வாற்றால் ஒருவருக்கு நல்லறிவு விளக்கமுந் தெளிவும் அமைதியும் உண்டாக வேண்டுமானால் அவரிடத்திற் சாத்துவீக குணம் மேம்பட்டிருத்தல் வேண்டும். சாத்துவீகப் பண்பு அவரிடத்தில் மேம்பட்டு விளங்குதற்கு அவருடைய அறிவு வேட்கை செயல்கள் எல்லாம் இறைவனது அருளுக்கு மாறின்றி ஒத்திருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவர் தனக்கும் இறைவனுக்குமுள்ள அத்துவிதத் தொடர்பை ஒருவாறறிதல் கூடும். இப்படி அறியப்படும் அத்துவிதத் தொடர்பில் முன் கூறிய வேறுநிலை ஒன்றுநிலை உடனிலையாகிய மூன்று நிலைகளும் உள.

ஒருவர் தம்மிடம் சாத்துவீகப் பண்பு மேம்பட்டு விளங்குதலால் அத்துவிதத் தொடர்பை அறிதற்கண் ஒன்றுநிலை வேறுநிலை உடனிலையாகிய மூன்று நிலைகளும் உள என்பதை விளக்கிக்காட்டுவாம். தொழிற்பாட்டின்கண் சாத்துவீகப் பண்பு ஒருவரிடம் மேம்பட்டு விளங்கும் பொழுதும் ஏனைய இராசதப் பண்பும் தாமதப் பண்பும் குறைந்து தோன்றுவனவாகும். தனியே யாதாமொரு பண்பு மட்டும் தோன்றி விளங்குதல் எக்காலத்துமில்லை. இந்த உண்மையை நாம் உலக வழக்கில் வைத்து அறியலாம். ஒருவர் யாதாமொரு வேலை செய்தலின்கண் இராசதப்பண்பு மிக்கு விளங்கித் தோன்றுகின்றது. இராசதப் பண்புடன் தாமதப் பண்பும் விரவி யிருப்பதனாலே இடையில் அடிக்கடி மடி உண்டாகின்றது. ஒரு யாமம் அல்லது பத்துநாழிகைக்குமேல் ஒருவர் ஒரு வேலையைத் தொடர்ச்சியாகச் செய்தல் கூடாததாயிருக்கின்றது. இடையில் இளைப்பாறுதல் இன்றியமையாததாயிருக்கின்றது. பகற்காலத்திற் குறிப்பிட்ட நேரம் வேலை செய்தபின் இரவில் இளைப்பாறுதல் வேண்டுவதாயிருக்கின்றது. இப்படி ஒருவர் வேலையைச் செய்யுங்கால், செய்யும் வேலையிலே மட்டுங் கருத்துடையவராய் வேறொன்றையும் நினையாமல் அதனைச் செம்மையாய்ச் செய்யும்பொழுது சாத்துவீகப் பண்பு விளங்கி இன்பம் உண்டாகின்றது. அவருக்கு அப்பொழுது புறம்பே நிகழும் நிகழ்ச்சி சிறிதும் புலனாகாது. இவ்வாறு மூன்றுபண்புகளுந் தொழிற்பாட்டின்கண் விரவித் தோன்றுதலை நாம் அறியலாம். அதுபோல ஒருவரிடத்தில் மேலே கூறியவாறு சாத்துவீகப் பண்பு மேம்பட்டு விளங்கினாலுந் தாமதப் பண்பும் இராசதப்பண்புங் கூடவே விளங்குகின்றன. ஆனால் அவைகள் குறைந்தும், சாத்துவீகப் பண்புக்கு உட்பட்டும் விளங்குகின்றன. இவ்வாறு பண்புகள் விளங்குதலினால், சாத்துவீகத்தில் சாத்துவீகம், சாத்துவீகத்தில் இராசதம், சாத்துவீகத்தில் தாமசம் என்னும் மூன்று பண்பு வகைகள் சாத்துவீகத்தில் உண்டாகின்றன. மூன்றுவகைச் சாத்துவீகப் பண்புகள் விளங்கும்பொழுது சிறப்பாக மிக்க இன்பம் உண்டாகின்றது. இந்த நிலை ஒன்று நிலையாகும். இந்த நிலையில் ஒருவர் அஞ்செழுத்தோதல், கடவுட் சிந்தனை, வழிபாடு முதலிய தவங்களில் மனமொன்றி யீடுபட்டுத் தமக்கும் இறைவனுக்குமுள்ள அத்துவிதத் தொடர்பு வழியில் தம்முடைய அன்பினால் இறைவனது அருளை நினைந்து நினைந்து உள்ளம் உருகி அவனுடன் கலந்து ஒன்றுபடுகின்றார். அறிவு வேட்கை செயல் என்னும் உயிரினுடைய மூவகை முயற்சிகளில் இது வேட்கையின் பாலது. திருந்திய வேட்கையே அன்பு. திருந்திய அன்பினாலே இன்பம் உண்டாகின்றது.

(தொடரும்)

பகற்குறி

பகற்குறி

[இளவழகனார்]

நெடுமென் பணைத்தோள் இவளும் யானும்
காவல் கண்ணினம் தினையே, நாளை
மந்தியும் அறியா மரம்பயில் இறும்பின்
ஒண்செங் காந்தள் அவிழ்ந்த ஆங்கண்
தண்பல் அருவித் தாழ்நீர் ஒருசிறை
உரும் உச்சிவந்து, எறிந்த உரன்அழி பாம்பின்
திருமணி விளக்கில் பெறுகுவை
இருண்மென் கூந்தல் ஏஎஉறு துயிலே

(அகநானூறு, ௧௨)

'நீண்ட மெல்லியல்பு வாய்ந்த பருத்த தோள்களையுடைய தலைவி யாவாளிவளும் யானுந் தினைப்புனத்தைக் காவல்காக்கும் நோக்க முடையேமாய் நாளை இருப்பேம். ஆகவே, மரமேறுதற் றொழிலிற் சிறந்து வல்லமைபெற்ற குரங்குகளும் நெருக்கத்தால் ஏறியறிய மாட்டாத அத்துணை மரநெருங்கின அருகேயுள்ள இளஞ்சோலையின் கண், குன்றினின்று வீழும் அருவிகள் பலவற்றின் குளிர்ச்சியும் இனிமையும் பொருந்திய விருப்பந்தரும் நீர் நிலையின் ஒரு பக்கத்தில் ஒளிமிக்க செங்காந்தட்பூக்கள் மலர்ந்திருக்குமிடத்தில், அச்சந்தரும் உச்சிப்பொழுதில்வந்து, உமிழ்தலால் வலியழிந்த பாம்பினது சிறந்த மாணிக்க மணியி னொளிவிளக்கத்தில், கரிய கூந்தலையுடைய மெல்லியலாளின் களிப்புப் பொருந்திய கலவியின்பத்தை யடைவாயாக'வென்று கொள்க.

நாளை தினையே கண்ணினம்: ஆகவே, அங்கே அருகேயுள்ள இறும்பின் நீரொரு சிறை காந்தளவிழ்ந்த ஆங்கண், உச்சிவந்து, எறிந்த பாம்பின் மணிவிளக்கில், கூந்தல் துயில் பெறுகுவை யென்பது. இங்குப் பெய்துரைக்கப்பட்டனவெல்லாம் வருவித்துக்கொள்க. 'நெடுமென் பணைத்தோ' ளென்றது புணர்ச்சிச் சிறப்பின் குறிப்பு மொழி. 'இருண் மென்கூந்த' லென்பது புறத்தே கண்டு நுகரப்படுஞ் சோலை யின்பத்தைப்போலவே தலைவியின் அகத்தேயுங்கண்டு நுகரப்படுவதோ ரின்பங் குறித்தது. இவ்விரண்டு குறிப்பு மொழிகளும் தலைவன் ஒருங்கு கலந்து மகிழ்தற்கு ஏற்பப் புறமும் அகமும் ஒத்திருந்தனவென் றுணர்த்தின. இறும்பு இளமரச் சோலையைக் குறிக்குமாறு "மஞ்ஞையாலு மரம்பயி லிறும்பின்"* என்னும் பெரும்பாணாற்றுப்படை யுள்ளுங் காணப்படும். 'மந்தியு மறியா மரம்பயி லிறும்பின்' என்றிங்கு வருதல் போலவே, "மந்தியு மறியா மரம்பயி லொருசிறை"† என்று நற்றிணையிலும் வந்தது. 'இறும்பின் ஒரு சிறை ஆங்கண்' என்று மாற்றுக. 'தண்பல் அருவி'

* பெரும்பாண், ௪௧௫. † நற், ௧௧௪.

என்பதன்கண் ணுள்ள 'பல்' என்பதையும் நீருக்கே அடைமொழியாக் கொண்டு மிகுதிப்பொரு ளுரைத்தலு மமையும். உரும் - அச்சம்; இதனை,

"பேநா முருமென வரூஉங் கிளவி
யாமுறை மூன்று மச்சப் பொருள"*

என்னுந் தொல்காப்பிய உரியிய னூற்பாவாற் கண்டுகொள்க. 'நீர்' 'கூந்தல்' என்பன ஆகுபெயர். துயில் - புணர்ச்சியைக் குறிக்க வந்தது. அஃது இடக்கரடக்க லென்ப. 'மென்றோட்டுயில்'† லென்பர் நம் தெய்வப் புலவரும்.

இச்செய்யுள், தோழி தலைவற்குப் பகற்குறி நேர்ந்து குறியிடங் கூறிய துறையாகும். அஃதாவது தழையுங் கண்ணியுங் கொணர்ந்து தன்னைப் பின்னின்று குறையிரந்த தலைவற்குச் சேட்படுக்கு முறைகளால் அகற்றி அணுகுவித்து, பின்னர் அத்தழையினை யேற்றுத் தலைவிக்குத்தந்து, அவள்குறிப்பினை யுணர்ந்துகொண்டு, மற்றதற்குமேல் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலா'மென்று தோழி குறியிடங் கூறலென்பது இதன்கட் கூறப்படுங் குறியிடம், தலைவன் தலைவியர் தங் களவொழுக்கத்துக்கு மிகவும் இயைந்து நிற்பது வியந்து மகிழற்பாலது. அடுக்கிய மலைப்பக்கங்களும், இளமரச் சோலைகளும், குளிர்ந்து வீழும் அருவிநீர்க் குட்டங்களும், மலர்ந்து மணங்காட்டுஞ் செங்காந்தட் பூஞ்செடிகளும், வேனிற்பருவத்து உச்சிப் பொழுதில் கருத்தொன்றிக் கலக்குங் காதன்மக்கட்கு ஒருங்கே சூழ்ந்து நின்று கழிபேருவகையினைப் பயந்து நிற்பனவா மன்றே ! மேலும்,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடியின் கண்ணே யுள"‡

என்னும் நம் நாயனார் திருமொழிக்கு ஏற்பத் தலைவன் இம்மலைச் சோலையி னகத்தே எழிலும் ஓசையும் ஊறலும் மணமும் உறவும் ஒருங்கே கனிந்து விளங்குந் தலைவியை ஐம்புலன்களாலும் நுகர்வானாதலின், அப்போதவன் உணர்ச்சிக்கு அகப்பொருளாய்த் தோன்றுந் தலைவி அங்ஙன மவன்றன் ஐம்புலன்களாலும் நுகரப்பட்டு இன்பந் தருதல் போலவே, ஆங்கவனுணர்ச்சிக்குப் புறப்பொருளாய்த் தோன்றும் அம்மலைச்சோலையுந் தன்கண் உள்ள மயில்காட்சி, குயில்ஓசை, கனிச்சாறு, மலர்மணம், காற்றூறு முதலியவற்றால் அவன்றன் ஐம்புலன்களாலும் நுகரப்பட்டு இன்பந்தருமென்க. அகத்தே நுகரப்படும் இ
தினைப் புறத்துள்ள பொருள்கள் இடை நின்று கெடுத்தலாகாது. .
னங் கெடுக்காம லிருத்தற்கு அப்புறப்பொருள்கள் அகப்பொருளிப.
ளோடு ஒத்து நிற்றல் வேண்டும். இங்ஙனம் ஒத்து நிற்கும் உண்
ளெல்லாம் புறப்பொருட கட்டுரைக ளெழுதுமிடத்துத் தெளிவாக ௬

---

* தொல். சொல், ௩௪௫. † திருக்குறள், புணர்ச்சி, ௩.
‡ திருக்குற, ௧௧௦௧.

கப்படும். அகப்பொருளியல்புகளோடு புறப்பொருளியல்புகள் ஒத்து ஒன்றாய் நிற்குமானால், அகத்தே நோக்கி அவ்வகப்பொரு ளியல்புகண்டு இன்பம் நுகர்ந்தபடியாய் அதன்கட் பெயராது ஊறிப் படிந்திருக்குந் தலைவனை, அவ்வகப்பொருளியல்புகட்கு வேறாகாத புறப்பொருளியல்புகளும் அவ்வகப்பொருளியல்புகளோடு ஒத்து நின்று அவனை அவ்வின்பத்தின்கண்ணேயே மேன்மேலும் படிவியா நிற்கும். தலைவன் ஒரோவொருகால் தனது உயிரியல்பினால் முன்படிந்து நின்ற இன்பத்தினின்றும் பெயர்ந்து புறத்தே நோக்குவனாயினும், அப் புறத்தேயும் அகத்தே தனக்கு இன்பந் தந்த இயல்புகளே நிகழக் காண்டலால், புறத்து நோக்கியும் அவனுக்கு முன்இன்பஞ் சிதையுமாறில்லை. ஆகவே, எவ்வுணர்ச்சிக்கும் அகமும் புறமும் ஒத்து ஓரியல்பினவாய் நிற்குமானால், அவ்வுணர்ச்சியினால் நுகரப்படும் இன்பந் தன்னிலையிற் சிதைவுபடாததோடு முன்னினும் முறுகியும் முதிர்ந்து நிற்குமென்பது பெறப்படுகின்றது. இங்கு ஐம்புலன்களாலும் நுகர்தரு பொருளாய் அகத்தே விளங்குந் தலைவியைப்போலவே புறத்தே விளங்குஞ் சோலையும் அவ்வைம்புலன்களாலும் ஒருங்கே நுகரப்படுஞ் சிறப்பியல்புகள் வாய்ந்திருக்கின்றதென்னும் உண்மை,

"ஆடன் மாமட மஞ்ஞை யணிதிகழ் பேடையொடாடிக்
　கூடு தண்பொழில்"*

"குயிலின் னிசை பாடுங் குளிர்சோலை"†

"கொக்கினிய கொழும்வருக்கை கதலிகமு
　　குயர்தெங்கின் குலைகொள் சோலை
　முக்கனியின் சாறொழுகி"‡

"மரவத்தொடு மணமாதவி மவ்வலது விண்ட
　குரவத்தொடு விரவும் பொழில்"$

"புடைப்பாளையின் கமுகின்னொடு புன்னைமரம் காற்றம்
　விடைத்தேவரு தென்றல்"

என்று திருஞான்சம்பந்தப்பெருமான் அருளிய தேவாரத் திருமொழிகளால் நன்கு பெறப்படுதல் காண்க.

காதலர்க்குப் பேரா மகிழ்ச்சியினைப் பெருகுவிக்கும் இப்பொழிலினியல்பை, அக்காதலர்தங் கூட்டத்துக்கு மிகவும் பயன்படும் வகையில் வைத்துக் கூறுமிடத்துச்

'சந்தனமுஞ் சண்பகமுந் தேமாவுந் தீம்பலவும் ஆசினியும் அசோகமுங் கோங்கும் வேங்கையுங் குரவமும் விரிந்து, நாகமுந் திலகமும்

---

* திருஞானசம்பந்தர் தேவாரம், காழி, 'அறையும்பூம்,' ௫
† ,, ,, திருக்கொடுங்குன்றம், ௨
‡ ,, ,, திருமுதுகுன்றம், 'மெய்த்தாறு' ௩
$,, ,, திருக்கொடுங்குன்றம், ௭
,, ,, வேணுபுரம், 'வண்டார்குழல்' ௨

நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங் கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகை சிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக்குயில்க ளிசைபாடத், தண்டென்றல்இடைவிராய்த் தனியவரைமுனிவுசெய்யும்பொழில்'*

என்று தமது தீவிய செழுந்தமிழ் நடைகொண்டு ஆசிரியர் நக்கீரனார் விருப்பம் விளையுமாறு மிக அழகாகக் கூறுகின்றனர். இவ்வாற்றாற் காதலர்தாங் கலந்து மகிழ்தற்குரிய பொழிலினியல்பு பொதுவகையில் நன்கு விளங்கிற்று. இனி இப்பொதுவியல்புகளோடு அக் காதன் மக்களின் கூட்டத்துக்குப் பகற்குறி யிடமாய்ப் பயன்படக்கூடிய குளிர்ம் பொழிலின் சிறப்பியல்புகளுஞ் சில உள.

தலைவியொடு கூடுங்காலம் பகற்கால மாதலாலும், அப்பகற்காலத்திலும் வெயிலுறைப்பேறிய உச்சிக்கால மாதலாலும் அக்கூட்டத்துக்குக் குறிக்கப்படும் பொழில் பெரும்பாலும் நீர்த்துறையருகே நிற்றல் வேண்டும். இங்குக் குறிக்கப்படும் நீர்த்துறை பலரும் வந்து கூடும் பொய்கைபோல்வன வாகுமாயின், பொழில் அப்பொய்கைத் துறைக்கு வேறாயிருக்கும். பொழிலிலேயே ஒரு சிறு அருவியோ ஆறோ இருக்குமாயின் அஃது இன்னும் நல்லது. பெரும்பாலும் அப்பொழில் பிறர் நுழைதற்கு ஏதுவில்லாததாகவே இருக்குமென்க. இவைதாம்,

"ஊர்க்கு மணித்தே பொய்கை, பொய்கைக்குச்
சேய்த்து மன்றே சிறுகான் யாறே,
இரைதேர் வெண்குரு கல்ல தியாவதுந்
துன்னல் போகின்றாற் பொழிலே, யாமெங்
கூழைக் கேர்மணங் குறுகஞ் சேறு
மாண்டும் வருகுவள் பெரும்பே தையே"†

என்னுங் குறுந்தொகைச் செய்யுளால் விளங்கும். அதனினும் மந்தியும் அறியறியாதவாறு அத்துணை நெருக்கமாய்க் கிளைகள் பின்னி நின்று நிழல் பயக்குஞ் சோலையாமாயின், அவர்க்கது பந்தரிட்டாற் போன்று தண்ணென்றிருக்கும். கதிரவனுடைய கதிர்க்கம்பிகள்கூட அதன்கண் நுழைதற்கு ஏலாதவாறு, அத்துணைச் செறிவாக அது தழை பரம்பிக் கவிந்து கிடக்குமென்பார் திருக்கோவை யாசிரியர். அம் மட்டேயன்றிச், சோலையின் வெளியே உலாவுவார்க்கு அதன் உள்ளேயிருக்குந் தலைவன் தலைவியர் தோன்றாதவாறும், உள்ளேயிருக்குந் தலைவன் தலைவியர்க்குமட்டும் வெளியே யுலவுவார் தோன்றுமாறுமாக, அத்துணை வசதியாயமைந்த இருண்மிக்க சோலையென்பார் இறையனாரகப் பொரு ளுரையாசிரியர்.

'வண்டுந் தும்பியும் வரிக்கடைப் பிரசமுங் கொண்டு புணர்நரம் பென்று ஐந்துவாயிலானுங் கொள்ளப்படுந் துப்புரவினைத் தன்னகத்

* இறையனாரகப்பொருள், ௨. † குறுந்தொகை, ௧௧௩

துடைத்தாய்ப், பலவகைப்பட்ட மரங்களாலும் பொலிவுடைத்தாய்ப், புறத்தார் அகத்தாரைக் காண்பதரிதாய், அகத்தார் புறத்தாரைக் காண்பதெளிதாய், விழைவு விடுத்த விழுமியோரையும் விழைவு தோற்றுவிக்கும் பண்பிற்று'*

என்று பின்னும்அவர் கூறும் பொழிலியலுரைப் பகுதி மென்மேலும் விளக்கத்தினையும் வியப்பினையும் மகிழ்ச்சியினையும் விளைவியா நிற்கின்றது. இனி இஃது கடற்கரைச் சோலையாயின், அங்கு ஞாழலுந் தாழையும் பொழிலினிடையிலும் பக்கங்களிலுமாக நிரம்பி நின்று, காதலர்க்கு மிக்க மணம் வீசி மகிழ்வினைத் தருமென்று அறிதல்வேண்டும். இதனைத் தன்கட் சூழ்ந்த இருட்டினாற் கரிதாய்த் தோன்றுங் கானற் சோலைக்கும், அதன்கட் பரவிப் பரந்துகிடக்கும் வெண்மணற் பரப்புக்கும் முறையே கண்ணனது கருநிறத்தையும், அவன் முன்னோன் வாலியோனது வெண்ணிறத்தையும் உவமையாகக் கொண்டு,

"மாயவனுந் தம்முனும் போலே மறிகடலுங்
கானலுஞ்சேர் வெண்மணலுங் காணுயோ-கான
லிடையெலா ஞாழலுந் தாழையு மார்ந்த
புடையெலாம் புன்னை புகன்று"‡

என்று வருந் திணைமாலை நூற்றைம்பதின் நெய்தற்றிணைச் செய்யுளால் அறிந்துகொள்க.

இனிப், பகற்குறிக்கட் சென்று தலைவியைக் கூடுந் தலைவனது புணர்ச்சியொழுக்கங் குறிஞ்சித்திணைக்கண் வரல்வேண்டுமாக, மற்றிங்கு நெய்தற்றிணைக்கண் வந்தவாறென்னையோவெனின்,இங்கு நெய்தற்றிணை யென்றது நெய்தலொழுக்கமன்று; நெய்தல் நிலமேயாகும். இனி, அந் நெய்தற்றிணை நிலத்தில் குறிஞ்சித்திணை யொழுக்கம் நிகழ்ந்ததென்று அறிதல்வேண்டும். ஒரு திணைநிலத்தில் அந்தத் திணையொழுக்கமே தான் நிகழ்தல் வேண்டுமென்னும் வரம்பு ஏதுமில்லை. அங்ஙனமுமொரு வரம்பிருக்குமாயின், அஃது உலகவியற்கையோடு முற்றும் மாறுயதேயாகும். ஏனென்றால், குறிஞ்சிநில மல்லாத முல்லை மருதம் நெய்தல் முதலான ஏனை எல்லா நிலங்களிலும் வாழ்பவர்கள், தமக்குள் ஆண் பெண் கூட்டம் வேண்டும்பொழுதெல்லாம் அவர் தத்தம் வாழ்நிலங்களை விடுத்து அக்கூட்டம் நிகழ்தற்குரிய குறிஞ்சி நிலத்துக்கே வரற்பாலா ராதலானும், அங்ஙனமவர் வருதலென்பது எவர்க்குமே எப்பொழுதும் இயலாததொன்றாதலானுங் குறிஞ்சி நிலத்திலேதான் அக் குறிஞ்சியொழுக்கத்தினை நிகழ்த்துதல் வேண்டுமென்பது இயற்கையொடு பொருந்தாத ஏலா உரையா மென்க. இவ்வுண்மை,

'இறந்துபாட்டு அச்சத்தினான் இரவுக்குறி நேரும். நேர்ந்தாள், தலைமகற்கு நின்றாட்டார் என்ன பூவினர் என்ன சாந்தினர் என்ன மரத்தின்கீழ் விளையாடுவர் என்னும். அதுகேட்டுத் தலைமகள் முன்னெல்லாம் எனக்கு மறுத்தாளன்றே, மறுத்தாள் இது சொல்லிற்று

---

*இறைய, ௩௮. ‡ திணைமாலைநூற், நெய்தல், ௨௭

ஒரு காரணம் நோக்கி யென உணர்ந்து, தானும் நின்னுட்டார் என்ன பூவினர் என்ன சாந்தினர் என்ன மரத்தின்கீழ் விளையாடுவது என்னும். என்றக்கால் தோழியுங் காந்தளும் வேங்கையுஞ் சூடுதும், சந்தனமுஞ் சாந்தும் பூசுதும், பிண்டிமரத்தின்கீழ் விளையாடுவதென்னும். குறிஞ்சி நிலமாகலின் இவ்வகை சொல்லும்; அல்லா நிலத்துக்கும் அவற்றுக்குத் தக்கவாறு சொல்லும்.'*

என்று இறையனாரகப் பொருளுரையாசிரியர் கூறுதலாலும் பெறப்படும். அங்ஙனமானால், அவ் வாண் பெண் கூட்டத்துக்குக் குறிஞ்சி யொழுக்கமென்பதே பெயராமென்றும், அவ்வொழுக்கத்துக்குக் குறிஞ்சி நில வமைப்புகளே மிகவும் பொருந்தி நின்று இன்பம் விளைப்பனவாமென்றும் அகப்பொருணூல்களிற் கூறப்பட்டவா றென்னையெனின், குறிஞ்சி நில வமைப்புகளே காதன் மக்களின் கூட்டவியல்புக்கு மிகவும் ஒத்து நின்று அக்கூட்டத்தின் பயனான சிறந்த இன்பத்தினை மிகுத்து வளர்க்கும் ஆரா இயல்பினவாமென்பது இயற்கையோடு பொருந்திய முழுப்பொருத்தமான உண்மையுரையேயாயினும், அவ்வுண்மைபற்றி அகப்பொருணூல்களிலெல்லாம் குறிஞ்சி நிலத்தின்கட் குறிஞ்சி யொழுக்க நிகழ்ச்சி கூறப்பட்டது கொண்டு, மற்று அந்நிலத்தின்கண் அவ்வொழுக்கமேதான் கட்டாயம் நிகழ்ந்திடல் வேண்டும்; அஃதன்றி ஏனைய எவ்வொழுக்கங்களுமே ஆங்கு நிகழ்தலாகாது என்று அந்நூல்கள் விதித்தன வென்பது பொருந்தாது. இங்ஙனமே நெய்தனிலத்தில் நெய்த லொழுக்கமும், மருத நிலத்தில் மருத வொழுக்கமும், ஏனை நிலங்களில் ஏனை யொழுக்கங்களும் நிகழ்தல் சிறப்பென்று அவ்வகப்பொருணூல்கள் சிறப்புக் கூறியவாறுமன்றி, மற்று அவ்வவ்வொழுக்கங்களும் அவ்வந்நிலங்களிலேயேதாங் கட்டாயமாய் நிகழ்தல்வேண்டுமென்று விதி கூறியவா றன்றென்க. அங்ஙனமும் ஒரு விதியிருக்குமாயின், மேலே காட்டிய இறையனாரகப்பொருளுரைப்பகுதியில்,

'குறிஞ்சி நிலமாகலின் இவ்வகை சொல்லும். அல்லா நிலத்துக்கும் அவற்றுக்குத் தக்கவாறு சொல்லும்'

என்று அதன் ஆசிரியர் நக்கீரனார் உரைகிறுவாரன்றே! இங்ஙனமிவர் இங்குரைத்தவாறே களவுப்புணர்ச்சி முல்லை முதலான ஐந்து நிலங்களின்கண்ணும் நிகழ்ந்திடுமென்று, 'ஐந்திணையுள்ளுங் களவு வேறன்'றென்று முதல் நூற்பாவுரையிற் கூறுதலுங் காண்க. இவரோடொப்பவே ஆசிரியர் நச்சினார்க்கினியரும்,

'ஒரு நிலத்து ஓரொழுக்கம் நிகழுமென நிரனிறுத்துக் கூறிய ஒழுக்கம், அவ்வந்நிலத்திற்கே உரித்தாயொழுகாது தம்முண் மயங்கி வருதலும் நீக்கப்படா'†

என்றும்,

'இவை ஓரொழுக்கம் நிகழ்தற்கு உரியவிடத்தே ஓரொழுக்கம் நிகழ்ந்தன'

---

*இறைய, ௧அ † தொல், அகத், ௧௨

என்றுந் தொல்காப்பிய வகத்திணையியலில் உரைகூறுதலும் இங்கு அறியற்பாலது. ஆதலால், இங்குத் திணைமாலைநூற்றைம்பதின்கண், நெய்தற்றிணை நிலத்திற் கானற்சோலை நடுவண் பகற்புணர்ச்சிக்குக் குறியிடங் கூறிவரும் நெய்தற்றிணைச் செய்யுள் அகப்பொருளிலக்கணத்துக்கு மாறுபட்டுப் பிழையாமாறில்லை யென்று உணர்ந்துகொள்க. இங்ஙனமே நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு முதலான ஏனையகப்பொருள் நூல்களிலுந் தலைவன் தலைவியரின் கூட்டவியல்பினை யுணர்த்திவருஞ் செய்யுட்கள் நெய்தற்றிணையி னமைந்து வருதல் இங்கு நினைவுகூரற்பாலது.

மேலும், நெய்தற்றிணை நிலமே சோலைகளும் நீர்த்துறைகளும் மணன்மேடுகளும் மலைக்குவடுகளும் மணமலர்ச் செடிகளும் பூங்காற்றுகளுஞ் சூழ உடைத்தாய்ப் புணர்ச்சியொழுக்கம் நிகழ்தற்குரிய குறிஞ்சி நிலத்தோடு பெரிதொத்துத் திகழ்ந்து தன்கண் அவ்வொழுக்கம் நிகழப்பெறுதலின், அகப்பொருளாசிரியன்மா ரெல்லாரும் பெரும்பாலும் இந் நெய்தற்றிணையைக் குறிஞ்சித் திணைக்கு இரண்டாம்படியில் வைத்து அதன்கண் அக்குறிஞ்சியொழுக்கத்தினைக் கூறிச் செய்யுளியற்றுவாராயினர். இந்நெய்தற்றிணையை யடுத்துக் குறிஞ்சியொழுக்கம் நிகழ்தற் சிறப்புடையவாவன முறையே மருதமு முல்லையுமாகும். இனிப் பாலை நிலத்தின்கண்ணும் அவ்வொழுக்கம் ஒரோவிடத்து அருகிவரும். இதனை,

> "அன்னாய் வாழிவேண் டன்னையென் றோழி
> பசந்தனள் பெரிதெனச் சிவந்த கண்ணை
> கொன்னே கடவுதி யாயி னென்னதூஉ
> மறிய வாகுமோ மற்றே
> முறியிணர்க் கோங்கம் பயந்த மார்பே"*

என்று இவ்வேறுபாடென்னென்ற செவிலிக்குத் தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றலென்னுந் துறைக்கண் வரும் ஐங்குறுநூற்றுச் செய்யுளிற் காண்க.

இங்ஙனம் வருவனவெல்லாம் நெய்தலிற் குறிஞ்சி, முல்லையிற் குறிஞ்சி, மருதத்துக்குறிஞ்சி, பாலையுட் குறிஞ்சி யெனப்படும். இவ்வாறு ஒரு நிலத்தொழுக்கம் மற்றொரு நிலத்தின்கண் நிகழ்தல்,

> "திணைமயக் குறுதலுங் கடிநிலை யிலவே
> நிலனொருங்கு மயங்குத லின்றென மொழிப
> புலனன் குணர்ந்த புலமை யோரே"‡

என்று ஆசிரியர் தொல்காப்பியனாராற் றிணைமயக்க மென்று கொள்ளப்படும். அவ்வகத்திணையிய னூற்பாவினை அடுத்துப் 'புணர்தல் பிரிதலிருத்த லிரங்க' லென்று வரும் நூற்பாவுக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் தாமெழுதுமுரையில், "நான்கு நிலத்தும் புணர்ச்சி நிகழும்" என்று மிகவுந் தெளிவாக நிறுத்துரைத்தலால்,

---

* ஐங்குறு, ௩௭௭ ‡ தொல்காப்பியம், அகத்திணையியல், ௧௨

"மாயவனுந் தம்முனும் போலே மறிகடலுங்
கானலுஞ்சேர் வெண்மணலுங் காணுயோ"

என்று நெய்தற் சோலையிடத்துப் பகற் குறியிடம் வகுத்துரைத்து வந்த திணைமாலை நூற்றைம்பதின் நெய்தற்றிணைச் செய்யுட்கண், இனியேதும் ஐயுறுதற்கு ஏதுவில்லை யாயிற்று. இனி இதன் வாயிலாகவே, நிலம் எந்நிலமேயாறுலும், அங்கங்கும் நிகழப்பெறும் ஒழுக்கங்கொண்டுதான் அவ்வவ்வொழுக்கம் இன்ன இன்ன திணையொழுக்கமென்று கூறல்வேண்டுமேயல்லாமல், ஓரொழுக்கம் நிகழப்பெறும் நிலம் அவ்வொழுக்கப் பெயர் கொண்ட அந்நிலமாகவேதான் இருத்தல்வேண்டுமென்ற வரம்பில்லையென்பதும், நிலம் நெய்தல் நிலமாயினும், அங்கும் புணர்ச்சி யொழுக்கம் நிகழுமாயின், அவ்வொழுக்கங் குறிஞ்சியொழுக்கமே யாகுமல்லது நிகழ்ந்த நிலம் பற்றி அது நெய்தலொழுக்கமாமா றில்லை யென்பதும் அறியற்பாலன.

இனி, பந்தரிட்டாற் போன்று தண்ணிழல் பயந்து அருவிநீருஞ் செங்காந்தட் பூக்களுமுடைத்தாய்ப் புறத்தார்க்கு அகத்தே ஏதுந் தெரியாதவாறு கிளை பின்னி மிக நெருங்கிய பூம்பொழிலென்று மேலே கூறப்பட்ட பகற்குறிச் சோலையின் சிறப்பியல்புகளோடு, அச்சோலையின் நடுவண் பளிச்சென்று ஒரு பளிக்குப்பாறையு மிருக்குமென்றுர் திருச்சிற்றம்பலக் கோவையாசிரியர். கரியபொழிலின்கண், கதிரவனும் நுழையாவிருளில் ஒரு பளிக்குப்பாறையிருந்து அவ்விருளைச் சீத்து வேண்டுமளவு ஒளிகாட்டி விளங்கு மியல்பினை, இருட்சோலையினைக் கரியவானுகவும் அச்சோலையி னடுவணிருந்து ஒளிகாட்டும் பளிங்குக் கல்லினை வெண்மதியமாகவுங்கொண்டு

'ஒரு கரிய பொழில், புறமெங்குங் கதிரோன்றுன் சென்று நுழையாத விருளாய், நடுவண் வளவிய வான்மீன்போலத் தேன்கள் நுழையும் நாகப்பூ மலர்ந்து, திகழும் பளிங்குக்கால் திங்கட் கடவுள்வானிடத்து வாழ்வை யொழிந்து கானிடத்து வாழ்தலைப் பெற்றுற்போலத் தனதெழிலைப் புலப்படுத்தும்'*

என்னும் அழகிய பொருளைவைத்து,

"வானுழை வாளம் பலத்தரன் குன்றென்று வட்கிவெய்யோன்
றானுழை யாவிரு ளாய்ப்புற நாப்பண்வண் டாரகைபோற்
றேனுழை நாக மலர்ந்து திகழ்பளிங் கான்மதியோன்
கானுழை வாழ்வுபெற் றுங்கெழில் காட்டுமொர் கார்ப்பொழிலே"*

என்று கூறுமிடத்து மாணிக்கவாசகப்பெருமான் அப்பகற்குறிச் சோலையினியற்கை யிருப்பினை ஓவிய மெழுதினுற்போல விளக்கிக் காட்டியவாறறிக. இவ்வாறு இருட்சோலை நடுவண் பளிக்குப் பாறையிருந்து ஒளிகாட்டுமாயினும், அங்குக் காதலர்தம் நலம்பயக்குங் கூட்ட நிகழ்ச்சிக்கு ஒரு மணிவிளக்கு மிருப்பின் நன்றுமாதலின், அங்ஙனமொரு மணி

* பேராசிரியருரை, திருச்சிற், ௧௧௬.

விளக்கு மவண் உண்மையை, 'எறிந்த உரனழி பாம்பின் திருமணி விளக்கிற் பெறுகுவை' என்று கூறிற்று அகநானூறு.

இனி, இங்ஙனமெல்லாம் அகப்பொருளாசிரியன்மாராற் பகற்குறியிடத்துக்கு ஏற்றதென்று வகுத்துரைக்கப்பட்டுப்

"பாலுந்துறு திரளாயின பரமன் பிரமன்றன்
போலுந்திற லவர்வாழ்தரு பொழில்"*

என்று திருஞானசம்பந்தப்பெருமான் கூறியவாறு வானவரும் விரும்பு நிலையிற்றிகழும் அவ்வினிய சோலையி னடுவில், அச்சோலையி னியலழகினை உணர்ந்துபார்த்து மகிழவல்ல அறிவாற்ற லமைந்த காதன் மக்களாய் அவண் பிறங்கித், தமக்குள் இன்பந் தந்துகொள்வார்களாயின், ஆயிடை அவர் எய்துந் தூய இன்பத்தின் கழிபெருஞ் சிறப்பு உரையால் உணரப் படாததாமன்றே! தலைவி தலைவனுக்குந் தலைவன் தலைவிக்குமாக இன்பந்தந்து கொள்ளுமிடஞ் சோலையிடமாயின், அஃதவர்க்கு அவ்வின்பத்தினை மேன்மேலும் பெருக்கித் தரும் உண்மையினைத்

"திரைவிரி தருதுறையே திருமணல் விரியிடமே
விரைவிரி நறுமலரே மிடைதரு பொழிலிடமே
மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே
யிருகய லிணைவிழியே யெனையிடர் செய்தவையே"†

என்று ஆசிரியர் இளங்கோவடிகளும்,

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
யுகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே‡ யெனைமணந்த மணவாளா"§

என்று இராமலிங்கஅடிகளுங் காதற் கனிவு விளங்க மிகவும் அழகாகத் தெளித்துக்கூறுதல் காண்க.

தன்னைப் பின்னின்று இரந்த தலைவனுக்குத் தோழி இவ்வகையான தோ ரருமைக் குறியிடங் கூறிப் பகல் வருமாறு செய்து, பின்பு தலைவியிடம் வந்து அவளை அந்நேரத்திற் 'புனத்தின்கட்போய் ஊசலாடி

---

* திருப்புள்ளமங்கை, ௧. †சிலப்பதிகாரம், கானல்வரி, ௩௫.

‡ ஆடையில் - ஆடுகையில், அதாவது விளையாடுகையில்.

§ திருவருட்பா - ௬, அருள்விளக்க மாலை, ௨.

அருவியேற்று விளையாடுவேம், போதுவாயாக' வென்றழைத்து ஆயத்தோடுங் கூட்டிக் கொண்டு ஆடிடம் படர்ந்து செல்வாள். சென்று, தம்மோடு உடன்சூழ்ந்து வந்த ஆயமகளிரையெல்லாந் தினைகாக்குமாறு ஏவித், 'தலைவியும் யானுந் திடுமெனவந்து உங்கள் காவற் செவ்வியினைக் கண்டிடுவோமாதலின், நீவிரெல்லாம் உங்கள் காவலிற் சிறிதும் பிழைத்தலாகாதென்று தம்மோடு உடனும் பின்னும் பொழிலிடம் வராதவாறு அவர்களைக்காவலிலேயே கண்ணுங்கருத்துமாயிருப்ப உரைத்துநிறுத்தி, 'யாம்போய் மயிலாடல் காண்பே' மெனத் தலைவியைப் பொழிலடுவண் குறியிடத்துக் கொண்டுசேறும். தோழி தலைவன் வரவு கண்டதும் 'நீ இவ்விடத்திலேயே இரு; யான்போய் நின்குழற்குப் பூக்கொண்டு வருவேன்; அவ்விடம் வேய்கள் முத்துதிர்தலான் நின்மெல்லடிக்கு ஆகா'தென்று கூறித் தலைவியை அவ் விடத்துய்த்து நீங்குவள். ஈதிங்ஙனந் திருக்கோவையாரிற் கூறப்பட்டதாக, இறையனாரகப்பொருள், 'அவ்விடம் தெய்வமுடைத்து; நின்னால் வரப்படாது' என்று கூறித் தலைவியைத் தோழி இடத்துய்த்து நீங்குமென்று கூறுகின்றது. தோழி நீங்கியதும் அங்குத் தனித்து நின்று எழில் காட்டுந் தலைவியை தலைவன் அண்மி எதிர்ப்பட்டு ஆரா மகிழ்ச்சியிற் றோய்ந்து அவளை மருங்கணையப் பார்ப்பான். இக்கூட்டந் தலைவனுக்கு நான்காங்கூட்ட மாயினும் ஈங்குந் தலைவியின் குறிப்பறியாது மருங்கணைதல் முறையாகாமையின், அவள் குறிப்பினை அறியும் பொருட்டு அவளை உவந்து கூறுவான். இக்கூற்றுத் திருக்கோவையில், 'இப்பளிங்குப் பாறையை மாசுணப் பள்ளியாகவும், என்னைத் திருமாலாகவும் நினைந்தோ நீ இப் பொழிற்கண் வந்து நின்றது' என்றும், திருக்குறளில்,

"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை"*

என்றுங் காணப்படும்.

தலைவனுக்கு இப்பகற்குறிக்கூட்டம் நான்காங் கூட்டமாதல், தலைவனது குறையைத் தோழி தலைவிக்குக் கூறிப் பகற்குறிக்கு அழைக்கும்பொழுது அவள் நாண் மிகுதியால் உடம்படாது நின்றக்கால், 'நீ உன் தலைவனோடு இதற்குமுன் மூன்றுமுறை புணர்ந்திருக்கு முண்மை எற்குத் தெரியு'மென்று குறிப்பானுணர்த்தி அவளை நாண் களைந்து உடம்படுவிக்கின்றமை கொண்டு தெளியப்படும். இதனைக்

"குறைந்தவட் படரினு மறைந்தவ ளருகத்
தன்னொடு மவளொடு முதன்மூன் றளைஇப்
பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும்"†

என்று ஆசிரியர் தொல்காப்பியனார் பின்னோரிடத்திற் றெளியக் கூறுவர். முதன் மூன்று கூட்டமென்பது இயற்கைப்புணர்ச்சியும், பாங்கன் வாயிலாய்ப் பெற்ற இடந்தலைப்பாடும், தோழியை மதியுடம்படுத்தற்குச் சென்றபொழுது, அவள் தலைவன் தலைவியர்தங் குறிப்புணர்ந்து

* திருக், ௧௧௧௫. † தொல், களவு, ௨௩.

கொண்டு அவர் தமக்குட் புணர்ச்சியுண்மை நிகழ்ச்சியினை நாண நாட்டத்தின் குறிப்பினால் அறிதல்வேண்டித் தலைவியை நோக்கி நீ போய்ச் சுனையாடிவாவென, அவளும் போய் அப்போது தன் தலைவனுடன் தலைப்பெய்துவந்த கூட்டமுமாகும். இம்மூன்றினையும் அடுத்ததே இப் பகற்குறிக் கூட்டமாம் தலைவன் தோழியை மதியுடம்படுக்கச் சென்ற போது, தலைவி அவனோடு தலைப்பெய்து வந்த உண்மை,

'நீபோய்ச் சுனையாடிவாவென, அவளும் அதற்கிசைந்து
போய் அவனோடு தலைப்பெய்துவர, அக்குறியறிந்து
அவளை வரையணங்காகப் புனைந்து வேறுபடுத்துக் கூறல்'*

'வேறுபடுத்தக் கூற நாணல் கண்டு,சுனையாடினால் இவ்வாறு அழிந்தழியாத குங்குமமும் அளகந்தப்பிய தாதும் இந்நிறமுந் தருமாயின் யானுஞ் சுனையாடிக் காண்பேனெனத் தோழி தலைமகளோடு நகையாடா நிற்றல்'†

'சுனையாடல் கூறி நகையாடா நின்ற தோழி, அதுகிடக்க நீயாடிய அப்பெரிய சுனைதான் கண்சிவப்ப வாய்விளர்ப்ப அளிதொடரும் வரைமலரைச் சூட்டவற்றோ சொல்வாயாக வெனப் புணர்ச்சி உரையா நிற்றல்'‡

என்று ஆசிரியர் பேராசிரியர் திருக்கோவையாரிற் கூறும் விளக்க உரைகளால் நன்கு துணியப்படும்.

இனி,உவந்து கூறிய தலைவனது உவப்புரைகட்கு நாணித் தலைவி கண் புதைத்து ஒரு கொடியினொதுங்கி ஒல்குதலும், இவட்கேதோ இடையூறுற்றதென் றெண்ணினாற்போல் மேற்காட்டி, மற்றவ் விடையூற்றினைப் பரிந்து களைதற்கு அருகே செல்வதுபோற் பதறிச்சென்று, தலைமகன் அவள் தோண்மரீஇ நலந்துய்ப்பன். அவட்கும் அதுவாயிலாக நாண் கழன்று வேட்கை வெளிப்பட அந்நிலையினின்று அவன் நலந் துய்ப்பள். இங்ஙனம் மருங்கணைந்து இம்மருங்கணைதலால் விளைந்த தலைவியின் வேறுபாட்டுக் கோலத்தைத் தலைவன் திருத்தி முன் தோழி செய்து வைத்ததுபோலவே செய்து, 'இவ்வாறு நாம் பகற்குறியிற் றலைப்பட்டது நின்தோழி செய்த கோலமேயாகு மாதலால், அதுபற்றி நீ ஏதும் வருந்தாதே' யென்று பாங்கியறிந்தமை விளக்கிப் பாங்கியறிவுரைத்தும், 'இனி நமக்கொரு குறைவில்லை'யென உண்மகிழ்ந்துரைத்தும் அவளை ஆயத்துய்த்து நீங்கி நிற்பான்.

பின்பு தலைவி பூக்கொய்து நின்றாளாக, அச்செவ்விபார்த்துப் 'பூக்கொணர்ந்தே'னெனத் தோழி வந்து கூடி அவளை ஆடிடம் புகுத்தி ஆயத்தொடு சேர்த்துவிட்டுத் தலைவன்பால் வந்து, 'இன்றிங்கிருந்து யாங்களுண்ணுங் கிழங்கையுந் தேனையும் நீங்களு மருந்தி நாளை போகலா'மென்று உலகியல் முறைப்படி அவனைத் தனிகண் டுரைப்பள்.

இனித் தலைவனோடு தோழிக்கு இங்குச் சில உரையாடல்கள் நிகழும். அதாவது இனியும் இவ்வாறெல்லாங் களவிலேயே வந்து

* திருச்சிற், கூஅ † கூகூ ‡ எம

தலைவியைக் கூடும் வழக்கத்தை விடுத்து விரைந்து மணஞ்செய்து கொள்ளல்வேண்டுமென்று தலைவனை அவள் வேண்டிக் கொள்வதாகும். முன்பெல்லாந் தலைவன் தோழியைக் குறையிரந்தானாக, பகற் குறிப்புணர்ச்சியின் பின் தோழி தலைவனைக் குறையிரப்பாளாயினள். இஃது உலகியல் வழக்கமுமாம்.

“புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற் கண்ணும்”*

என்று தோழி தலைவனைப் புணர்ச்சிப் பின் வணங்கி வேண்டிக்கொள்ளு முறையினைத் ‘தொல்காப்பியனாருங் கூறினார். இவ்வாறு மணஞ்செய்து கொள்ளுமாறு கேட்டலை, ‘வரைவுகடாவுத’ லென்பார் அகப்பொருளாசிரியன்மார். இவ்வரைவுகடாவுத லென்பது பற்பல ஏதுக்கள் காட்டிக் கடாவப்படுதலின், அது பலவாம்.

தலைமகட்குப் பருவம் வந்து நாள் நீண்டமையின் இனியும் மணஞ்செய்து கொள்ளாது களவின் வருதல் ஆகாதென்று முதலிற் பருவங்கூறி வரைவு விலக்துவள். அஃதறிந்த தலைமகன் தலைவியை மிக்குப் புகழ்ந்து, அவளுடைய செம்மையியல்புகட்கு நாள் நீளலால் ஏதும் இழுக்கில்லையென்று வரைவுடம்படாது மிகுத்துக் கூறினானாக, ‘எங்கள் தாய்தந்தையர் கானவர், யாங்களும் புனங்காப்போஞ் சிலர், நீங்கள் வரைவு வேண்டீர்களாயின் எங்களைப் புனைந்து கூறல் வேண்டா’மென்று உண்மைகூறி வரைவு கடாதலும், ‘நீங்கள் விரைவில் வரைந்துகொள்ளவில்லை யென்று தலைவி வருந்துகின்றாள்; வரைவென்று சொன்னால் நீங்கள் வருந்துகின்றீர்கள்; உங்களிருவர்க்குமிடையே நின்று யான் வருந்துகின்றே’னென்று தன் வருத்தங்கூறி வரைவுகடர்தலும், ‘எங்கள் தாய்மார் இவட்குப் பருவம் வந்து நாளாயினமையின் மற்றதற்கஞ்சி இனி யார்வந்து கேட்டாலும் ஏதும் மறுத்துரையாமலே மணஞ்செய்து கொடுத்துவிடல் வேண்டுமென நினைக்கின்றார்க’ ளென்று தாயச்சங்கூறி வரைவுகடாதலும், ‘நேற்றே எம் தாய்மார் தலைவியின் முதிர்பருவ நிலையினை உற்றுநோக்கி இனிமேல் மலைப்பக்கஞ் சென்று விளையாடல் வேண்டாமென்று கூறினாராதலின், ஒருகால் எங்களை இல்லத்திலேயே செறித்து நிறுத்திவிட்டாலும் நிறுத்திவிடுவ’ரென்று இற்செறிவறிவித்து வரைவுகடாதலும், ‘எங்களுறவிற் சிற்சிலருந் தலைவியை மகட்பேச நினைத்திருக்கின்றார்க’ ளென்று தமர்நினை வுரைத்து வரைவுகடாதலும், ‘நீங்கள் திருமண வேற்பாடுகளெல்லாஞ் செய்துகொண்டு வரைதற்கு வருவீர்களாயின், எங்கள் தமர்களும் மிக்க அன்போடு உங்களை எதிர்கொள்வார்க’ளென்று எதிர்கோள் கூறி வரைவுகடாதலுஞ் செய்வள்.

இனி இம்மகளிரிருப்பது முல்லை நிலமாயின், ‘எங்கள் ஐயன்மார் தலைவியின் பருவ முதிர்ச்சி கண்டு விடையினைத் தூண்டிவிட்டனர்; இனி யாது நிகழுமோவறிகிலே’னென்று ஏறுகோள் கூறித்தோழி வரைவு கடாவுவள். ஏறு தழுவி அதனை அடக்கிடுவானுக்குத் தலைவியை மணஞ்செய்து கொடுப்பது முல்லை நிலத்தார்க்கு மரபு. இதனைப்

---

* தொல், கள, ௨௩

"படையார் கருங்கண்ணி வண்ணப்ப யோதரப் பாரமுநுண்
ணிடையார் மெலிவுங்கண் டண்டர்க ளீர்முல்லை வேலியெம்மூர்
விடையார் மருப்புத் திருத்திவிட் டார்"*

என்னுந் திருக்கோவை யுரையிற் கண்டுகொள்க.

இன்னும், 'அயலவர் நாளைக்குத் தலைவியைப் பொன்புனைந்து மணமுடித்துக் கொள்வார்களாமே; ஆ! இதற்கு வினையேன் என் செய்வேன்' என்று தலைவன் முன்பாகவே தனக்குத் தானே நோவதுபோல முன்னிலைப் புறமொழியாய் அயலுரை யுரைத்து வரைவு கடாதலு முண்டு. மேலுந் தலைவியுந் தோழியுமாக விருக்கும்பொழுது தலைமகன் அங்கொரு பக்கத்து மறைந்து நின்றனனாக, அவன் கேட்கு மாறு ஆ, 'தினைப்புனங் கொய்யப்படுமென்று இவ்வேங்கை மரமும் ஒரு குறி காட்டுகின்றது. இனி நமக்கு இத்தினைப்புன விளை யாட்டுக்கூட இல்லை' என்னும் உரையினால் தோழி தலைவிபாலுரைப் பதுபோற் காட்டித் தலைவன் எவ்வாறுதான் இனிக் கூடுவனோ வென்னுங் கருத்துத்தேற்றித் தினைமுதிர் வுரைத்து வரைவுகடாதலும், பின்பு தலைவன்பா லெதிர்ப்பட்டு, 'இனி எங்கட்குத் தினைப்புனங் காவ லில்லையாதலின் நீங்கள் இனிப் பகல் வரல்வேண்டாமென்று பகல்வரல் விலக்கி வரைவுகடாதலும், இங்ஙனங் கடாயவள் மறைந்து நின்று தினை யோடு வெறுத்துக் கூறுவதுபோலத் 'தலைவனை எதிர்ப்படற்பொருட்டு இத்தினையை வித்தி விளைத்துக் காத்தேமாக, இஃதெமக்குத் தீதே புரி கின்ற'தென்று தினையோடு வெறுத்து வரைவுகடாதலும், 'வேங்கை மர மொன்று இங்கு நின்று இங்ஙனமுங் குறிகாட்டி எங்கட்குக் கேடு சூழுமோ; இஃது அரும்பெடுக்கும் பொழுதே இதனை அரும்பறக் கொய்யாதுபோனோமே' யென்று வேங்கையொடு வெறுத்து வரைவு கடாதலும், 'இனித் தலைவன் இங்கு வந்து கூடுதற்கு என் செய்வானோ' வென்று இரக்கமுற்று வரைவுகடாதலும் உண்டு.

தினைப்புனங்கொய்த பிறகு, 'இங்ஙனம் அது கொய்யப்பட்டமை யால் இனியேனும் நீங்கள் வரைந்துகொள்ளல் நன்று; யாங்கள் உங்கட்கு அறிவு சொல்கின்றோமில்லை'யென்று நொய்தலை கூறி வரைவுகடாவு வள். பின்னர் மறைந்து நின்று அவ்விடத்தின் இயல்பையும், அங்குறையுங் கிளி முதலான புட்களின் தொடர்பையும் உன்னி, அதன்வாயிலாகத் தலை வன்றன் கூட்டுறவுப் பயனையும் நினைத்தாற்போல, 'ஆ! நங்காதலர் நாமிங் கில்லாதபோதும் வந்து நம்மைத் தேடி நிற்பார் கொல்லோ'வென்று அவனைப் பிரிவருமை கூறி வரைவுகடாதலோடு, தாம் அங்கு நின்றும் போம்போது மயில்களை நோக்கி, 'நாங்கள் போகின்றோம், இப்புனத் தொருவர் எங்களைத் தேடிவந்தால், அன்பில்லார் போலப் பிரிதற்கும் பிரிந்து ஆற்றுதற்குந் துணிந்து போனதாக எங்கள் வன்னெஞ்சஞ் சொல்லுமின்' என்றிரங்கி மயிலோடு கூறி வரைவுகடாதலுஞ் செய்யா நிற்பள்.

இவ்வாறெல்லாந் தோழி மறைந்தும் எதிர்பட்டுந் தலைவனை வரை வுகடாவிக் கடைசியில் தலைமகளோடும் ஆயத்தோடும் அவண் விட்டுப்

---

*திருச்சிற், கஙஅ

பிரிந்து தன் ஊர் நோக்கிச் செல்வள். சென்றதும், தலைவன் பொழிலமைந்த அப்புனத்தகஞ் சென்று அது வறும்புனமாய்ப் பொலிவழிந்துநிற்பக் கண்டு, 'இது யாம் முன் பயின்று தலைவி நலந் துய்த்தவிடமன்றோ? ஆ! இன்றிது இருக்குமாறென்னே'யென்று நெஞ்சழிந்து தலைமகளைத் தேடி ஆற்றாளாய் இறுதியில் அவள் ஊரும் அதற்குச் செல்லும் ஆறும் அணித்தே வசதியாயிருப்பினும் இனி நம்மாற் செய்யலாவ தென்னவிருக்கின்றது என்று எண்ணி நொந்து, அவள் பதிநோக்கி வருந்திச் சோர்வுடையனாய்த் தன்னூர் செல்வான். இவன் வந்து புனங்கண்டதும், பதி நோக்கியதும் முறையே வறும்புனங் கண்டு வருந்தலென்றும், பதிநோக்கி வருந்த லென்றும் நூல்களிற் றுறை யுறுப்புகளாகக் கூறப்படும்.

இனி இவ்வாறெல்லாம் பலப்பலவாய்த் தோழி தலைவனை வரைவு கடாயது ஒரு நாளிலேயே நிகழ்வதன்று. பலநாட்களாய் இங்ஙனம் வரைகடாஅய் வருவள். அங்ஙனமாளுல் அத்தனைநாளுந் தலைமகன் அவட்கு எதிர்ப்படுவானோவெனின், பகற்குறிக்கண் இப்பொழுது தலைவியை எதிர்ப்பட்டதுபோலவே இனிப் பலமுறையும் எதிர்ப்பட்டு நலனுகர்தலும் உண்டென்னும் வழக்கம்,

"பகற்குறி தானே இகப்பினும் வரையார்"*

என்னும் இறையனாரகப்பொருணூற்பாவாலும்,

'ஒரு ஞான்று வேங்கைப் பொதும்பினுள் ஆம், ஒரு ஞான்று கோங்கம் பொதும்பினுள் ஆம் குறிஞ்சி நிலமாயின், ஒரு ஞான்று புன்னையங் கானலுள் ஆம், ஒரு ஞான்று கைதையங் கானலுள் ஆம் நெய்தனிலமாயின். இவ்வகை ஏனை நிலத்திற்கும் ஒக்குமாறு அறிந்து உரைக்க!

"பகற்குறிப் புணர்வுகள் பலவா கும்மே"

என்றாராகலின்'

என்னும் அதன் உரையாலும் பெறப்படுதலின், தோழி பலகாலுமாக வரைவுகடாவுவாளென்று கொள்கவென்பது. 'இனி இகப்பினும் வரையா'ரென்ற உம்மையால் ஒன்றிற்குமே லிகவாமல், ஒரு பகற்குறிப் புணர்ச்சி நிகழ்வதே பெரும்பான்மையும் வலிவுடைத்துமாகும். அங்ஙனங் கொள்வதாளுல் அவ்வொரு புணர்ச்சியின்கண் தோழி தலைவனை எவ்வெவ்வாறு வரைவுகடாதல் பொருந்துமோ அவ்வவ்வாறு வந்த வரைவுகடாதல்களே கொள்ளல் வேண்டும். இவ்வரைவுகடாதலில் தலைவன் மறைவாக நிற்பக் கடாவப் படுவனவெல்லாந் 'தலைவன் சிறைப்புறைத்தானாகத் தோழி இன்னவாறு கூறி வரைவுகடாவினாளென்று அகப்பொருணூல்கள் கூறுநிற்கும்.

இனி, வறும்புனங் கண்டு பதிநோக்கி வருந்திப் பிரிந்த தலைவன் பின்னுமத் தோழியைத் தலைப்பட்டு அவளுதவிகொண்டு தன் தலைவியை இராக்குறியிற் கூடியளாஅய் நலனுகர்வ னென்பது.

---

*இறைய, உ௰

குமரகுருபர அடிகள் திருவிழா

இது நாளது ஆண்டு வைகாசித் திங்கள் ௨௪ ம் நாள் (6—6—28) புதன்கிழமையன்று திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த சங்க ஆதரவில் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

அன்று மாலை 5-மணிக்குச் அடிகளின் திருவுருவப்படத்தை யானைமேல் வைத்து எடுபிடிகளுடன் திருநெல்வேலிக் குளத்தூர் ஜமீன்தார் கல்லூரி மாணவிகளும், தாயம்மையம்மாள் கல்லூரி மாணவிகளும் தேவாரம் ஓதி முன்செல்லப் பெருந்திரளான மக்கள் தெருவலம் வந்து கணபதி விலாசக் கொட்டகையைச் சேர்ந்தார்கள்.

அங்கே பின்னர், சென்னை அட்வகேட் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A. M.L., தலைமையின்கீழ், திருவாளர்களான S. K. வள்ளிநாயகம் பிள்ளையவர்களும், P. C. புன்னைவனநாத முதலியாரவர்களும், M. V. நெல்லையப்ப பிள்ளையவர்களும் அடிகளின் வரலாற்றையும், பெருமையையும்பற்றி இரண்டுமணிநேரம் பேசினார்கள். அதன்பின் தலைவரவர்கள் அடிகள் எழுதிய நூல்கள் பலவற்றிலும் செறிந்து கிடக்கின்ற நயங்களில் சிலவற்றைப்பற்றியும், தமிழ் மொழியின் சிறப்பினைப் பற்றியும் 1½-மணி நேரம் வரை கேட்டார்ப்பிணிக்குந் தகையவாய் மிகவுந் தெளிவாகப் பேசினார்கள். ஆயிர மக்களுக்குமேல் துவக்க முதல் முடிவுவரை குழுமியிருந்தார்கள். பிறகு கூட்டத்தினர் யாவரும் சைவ சித்தாந்த சங்க மேடைக்குச் சென்று அடிகள் திருவுருவத்திற்கு வழிபாடாற்றியதும் திருநீறும், சந்தனமும், சிற்றுண்டியும் அளிக்கப்பட்டன.

தலைவரவர்களின் விரிவுரையினை இவ்விதழிலேயே கண்டு கற்று மகிழ்க.

சைவ சித்தாந்த சங்கத்தார்.

மதிப்புரை

திருக்குற்றாலக் குறவஞ்சி யென்னுமொரு செய்யுணூல் எமது பார்வைக்கு வந்தது. அதனாசிரியர் திருக்குற்றாலத் தலபுராணமியற்றிய திரிகூடராசப்பன் கவிராய மூர்த்திகள்.

குறவஞ்சி யென்பது தலைவனை நாடிய தலைவிமாட்டுச் சென்று குறி கூறிப் பரிசு பெற்று வந்த குறத்தியின் செயல்களைப் பற்றிச் சிந்து முதலியன இடைவிராய பாவகைகள் கொண்டு நாடகத்தமிழிற் பாடப்படுவதாகும். அவ்வகையில் இக்குற்றாலக்குறவஞ்சி செழுந்தமிழ் நலங்களுஞ் செய்யுளழகுகளும் மலியப்பெற்றுச் சிறந்து விளங்குகின்றது. இதன்கட்காணப்படும் பொருளியற் சிறப்புகள் அறிதற்சிறப்பின.

இதற்கு மதுரைத் தமிழ்ச்சங்க 'வித்துவான்' திரு. மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் செய்த செவ்விய அரும்பதவுரை யொன்றுஞ்

சேர்க்கப்பட்டிருக்கின்றது. இதன்விலை ரூ. க. வேண்டுவோர், 'ராவ் சாகிப் திரு. K. S. கற்பகவிநாயகம் பிள்ளையவர்கள் B.A., போலீஸ் டிப்டி சூபரின்டெண்டு, மேலகரம், தென்காசி தாலுக்கா' என்பார்க்கு எழுதுக.

அனுமான் இராமதூதன் என்னும் பெயரினையுடைய உரை நூலொன்று அதனாசிரியர் திருவையாற்று வடமொழிக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. L. உலகநாத பிள்ளையவர்களால் எமக்கு அனுப்பப்பட்டது.

இதன்கண் அனுமானது வரலாறு இனிய சிறு சிறு செந்தமிழ்த் தொடர்களால் மிகவுந் தெளிவாக எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இன்றியமையாத இடங்களில் இராமாயணச் செய்யுட்கள் சில கற்பார்க்குச் சுவை பெருக்குமுறையில் எடுத்தமைக்கப்பட்டிருக்கின்றன.

உயர்தரப்பள்ளி மாணவர்க்கு இந்நூல் பாடமாக அமையுமாயின், அழகும் ஆற்றலும் ஒருங்கே கெழுமிய இனிய உரைநடை யெழுதுந் திறமுந் தமிழ் நலமும் பெற்றிடுவரென்பதில் ஐயமில்லை. இதன் விலை அணா ம. வேண்டுவோர் இதனாசிரியரவர்கட்கு எழுதுக.

அறுபத்து நான்கு திருவிளையாடல் இப் பெயர்கொண்டதொரு செய்யுள்நூல் எமது பார்வைக்கு வந்தது. அதன்கண் இறைவனுடைய அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு செய்யுளாக அறுபத்து நான்கு வகைச்செய்யுட்களால் யாக்கப்பட்டிருக்கின்றன. சொற்பொருட் சிறப்புகளுஞ் செய்யுள் நடையும் மிகவுந் திறம் வாய்ந்து திகழுகின்றன. ஒவ்வொரு பாவகையுந் தங்கட் பெய்து வைக்கப்பட்ட திருவிளையாடற் பொருட்சிறப்பிற் கேற்ப ஒத்தமைந்து நிற்பது ஊன்றிப் படித்துணர்ந்து மகிழற்பாலது. விலை அணா உ.

கடோரசித்தன் கதை இது Lord Lytton (லார்ட்லிட்டன்) என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'Death and Sisyphus' (காலனுஞ்சிசுபசும்) என்னும் நூலைத் தழுவி உரை நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இந்நூலால் அறிவின் பயன் இன்னதென்பதும், இறத்தல் என்பதே இல்லையானல் அப்போது மக்கள் இருக்கும் நிலை இவ்வாறுமென்பதும் நன்கு விளங்கும்.

எளிதான இனிய உரை நடையிலே எழுதப்பட்டிருப்பதால், இஃது பள்ளிமாணவர்கட்குப் பாடமாக வைத்தற்குரியதாகும். விலை அணா உ.

மேற்கூறிய இரண்டு நூல்களையும் ஆக்கியோர் திருவாளர் வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ. அவர்களாவர். வேண்டுவோர், 'வ. சு. சண்முகம் பிள்ளை, 292, லிங்கசெட்டி தெருவு, சென்னை' என்பார்க்கெழுதிப் பெற்றுக்கொள்க.

மாணிக்கவாசகர் குருவருள்பெற்றது